# ஈழநாதம்

Eelanatham வெள்ளிநாதம்

பக்கங்கள்:16 விலை:12

நாதம் 13 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 24 09 - 08 - 2002 வெள்ளிக்கிழமை ஓசை 172

லாலா சோப் கன்சாலின் சோப்

எமது வன்னி மண்ணில்
எல்லா இடத்திலும்
சகல கடைகளிலும்
விற்பனையாகின்றது.

ஒன்றின் விலை - 13.00



சந்திரிக்காவின் சதி
பக்கம் –06



வியாபாரமாகும் கல்வி::
பக்கம் –10



காதல்
பக்கம் –06





### அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜப்பானிய தூதுவர் சந்திப்பில்...

# வடக்கு - கிழக்கு புனரமைப்பிற்கு நேரடியாக உதவ ஜப்பான் ஆர்வம் கொண்டிருப்பதாக தெரிவிப்பு!



தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் செய்சிறோ ஒட்சுகா கடந்த புதனன்று கிளிநொச்சியில் உள்ள அரசியல்துறை நடுவப்பணியகத்தில் சந்தித்து பேச்சு நடத்தியமை தெரிந்ததே.

இரண்டு மணி நேரம் நீடித்த இப் பேச்சுக்களின்போது பல முக்கிய விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டது.

வடக்கு கிழக்கு புனரமைப்பு பற்றிய விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டதுடன் தற்சமயம் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலையில் வடக்கு கிழக்கின் புனர் நிர்மாணப்பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி சுட்டிக்காட்டப்பட்டது.

உத்தேச இடைக்கால சபை அமையும் பட்சத்தில் வடக்கு கிழக்கு புனரமைப்புக்கு விடுதலைப்புலிகளூடாக நேரடியாக நிதியுதவி வழங்குவதற்கு தாங்கள் ஆர்வம் கொண்டிருப்பதாக ஜப்பானியத் தூதுவர் தெரிவித்தார்.

நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சியின் முன்னேற்றம் குறித்து தூதுவர் தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்டபோது இலங்கை அரசு பேச்சுக்களை ஆரம்பிப்பதில் மெத்தனப்போக்கை கடைப்பிடிப்பதாகவும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க உடன்படிக்கையில் காணப்படும் அம்சங்களை முழுமையாக நிறைவேற்றுவதற்கு சிறிலங்காவுக்கு வெளிநாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

சிறிலங்கா அரசுக்கு பெருமளவாகப் பொருளா தாரம் மற்றும் தொழில் நுட்பரீதியில் உதவி வழங் கும் நாடுகளில் ஜப்பான் முதன்மை ஸ்தானத்தை வகிப்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானிய தூதரின் வன்னி விஜயமும் அரசியல்துறைப் பொறுப்பாளருடனான சந்திப்பும் இன்றைய நிலையில் முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகிறது.

அண்மைக்காலமாக உலக நாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள் தூதர்கள் போன்றோர் நேரடியாகவே விடுதலைப் புலிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டு பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

## அன்ரன் பாலசிங்கம் விதார் கெல்கிசன் சந்திப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இன்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கிசனை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இச் சந்திப்பில் சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது பற்றி கலந்துரையாடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## நிமலராஜன் கொலை சந்தேகநபர் கைது

யாழ்ப்பாண செய்தியாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான முக்கிய ஈ.பி.டி.பி. சந்தேக நபரான பாட்ஜா நேற்று மானிப்பாயில் வைத்து சிறிலங்கா பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## கீரிமலை சென்ற மக்கள் மீது படையினரின் கெடுபிடிகள்

(யாழ்ப்பாணம்)

ஆடி அமாவாசை தினமான நேற்று பிதிர்க்கடன் கழிக்க கீரிமலை நகுலேஸ்வரத்திற்கு சென்றிருந்த மக்கள் மீது சிறிலங்கா படையினர் கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த பதினொரு ஆண்டுகளின் பின்னர் புல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கு சென்று திரும்பியுள்ளனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் உள்ளதை பயன்படுத்தி தமது சமயக்கடமையை செய்ய சென்றிருந்த சிறிலங்கா படையினர் தெல்லிப்பளை பகுதியிலும் இளவாலை பகுதியிலும் உடல் பரிசோதனைக்குட்படுத்தியுள்ளனர். இதனால் அங்கு சென்று திரும்பிய மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி

## காலவதியாகும் காலக்கெடுக்கள்

முதலில் மே மாதம் நடக்குமென்றார்கள் பின்னர் ஜூனில் நடக்குமென்றார்கள் ஜூலையில் நடக்குமென்றார்கள், ஒகஸ்டில் நடக்குமென்று உறுதி கூறினார்கள்...

இப்போது ஒரேயடியாக நவம்பரில் நடக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்... சமாதானப் பேச்சை ஆரம்பிக்க அரசு கூறும் கால அட்டவணைகள் ஒவ்வொன்றாகக் காலமாகிக்கொண்டே போகின்றது.

ஒவ்வொரு புதிய கால நிர்ணயம் பற்றிய அறிவித்தல் கூறப்படும்போதும் ஒவ்வொரு காரணமும் காலதாமதத்திற்கான விளக்கமாக அரசால் முன்வைக்கப்பட்டும் வருகின்றது.

அந்த விளக்கம் அவ்வப்போது சரியானதுபோன்று தெரிந்தாலும் கூட உண்மையில் காலதாமதத்திற்கான அவர்களின் காரணங்கள் முழுக்க முழுக்க சரியானவையல்ல.

பேச்சு வார்த்தைக்கான காலவரையறை குறித்து முதலில் வலியுறுத்தத் தொடங்கிய அரசு இப்போது காலவரையறையற்று காலதாமதப்படுத்திக் கொண்டே போகின்றது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைக்கான அவர்களின் நிலைப்பாடும் உறுதியும் ஆரம்பம் முதல் இன்றுவரை ஒரே தன்மையைத் தெளிவாக வெளிக்காட்டுவதாகவே இருந்துவருவது வெளிப்படையான விடயமாகும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான போது எந்த நிலைப்பாட்டில் அவர்கள் தம்மை வெளிப்படுத்திக் கொண்டார்களோ அந்த நிலைப்பாட்டை இன்னமும் கொண்டவர்களாகவே உள்ளனர்

புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட சில முக்கிய அம்சங்களை அரச தரப்பு இன்னமும் அதற்கென வகுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றாமல் அல்லது நிறைவேற்ற இயலாமல் இருப்பதே பேச்சுவார்த்தைகளை அரசு பின்போட்டு வருவதற்கான பிரதான காரணமாகும்.

அரசு எதிர்க்கட்சிகள், படைத்தரப்பினர் இவர்களிடையேயான புரிந்துணர்வு என்பது உறுதியற்ற நிலையில் சமாதானம் தொடர்பான பிரக்ஞைபூர்வமான தெளிவின்மை மற்றும் நம்பிக்கையற்ற நிலை தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

இன ரீதியிலான முரண்பாடுகளையும், போரையும் மட்டுமே தமது அரசியல் நடவடிக்கைகளுக்கான மூலாதார கோட்பாடுகளாக வகுத்துக் கொண்டவர்களான சிறிலங்காவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளிடையே சமாதானம் தொடர்பான ஒருங்கிணைந்த கருத்தியற் சிந்தனை உருவாகும் என்பது நம்பிக்கையற்ற விடயமே.

கடந்த ஐந்து தசாப்தங்களாக சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கெதிரான 'போரை' வலுப்படுத்தி அதன் மூலம் கிடைக்கும் வெற்றிகளை தமிழ் மக்களின் இரத்தத்தைக்கொண்டே தமது அரசியல் வீர வரலாறாக எழுதிக்கொள்ள முனைந்த பேரினவாதக் கட்சிகள் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும், தமிழ் மக்களின் பிரச்சினைகளை நியாயபூர்வமாக தீர்க்கும் நடவடிக்கையில் ஒன்றிணைந்து முனைப்புடன் செயற்பட மனப்பூர்வமாக வருவார்கள் என நம்புவது கஷ்டமே.

ஆனாலும், அதலபாதாளத்துக்கு போய்விட்ட சிறிலங்காவின் பொருளாதாரம் பேரினவாத ஆட்சியாளரை சமாதானத்தின் அவசியம் குறித்து ஆழமாக சிந்திக்க இடம் கொடுக்காவிட்டாலும், வேகமாக பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதன் வெளிப்பாடே இன்றைய சமாதான முன்னெடுப்புக்களாகும்.

விரும்பியோ விரும்பாமலோ ஆளும் ரணில் அரசு சமாதானத்தை பற்றிய தனது நகர்வுகளை முழுமூச்சாக அதீதி வீச்சுடன் ஆரம்பிக்கப்படவேண்டிய இக்கட்டான நிலை அது பதவியேற்றவுடன் ஏற்பட்டது ஒரு வரலாற்று அழுத்தத்தின் எதிரொலியேயாகும்.

இதை பேரினவாதத்தை புறந்தள்ளிய சமாதான நகர்வு என்று கூறிவிட முடியாது. ஆனால் காலம் காலமாக விஷமேற்றி வளர்க்கப்பட்ட பேரினவாத சிங்கள பௌத்த தலைமைகளும், சிந்தனையாளர்களும் சமாதானம் குறித்த பிரக்ஞையற்றவர்களாகவே தம்மை இன்னமும் நிலைநிறுத்திக் கொண்டுள்ள சூழலில் தற்காலிகமான சமாதானத்தைக்கூட அரசால் ஏற்படுத்திப் பாதுகாக்க முடியாததாகவே உள்ளது.

அதன் வெளிப்பாடே பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான காலங் கடத்தல் நடவடிக்கைகளாகும். சந்திரிகா சமாதானத்தை விரும்பியவரல்ல... விரும்பியவர் போல் பாவனை செய்து நடித்தவர். அப்படித்தான் ஒருவேளை விரும்பினாலும் கூட அந்தச் சமாதானம் ரணிலின் தலைமையில் ஏற்பட்டுவிடக் கூடாதென்பதில் மிகவும் பிடிவாதமாகவே உள்ளவர்.

சந்திரிகா வில்லுப்பாட்டுக் கோஷ்டியில் பிற்பாட்டுக்காரராக குழம்பிக் கோமாளித்தனம் பண்ணுபவர்களாக அவருடன் இணைந்து நிற்கும் ஜே.வி.பி.யினர் இப்போது தங்களை அதிதீவிர பௌத்த சிங்கள தேசிய வாதிகளாக அத்தகையோரின் ரட்சர்களாக இனங்காட்ட முனைந்துள்ளனர்.

இவர்களின் புதிய கூட்டு ரணிலின் திட்டமிட்ட சமாதான நகர்வுகள் முன்னெடுக்கப்படாதவாறு மிகக் கவனமாக செயற்பட்டு வருகின்றது.

இதுவே ரணிலுக்கு பெரிய தலைவலியைக் கொடுத்து வரும் விடயமாகும். இந்தக் குழுவை அவர் சமாளிப்பதும், மிகக் கஷ்டமானதாகும். நிறைவேற்று அதிகார வலுக்கொண்ட சந்திரிகாவின் தலைமையிலான அந்த அணியினர் அந்த அதிகார வலுவினைக் காட்டியே ரணிலை அச்சுறுத்தி வருகின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தையை தாமதிக்க வைத்து அது ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே இன்றைய ரணிலின் ஆட்சியினைக் காலைக்கும் சதி முயற்சியுட்பட பல்வேறு குயுக்தி நடவடிக்கைகளை, பதவி ஆசையும், அதிகாரவெறியும் தலைக்கேறிய நிலையில் பிரளயக் கூத்தாடத் தொடங்கியுள்ள சந்திரிகா மேற்கொள்ள தீவிரம் காட்டி நிற்கையில்..

ரணில் தன்னைக் காப்பாற்ற நினைப்பாரா? சமாதானத்தின் மூலம் நாட்டைக் காப்பாற்ற முனைவாரா? ஒரு, சிறிலங்காவின் பாரம்பரிய அரசியல்வாதி என்ற வகையில் தன்னையும் தனது ஆட்சியையுமே பாதுகாக்க முனைவார்.

இந்த நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான - புரிந்துணர்வு உடன்பாட்டின் விதிமுறைகளை அவரால் முழுமையாக, உடனடியாக அந்தந்த வரையறைக்குட்பட்ட காலப்பகுதிக்குள் நிறைவேற்றுவது அவரால் முடியாத காரியமாக இருக்கவேபோகிறது.......

எனவே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கான கால நிர்ணயமும் வரையறையற்று மாறிக்கொண்டுதான் இருக்கும்.

இத்தகைய சிறிலங்காவின் அரசியல் பாரம்பரியத்திற்குள் இருந்து தான் 'சமாதானம்' மூழ்கடிக்க வேண்டிய அவசியமும் இருக்கிறது. அந்த முகிழ்ப்புக்கான முனைப்பை முன்னெடுக்கவேண்டிய பொறுப்பு சிங்கள அரசியல்வாதிகளிடம் தான் பெருமளவில் தங்கியுள்ளது. •

பாராளுமன்றத்தை கலைப்பது தொடர்பாக

# சனாதிபதிக்குள்ள அதிகாரத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசு முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் கலைப்பது சம்பந்தமாக சனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களை கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் யாப்பில் சில விதிகளை சேர்த்துக்கொள்வது என அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்த யோசனைக்கு ஆதரவு கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கடிதத்திற்கு சனாதிபதியிடம் இருந்து தாமதம் இல்லாமல் அரசு பதிலை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ள பீரிஸ் சனாதிபதி இந்த யோசனையை நிராகரிக்கும் பட்சத்தில் அரசுக்கு உள்ள ஒரேயொரு மாற்றுவழி மீண்டும் தேர்தலை நடத்துவது தான் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு இன்று ஸ்திரநிலை தேவைப்படுகின்றது. சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்வதற்கு அது அவசியமாகும்.

தற்போது மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமே அதிகாரத்தில் உள்ளது. அதற்கே பெரும்பான்மை மக்களின் ஆதரவு உள்ளது. எனவே வெளியே உள்ள ஒரு நபரின் சர்வாதிகாரமான முடிவின் மூலம் ஒரு சனநாயக அரசாங்கம் கலைக்கப்படுமானால் அது சனநாயக விரோத செயலாக இருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பொதுத்தேர்தல் நடந்தால் பேச்சுவார்த்தை தாமதிக்கும்

**-அமைச்சர் டிரோன் பேர்னாண்டோ -**

பொதுத்தேர்தல் ஒன்று நடாத்தப் படுமானால் அது சமாதான பேச்சுவார்த்தையை தாமதம் அடையச் செய்யும் என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை அடுத்த மாதம் தாய்லாந்தில் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பணி தொடர்கிறது

**-அமைச்சர் பீரிஸ்**

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதாக பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சிறிலங்காவின் பொருளாதார மீள் கட்டமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக அமைந்ததை அடுத்தே இந்த நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், விரைவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதாகவும் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார்.

## அவதானிப்புக்குழு பெற்றுள்ள யுத்த நிறுத்த மீறல்கள் விபரம் பாராளுமன்றில் தெரிவிக்கப்படும்

யுத்த நிறுத்த மீறல் தொடர்பாக அவதானிப்பு குழுபெற்றுள்ள குறைப்பாடுகள் பற்றிய விபரங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்போவதாக சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில் நடைமுறைச் சிக்கல் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நிமால் ரட்நாயக்கரின் கேள்வியொன்றிற்கு பதிலளிக்கும் போது பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இருந்தாலும் உண்மையை மறைக்கும் நோக்கம் அரசாங்கத்துக்கோ, அவதானிப்பு குழுவுக்கோ கிடையாது என்று குறிப்பிட்டார். இப் பிரச்சினைகள் தொடர்பாக ஜே.வி.பி. தொடர்ச்சியாக கேள்வி எழுப்பிக் கொண்டிருந்ததால் பாராளுமன்றத்தில் விவாதம் சூடு பிடித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

## சிறுமி படுகாயம்

உழவு இயந்திரம் விபத்துக்குள்ளானதில் சிறுமி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுக்காலை பேராற்றில் இடம் பெற்றுள்ளது. வற்றாப்பளையைச் சேர்ந்த அந்தோனி விந்தா (வயது 13) என்பவர் இரு கால்களும் உடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டுள்ளார். (ஆ)

## சிறிலங்கா படையினரின் 500 துப்பாக்கிகள் மர்ம மறைவு

(கொழும்பு)

சிறிலங்காப் படைகளுக்குச் சொந்தமான ஐநூறு ரி.56 ரக துப்பாக்கிகள் மாயமாக மறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த இராணுவ நிலைகளிலிருந்து அவ்வப்போது இந்த துப்பாக்கிகள் மாயமாக மறைந்துள்ளதாக இதுவரை நடைபெற்ற விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இராணுவத்திலிருந்து இதுவரை 33 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளதுடன் அவர்களைக் கைது செய்வதற்காக துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு தப்பியோடியுள்ள படையினரே இந்த துப்பாக்கிகளையும் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் இராணுவப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

படையினர் திருடிச் சென்ற துப்பாக்கிகளை பாதாள உலகக் கோஷ்டியினருக்கு விற்பனை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த துப்பாக்கிகளுடன் சத்தம் கேட்காத வகையிலான விசேட துப்பாக்கிகளும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.




மக்களின் நிதானமான மறு சிந்தனை பொதுவாக தவறாய் இருப்பதில்லை ● ~ மார்ட்டின் வேன் ப்யூரன்

# பிரமுக அறிமுகம்



## உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க

ஐக்கிய தேசிய முன்னணி அரசில் மிகமிக முக்கிய பிரமுகர்களில் ஒருவரான ஜோன் அன்ரனி இம்மானுவேல் அமரதுங்க என்ற 'முழுநீளப்' பெயரைக் கொண்டவரான ஜோன் அமரதுங்க இந்த அரசின் உள்நாட்டலுவல்கள் அமைச்சராவார்.

இவரை உள்ளக அமைச்சர்- உள்துறை அமைச்சர் என்றும் அழைப்பர். S.T.F என அழைக்கப்படும் விசேட அதிரடிப்படையை உள்ளடக்கியதான பொலிஸ் திணைக்களம் இவரது நிர்வாகத்தின் கீழேயே செயற்பட்டு வருவதால் பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய முக்கிய அமைச்சராக இவர் விளங்குகிறார்.

கம்பஹா மாவட்டம் வத்தளை தேர்தல் தொகுதியில் இருந்து பாராளுமன்றத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு உறுப்பினரான இவர், அந்த மாவட்டத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளருமாவார்.

21.05.1940 இல் பிறந்த 62 வயதுடையவரான அமரதுங்க ஒரு திறமையான சட்டத்தரணியாவார்.

கொழும்பு டீ மஸ்நொட் கல்லூரி- அக்குவானஸ் கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவரான இவர் 1956இல் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரானார்.

1978இல் புதிய அரசியலமைப்பின் பிரகாரம் முதல் முதலில் பாராளுமன்ற உறுப்பினரான இவர் 1989இல் வெளிவிவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சரானார். 1990இல் மாகாணசபைகளுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்த இவர் 1993இல் உள்நாட்டு விவகாரம் மற்றும் மாகாண சபைகளுக்கான அமைச்சராகவும் பணியாற்றினார்.

உயர்ந்த தோற்றமுடைய தேசிய உடையையே அதிகம் அணியும் இவர் ஒரு கத்தோலிக்கராவார்.

1988-1991 காலப்பகுதியில் ஜனதா விமுக்தி பெரமுனவின் இரண்டாம் கிளர்ச்சி நடவடிக்கை காலகட்டத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகளுக்கென நியமிக்கப்பட்ட பட்டலந்த ஆணைக்குழுவின் முன் விசாரணை செய்யப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

இப்போது சமாதானம் பற்றி அதிகம் பேசும் இவர் புலிகள் வசம் சாம்- மற்றும் ஸ்ரிங்கர் ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் இருப்பதாக பாராளுமன்றத்தில் கூறியதுடன், அதனை முறியடிக்கும் எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்ட தாக்குதல் விமானங்களையே போர்க் களத்தில் பயன்படுத்த வேண்டும் என உரத்துக் குரல் எழுப்பியவர் நவீன ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளுக்கு கிடைக்காமல் செய்ய கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியவர்.

யாழ் குடாநாட்டில் பகலில் இராணுவ ஆட்சியும் இரவில் விடுதலைப்புலிகளின் ஆட்சியும் நடப்பதாக எச்சரித்தவர்.

இந்தியாவுடன் நல்ல உறவை பேணவேண்டும் என்ற கொள்கை உடையவர். தமிழ் நாட்டுடனான கடந்தகால அனுபவங்களை எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டும் அங்குள்ள அரசியல் நிலைமைகள் மற்றும் மாற்றங்கள் எவ்வாறான தாக்கங்களை இங்கு ஏற்படுத்தும் என்பதையும் கவனமாக அவதானித்து செயற்பட வேண்டும் என்று கூறுபவர்.

விசேட அதிரடிப்படையினரின் தொகையை அதிகரித்து அதன் பலத்தைப் பெருக்க வேண்டுமென்பதில் அதிக அக்கறையுடையவர்.

உள்துறை புலனாய்வுப் பணியகம் (Directorate of Internal Intelligence) இவரது கட்டுப்பாட்டின் கீழேயே இயங்குகிறது. இதுவே நாட்டின் பிரதான உள்நாட்டு புலனாய்வுச் செயற்பாடுகளுக்கான அமைப்பாகும். இதனை மேலும் வலுவுள்ளதாகவும் நவீனத்துவம் கொண்டதாகவும் மாற்ற வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறார்.

சமாதான நடவடிக்கைகளை வலுப்படுத்த, பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இருமடங்கு வலுப்படுத்த வேண்டும் எனக்கூறும் ஜோன் அமரதுங்க- 'ஆரம்பத்திலேயே இந்தியாவிடம் இராணுவ உதவியைக் கோரியிருந்தால் வடபோர் முனைச் சமரின் போது இவ்வளவு தொகையாக படையினரையும், முக்கிய தளங்களையும் இழந்திருக்கத் தேவையில்லை என அப்போதைய பொ.ஐ.முன்னணி அரசை கண்டித்தவர் என்பதை வைத்துக் கொண்டே அவரின் மறுமுகத்தை புரிந்து கொள்ள முடியாதா? என்ன?

- நிலாந்தன் -

# சமாதானத்தின் வழி

சமீபத்தில் ஆனையிறவில் நடந்த சம்பவம் இது. கண்டி நெடுஞ்சாலை வழியே முகமாலையிலிருந்து மல்லாவியை நோக்கி பயணிகள் மினிபஸ் வந்து கொண்டிருந்தது. எதிர்த் திசையில் ஒரு ஹைஏஸ் வான் தளம்பித் தளம்பி வந்து கொண்டிருப்பதை மினி பஸ்ஸின் சாரதி கண்டுவிட்டார். விபத்தைத் தவிர்க்க அவர் தன்னுடைய வாகனத்தை இயன்றமட்டும் வீதிக்கு வெளியே கொண்டுவர முயன்றிருக்கிறார். ஆனால் மினிவான் நேராக வந்து பஸ்சுடன் மோதிய பிறகே நின்றது. பரஸ்பரம் சேதம்.

பிறகு விசாரித்த போதுதான் தெரியவந்தது மினிவானின் சாரதி ஒரு சிங்களவர். வாகனமோடிய படியே நித்திரையாகி விட்டாராம். அதற்கு முதல்நாள் தான் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து சிங்களவரை தென்னிலங்கைக்கு ஏற்றிச் சென்றிருக்கிறார். அங்கே பயணிகளை இறக்கிய கையோடேயே மேலுமொரு தொகுதி சிங்களவரை ஏற்றிக்கொண்டு வர வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. எனவே உழைப்பைக் கைவிட விரும்பாத அவர் நித்திரையும் கொள்ளாது மறுமடியும் யாழ்ப்பாணம் வந்திருக்கிறார். வழியில் ஆனையிறவில் வாகனமோடிய படியே நித்திரையாகிவிட்டார்.

இது கண்டி வீதியில் தற்சமயம் நிகழ்ந்துகொண்டிருக்கும் விபத்துக்களிற்கு ஒரு வகை மாதிரி. இது போல பல விபத்துக்கள் வன்னிப்பெருநிலத்தில் இப்பொழுது அதிகம்

**படையினரின் முன்னாலேயே புலிகள் அரசியல் வேலை செய்வது என்பது முன்னெப்பொழுதும் காணப்பட்டிராத ஒன்று. இதில் புலிகளின் அரசியல் நியாயாதிக்கம் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பது என்பதே மெய்நிலை.**

விபத்துகள் நிகழும் ஒரு சாலையாக கண்டிவீதி மாறியிருக்கிறது.

சில மாதங்களிற்கு முன்பு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கண்டி நெடுஞ்சாலை திறக்கப்பட்டபோது அது சமாதானத்தின் குறியீடு என்றும் சமாதானச்சாலை என்றும் வர்ணிக்கப்பட்டது.

இன்றோ அது விபத்துக்களின் சாலையாக மாறிவிட்டது.

முன்பு சமாதான வீதியாக இருந்தது இப்பொழுது விபத்துக்களின் வீதியாக மாறியது என்பது ஏதோ ஒரு செய்தியை முன்னுணர்த்துவது போலிருக்கிறது.

அதாவது சமாதானத்தின் வழியிலும் விபத்துக்கள் நேரிடும் வாய்ப்புக்கள் உண்டு என்பதே.

கண்டி வீதியில் நிகழும் விபத்துக்கள் வேகம் கூடியதால் வருபவை. ஆனால் சமாதானத்தின் வழியில் நேரிடக்கூடிய விபத்துக்கள் வேகம் போதாமையால் வரக்கூடியவை.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி இன்றோடு 167 நாட்கள். ஆனால் விவகாரங்கள் மெதுமெதுவாகத்தான் நகர்கின்றன.

இயல்பாகவே ரணில் விக்கிரமசிங்க தீவிர வேகம் உடையவர் அல்ல என்றும் மெதுமெதுவாகத்தான் முன்னேறுபவர் என்றும் அவரைப் பற்றி தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

கார்ட்டூனிஸ்ருக்களுக்குச் சவாலாக விளங்கும் அவருடைய முகத்தில் விசேசமான அம்சங்கள் என்று எதுவுமில்லை. சிறிதளவுக்கு அவருடைய மேலுதட்டைத் தவிர.

ஆர்வம் குறைந்த ஆனால் ஆணவமில்லாத விழிகள், ஒருவித பற்றில்லாத துடிப்பற்ற நடை, கவர்ச்சியோ மிடுக்கோ இல்லாத குரல் இவற்றுடன் எளிமை சாந்தம் இலேசான மந்தத்தனம் இது தான் ரணிலின் படம்.

ஆனால் தனித்துவமான அல்லது அசாதாரணமான அம்சங்கள் எதையும் கொண்டிராத இம் மனிதர் முன்னைய ஜனாதிபதி ஜெயவர்த்தனவைப் போல ஒரு குள்ளநரி அல்லவென்றும் பிரேமதாஸவைப் போல பாதாள உலகப் பின்னணிகள் எதுவும் இல்லாதவரென்றும் சந்திரிகாவைப் போல அமைச்சர் சொக்ஸியின் சற்றே இழுவுண்ட வாயைப்போல தன் வாயை நெளித்துக்காட்டு மளவுக்கு கீழ்த்தரமான ஒரு நபர் அல்லவென்றும் பொதுவாக அவதானிகள் கூறுகிறார்கள்.



பதவிக்கு வந்த புதிதில்



தற்போது

முன்பு சந்திரிகா பதவிக்கு வந்தபோது அது மனித முகத்துடன் வந்த இனவாதம் என்று கூறப்பட்டது.

இப்பொழுது ரணிலையும் அதன் தொடர்ச்சியாக இருபத்தியோராம் நூற்றாண்டின் இனவாதத்துக்கு தலைமை தாங்கப் போகிறவர் என்று கூறுவது ஒருவிதத்தில் மிகைப் படுத்தப்பட்ட ஒரு எதிர்வு கூறலாயிருத்தல் கூடும்.

ஏனெனில் அதற்கு வேண்டிய சாதுரியம் குள்ளத்தனம் குரூரம் போன்றவை அவரிடம் குறைவு என்றே அவரைப்பற்றி நன்கு தெரிந்தவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இதெல்லாம் அவர் சமாதானத்தை எப்படி கையாளப் போகிறார் என்பதிலேயே தங்கியிருக்கிறது.

அண்மையில் அமெரிக்காவில் வூட்ரோ வில்சன் நிலையத்தில் அவர் பேசியபோது கூறியதுபோல ''செயற்பாடுகள் முன்னோக்கிச் செல்கின்றன'' என்பது உண்மைதான்.

ஆனால் வேகம் காணாது என்பதுதான் பிரச்சினை.

அண்மையில் அவருக்கு மிகவும் இணக்கமானவரும் அமைச்சருமாகிய மிலிந்த மொறகொட லண்டனில் விடுதலைப்புலிகளின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைக் கண்டு கதைத்திருக்கிறார்.

இது சமாதானத்தின் வழியில் காணப்படும் பிரகாசமான ஒரு சமிக்ஞை.

மற்றது புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் பொது இடங்களிலிருந்து படையினர் ஓரளவிற்கு விலகி நிற்பது.

இவை தவிர மேலுமொரு பிரகாசமான சமிக்ஞையும் தெரிகிறது. அதன்படி புலிகளின் கடலாதிக்க எல்லைகளை வரையறை செய்யும் சாத்தியக்கூறுகள் அதிகரித்து வருவது என்பது.

சமீபகாலங்களில் சமாதானத்தின் வழியில் காணப்படும் இத்தகைய நற்சகுணங்களை வைத்துப் பார்க்கும் போது இம்முறை சமாதானம் சீரியசானது போலவும் நிதானமானது போலவும் தோன்றுகிறது.

ஒரு நண்பர் கூறியது போல படையினரின் முன்னாலேயே புலிகள் அரசியல் வேலை செய்வது என்பது முன்னெப்பொழுதும் காணப்பட்டிராத ஒன்று. இதில் புலிகளின் அரசியல் நியாயாதிக்கம் ஏற்றுக்கொள்ளப் பட்டிருப்பது என்பதே மெய்நிலை.

இப்பத்தியில் ஏற்கனவே கூறப்பட்டது போல புரிந்துணர்வு உடன்படிக்கை புலிகளின் ஆட்சிப் புலத்தையும் அரசியல் நியாயாதிக்கத்தையும் ஒப்புக் கொண்டுவிட்டது.

இலங்கைத் தீவில் இரண்டு அதிகார மையங்கள் இருப்பதை புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்றுக் கொண்டுவிட்டது.

இது ஒரு உற்சாகமூட்டும் தொடக்கம். ஆனாலிதை அடுத்தடுத்த கட்டங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டும்.

ஜெகான் பெரேரா போன்ற பரவாயில்லாமல் எழுதும் விமர்சகர்கள் புலிகள் புரிந்துணர்வு உடன் படிக்கையை நூறு வீதமும் அமுல் செய்யக்கோருவது சற்றுத் தீவிரமான ஒரு நிலை என்று கூறுகிறார்கள். பதிலாக, ஆகக்கூடிய பட்ச அமுலாக்கம் என்ற நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்றும் கூறுகிறார்கள்.

ஆனால் யதார்த்தம் என்னவெனில் சிறுபான்மையினர் எப்பொழுதும் கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்களிற் கூடாகவே எதையும் பார்ப்பார்கள் என்பதே.

இது – மூத்த பத்திரிகையாளர் S.D. சிவநாயகம் கூறுவதுபோல புரிந்துணர்வு உடன்படிக்கைதான் வந்திருக்கிறதே தவிர தமிழர் – சிங்களவர் – முஸ்லிம்களுக் கிடையில் இன்னும் மெய்யான புரிந்துணர்வு வரவில்லை என்பதே.

இந்நிலையில் இலங்கைத் தீவின் சமாதான முயற்சிகளைக் கூர்ந்து கவனித்துவரும் சில விமர்சகர்கள் மூன்று தெரிவுகளே இப்போதைக்கு உண்டு என்று கூறுகிறார்கள்.

அதில் முதலாவது – சமாதானத்தை வளர்த்தெடுத்து ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பது.

இரண்டாவது – சமாதானத்தை முறித்துக்கொண்டு மறுபடியும் யுத்தத்திற்கு போவது.

மூன்றாவது – இப்போதிருக்கும் ''இயல்புநிலையை'' இயன்றவரை தொடர்ச்சியாகப் பேணுவது.

இவற்றில் இலங்கைத் தீவின் களயதார்த்தத்தைப் பொறுத்தவரை மூன்றாவது தெரிவுதான் உடனடிச் சாத்தியமானது என்றுமவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் இதற்கும் கூட முதலில் புரிந்துணர்வு உடன்படிக்கை முழுவதும் அமுல் செய்யப்பட வேண்டும்.

தவிர சில விமர்சகர்கள் கூறுவது போல சமாதானத்தைத் தவிர வேறு தெரிவுகளுக்குப் போக விரும்பாத ஒரு சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் முதலில் புரிந்துணர்வு உடன்படிக்கை முழுவதும் அமுல் செய்யப்படவேண்டும்.

இதை இன்னுமொரு விதமாகப் பார்க்கலாம். அதாவது சமாதானத்துக்கான மிக முக்கிய முன் நிபந்தனையாகவுள்ள பலமான ஒரு சிவில் சமூகத்தை கட்டியெழுப்புவதென்றால் அதற்கு முதலில் இயல்புவாழ்க்கை மீளக்கொண்டுவரப்பட வேண்டும்.

இயல்பு வாழ்க்கையை மீளக் கொண்டுவருவது என்றால் அதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை முழுவதும் நிறைவேற்றப்பட வேண்டும்.

எனவே எல்லாவற்றுக்கும் முதலில் புரிந்துணர்வு உடன் படிக்கை என்ற அத்திவாரம் பலமானதாகவும் எளிதில் பொறிந்து விடாததாகவும் போடப்பட வேண்டும்.

அதன்மீது இடைக்கால நிர்வாக அமைப்பு என்ற இரண்டாவது கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

என்றால் தான் சமாதானம் அதன் இயல்பான வளர்ச்சிகளுக்கூடாக முகிழ்ந்து மலரும்.

இல்லையேல் – இயல்பற்ற இயல்பினுள் மக்களை வைத்துக் கொண்டு சமாதானம் செய்ய முடியாது.

அதாவது படை வீடுகளின் நடுவே கட்டப்படும் சமாதானம் ஒரு நாள் அற்பகாரணங்களுக்காக பொறிந்து வீழ்ந்து விடும். ■

# இருபதாம் நூற்றாண்டு ஓவியக் கொள்கைகளில் கியூபிசம் (CUBISM)

கியூபிசம் என்னும் பாணியானது உருக்களைக் கேத்திர கணித உருக்களாக அதாவது சதுரங்கள், முக்கோணங்கள், கூம்புகள போன்ற உருக்களைப் பயன்படுத்தி ஓவியம் வரை வதாகும். இப்பாணியானது ஓவியத்தில் மட்டுமன்றிச் சிற்பத் திலும் செல்வாக்குச் செலுத்து கின்றது.

1907ஆம் ஆண்டு பாரிஸ் நகரில் நடாத்தப்பட்ட செசானின் ஓவியக் கண்காட்சியும் மற்றும் வான்கோவினது ஓவியக் கண்காட்சியும் பிக்காசோ மீது ஏற்படுத்திய தாக்கமே கியூபிச முறை தோன்றக் காரணமாயிற்று எனக் கூறப்படுகிறது. இம் முறையில் பிக்காசோ வரைந்த ஓவியமே "அவிக்நங்கையர்" என்ற புகழ்பெற்ற ஓவியமாகும்.

இக்கியூவிசம் என்ற பதத்திற்கு யுஅன்கிறீ என்பவர் "முற்றிலும் புதியதொரு வழியில் உலகைப் பிரதிபலிப்பதே கியூபிசம் எனக் கூறுகின்றார்.

ஒரு கியூபிஸ்ட் ஒரு பொருளை வரையும்பொழுது அதைக் கேத்திர கணித உருக்களின் தொகுப் பாகத்தான் காட்டுவானேயல்லாது சாதாரணமாக நாம் காணும் பொருளாக வரையமாட்டான். இதில் இருதளப்பரிமான சித்திரிப்பே முக்கியத்துவம் பெறுகிறது. ஆழம் முக்கியத்துவம் பெறுவதில்லை. இதனால் ஓவியத்தைப் பார்க்கும்பொழுது இரு பொருளகளுக்கும் இடை யேயான தூரம் சித்திரிக்கப்படாது எல்லாம் ஒரே தளத்தில் குவிக்கப்பட்டு ள்ளதைப் போன்று காட்சிதரும்.

சாதாரணமாக நாம் ஒரு பொருளை ஒரு கோணத்தில் இருந்துதான் காண்கின்றோம். ஆனால் கியூபிஸ்ட்டுக்களின் ஓவியங்கள் ஒரு பொருளைப் பல கோணங்களில் இருந்து பார்ப்பதன் தொகுப்பாகக் காட்டும் தன்மை கொண்டது. இதனை பிக்காசோவின் அவிக்நங்கையர் என்னும் ஓவியத்தில் காணமுடிகிறது.



பப்லோ பிக்காசோ

இவ்வோவியத்தில் வரும் இரண்டாம் மூன்றாம் பெண்களின் முகங்கள் முன்பக்கப் பார்வையில் (Frontal view) காட்டப்பட்டுள்ளன. ஆனால் மூக்குப்பக்கப்பார்வையில் (Profile view) காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான சித்திரிப்புக்களே கியூபிச ஓவியங்களில் அதிகம் காணப்படுகின்றது. ஓவியர் பிராக்ஸ்

கி. சுதேஸ்

என்பவர் கலை உண்மை யானதல்ல உண்மையை உணரச் செய்வதேயாகும். கலை எங்கு மறைந்துள்ளதெனக் காட்டுவதே எனது பணியாகும் எனக் குறிப்பிடுகின்றார். ஓவியன் வடிவம், வண்ணம் என்ற அடிப்படையிலேயே சித்திரிக்கின்றான். நாம் இயற்கை எவ்வாறு இருப்பதில்லை என்ற கருத்தையே ஓவியத்தினூடாக வெளிப்படுத்துகின்றோம் என கியூபிஸ்ட்டுக்கள் கூறுகின்றனர்.

பகுப்பாய்வு கியூபிசத்தில் பொருள் முக்கியம் அற்ற தாகின்றது. அதாவது பொருள்புறச் சித்திரிப்பு முக்கியமற்றதாகி விடுகிறது. நிறம்கூட தனது ஸ்தானத்தை உண்மையில் இழந்துள்ளது. அத்துடன் ஓவியப் பகைப்புலம் ஏறக்குறைய மறைந்துவிடுகிறது. ஓவியப் பொருளின் ஆய்வே முதன்மை பெறுகிறது. இதன் பல்கோண அகப்புற ஆய்வுகள் ஓவியப்பரப் பெங்கும் வியாபிக் கின்றது. ஓவியக்கருப் பொருள் ஆங்காங்கு காணப்படும் சில பகுதிகளை வைத்து இனங்காணப் படுகின்றது.

இங்கு ஓவியப்பொருள் முற்றாக மறைந்துவிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

கியூபிசத்தின் அடுத்தபடி வளர்ச்சியே கொலாச் ஒட்டுச் சித்திரங்களாகும். இதன் ஊடகங்களாக அச்சடிக்கப்பட்ட காகிதத் துண்டுகள் துணிவகைகள் நிறக்கடதாசிகள் மற்றும் பிளாஸ்ரிக் போன்ற கழிவுப் பொருட்களே பயன்படுத்தப் படுகின்றன. இப்பலவகைப் பொருட்கள் அவற்றின் நிறத்திற் கேற்பவும் அவை கொண்டிருக்கும் தன்மைக்கேற்பவும் பயன்படுத்தப் படுகின்றது.

கியூபிச ஓவியங்களில் காலம் வெளி பற்றிய கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டுள்ளது. உருவங்களைச் சிதைப்பதன் மூலம் ஓவியத்திற்கு புதிய உருவப் பரிமாணத்தை பெற கியூபிஸ்ட்டுக்கள் முயன்றுள்ளனர். கியூபிசம் என்பது ஒருகலைப்பாணி அல்ல. அதுவோர் அழகியல் நிலையே ஆகுமெனவும் இதனால் தற்கால சிந்தனையின் சகல அம்சங்களுடனும் தொடர்புடையதாக இருக்கின்றது என யுஅன்கிறீ குறிப்பிடுகின்றார். கலை இரசனையாளர்கள் காலப்போக்கில் இக்கியூபிசப் பாணியானது ஒரு நூலின் பக்கங்களைப் புரட்டாமலே நூல் முழுவதையும் வாசிப்பது போன்றதொரு உணர்வை ஏற்படுத்தப்படுவதாகப் பாராட்டி யுள்ளனர்.

மிகக்குறுகிய காலத்தில் மிகவிரைவாக வளர்ச்சிபெற்ற கியூபிஸ்ட் ஓவியப்பாணிக்குரிய மரபின் மூலத்தை அதாவது எங்கிருந்து பெறப்பட்டது என்பதை இனங்கண்டு கொள்வது இலகுவானது அல்ல. எனினும் ஆபிரிக்க நீக்ரோ கலையின் தாக்கம் கியூபிஸ்ட்டுக்களில் காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

தொடக்கக் காலப்பகுதியில் கியூபிசம் ஆருப ஓவியப் பாணியின் செல்வாக்குக் குட்பட்டதாகக் காணப்பட்டது. பிக்காசோ ஆரம்பத்தில் ஆருப பாணியிலான ஓவியங் களை வரைவதிலேயே அக்கறை கொண்டவராகக் காணப்பட்டார். இவரைப்போன்றே பிற கியூபிஸ்ட்



'ஜோர்ஜியஸ் பராக்'கின் கியூபிச ஓவியம்

முக்கியஸ் தர்களும் ஆருப ஓவியங்களை வரைந்துள்ளனர்.

இதனால் கியூபிஸ்ட் ஓவியங்கள் இடம்பெறும் உருவங்கள் புற உலகப்பொருட்களின் உருவத்தை அவ்வாறே பிரதிபலிக்காமையினால் உருவ அமைப்பையே அவர்கள் நிராகரிக்கின்றனர் எனக் கருத வேண்டியதாயிற்று. ஓவியங்கள புற உலகப் பொருட்களின் உருவத்தை அவ்வாறே பிரதிபலிக்காமையினால் உருவே அமைப்பையே அவர்கள் நிராகரிக் கின்றனர் எனக் கருதவேண்டிய தாயிற்று. ஓவியங்கள் புற உலகப் பொருட்களின் உருவத்தை அவ்வாறே பிரதிபலிக் காமையினால் உருவ அமைப்பையே அவர்கள் நிராகரிக்கின்றனர் எனக் கருதவேண் டியதாயிற்று. ஓவியங்கள் புற உலகின் பொருட்களைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்பது கியூபிஸ்ட்டுக்களின் இலட்சியமாக இருந்தது. அவ்வாறிருப்பினும் ஆருப ஓவியப்பாணியின் செல்வாக்கு கியூபிச ஓவியங் களில் உருவ மயக்கத்தை ஏற்படுத்தியது எனக்கூறமுடியும்.

கியூபிசத்தின் வரலாற்றில் இருகாலப்பகுதிகளை கலை வரலாற்றறிஞர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். 1907-1909 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கியூபிஸ்ட்டுக்கள் ஓவி யத்தில் பகுப்பாய்வு முறையினைக் கையாண்டனர் எனவும் அதன் பின்னரே தொகுப்பு முறையினைக் கையாண்டனர் எனவும் கூறப் படுகிறது. முதலாவது காலப் பகுதியில் எளிமை யான வடிவங்களில் கலப்புத் தோற்ற த்தைக் கியூபிஸ்ட் ஓவியங்கள் வெளிப்படுத்து கின்றன. இரண் டாவது காலத்தில் உருவ ஒழுங்கு பேணப்பட்டதுடன் ஒரு வடிவம் பன் முகத் தோற்றப்பாடு கொண்டதாகவும் காணப்பட்டது. பிக்காசோவின் பிற்கால ஓவியங்கள் இப்பண்பு கொண்டதாகக் காணப்படுகின்றது.

பொதுவாக கியூபிசம் ஆனது கேத்திர கணிதத்தினதும் விஞ்ஞான அணுகுமுறைகளினதும் வெளிப்பாடாகிய சிந்தனை யோட்டத்தின் விளைவே கியூபிசம் எனக் கூறப்படுகிறது. இக்கியூபிச முறையினை அறிமுகப்படுத்திய பிக்காசோவின் இப்பாணியானது அவர் உலகிற்குச் செய்த பங்களிப்பு எனக் கருதப்படுகிறது. ◆

(நன்றி கலாசுரபி)

---

# உடல் உள இறுக்க நிலையை போக்குவது எப்படி?

இன்றைய உலகில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகை பிரச்சினைகளில் சிக்கி,உடல் உள இறுக்க நிலைகளிலிருந்து தப்பிவிட முடியாது தவிர்ப்பதை காணலாம். உடல் உள இறுக்க நிலைகளானது சமூக, பொருளாதார அரசியல், கல்வி, கலாச்சாரப்பண்பாடு, காரணிகளால் உருவாக்கப்படுகின்றது. இவ்வகைக் காரணிகளால் நெருக்கீடுகளுக்கு உள்ளாகும் ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒருவகை உடல் உள இறுக்க நிலையை அடைகின்றான்.

இறுக்கம் என்பது என்ன? எதிர்பார்ப்பு, ஆவல், ஏமாற்றம், ஏக்கம், ஏழ்மை, கவலை, கோபம், பயஉணர்வு, ஒருசெயலை முடிக்கும் முனைப்பு, ஒரு செயல் பெற்றிபெற அழுத்தப்பட்டுள்ள நிலை போன்றவற்றை இறுக்கம் எல்லா நிலையிலுள்ள மக்களையும் பால் வேறுபாடின்றி, வயது வேறுபாடின்றி தாக்குகிறது.

இவ்வாறு உருவாக்கப்படும் இறுக்கமானது நல்லதாகவும் அமையலாம். கெடுதலானதாகவும் அமையலாம் ஒரு மனிதனை இலட்சிய நோக்குடையவனாக மாற்ற கடின உழைப்புடையவனாக மாற்ற சிந்தித்து செயலாற்ற ஆக்க பூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் சிந்தித்து உழைக்க, சாதனங்கள் படைக்க இறுக்கம் தூண்டலாம் அதைவிடுத்து ஒருமனிதனின் வாழ்வை சீரழித்து சின்னாபின்னமாக்கி அவனின் எதிர்காலத்தை சூனியமாக்கக் காரணமாக இறுக்கம் அமையலாம்.

இறுக்கம் ஒரு மனிதனுக்கு சவாலாக அவனது ஆன்மஈடேற்றத்திற்கு போட்டியாக அமையும் போது அவனது உணர்வுகளை தூண்டி அவனைச் சாதனையாளனாக மாற்றும்.

### இறுக்கத்துக்கான காரணங்கள்

வேலையைத் தெரிவு செய்தல், குறித்த பாடநெறியைத்தெரிவு செய்தல், பொருத்தமான வாழ்க்கைத்துணையைத் தெரிவு செய்தல், வேலையை மாற்றுதல், மருத்துவமனைக்கு சென்று ஆலோசனை பெறல் போன்ற முடிவுகளை எடுக்கும்போது மன இறுக்கம் ஏற்படலாம்.

உறவுகளின் பிரிவு, உறவுகளின் முரண்பாடு பொறுப்புக்களை சுமப்பது, பிறப்பு, இறப்பு, பற்றிய சிந்தனை நோய்கள் பற்றிய பயம் போர்பற்றிய பயம் ஏற்படும் போது மன இறுக்கம் ஏற்படலாம்.

வேலைத்தளத்தில் சுயாதீனமாகச் செயற்பட முடியாமை, வேலைநேரம் அதிகரித்தல், ஓய்வின்மை வேலைக்கு ஏற்ற ஊதியம் கிடையாமை, தனது தொழிலுக்கு உரிய கௌரவம் கிடையாமை வேலைப்பழுகாரணமாக தனது நாளாந்த கடமைகளை நிறைவேற்ற முடியாமை சமூகக்கடமைகளை நிறைவேற்ற முடியாமை வேலைதளத்தில் மேலதிகாரிகளின் கட்டளைகள் அதிகமாதல் அதை முடிக்கமுடியாது



திண்டாடல் போன்றனவும் மன இறுக்கத்தை உண்டு பண்ணலாம்.

தாழ்வு மனப்பான்மை, அழகில்லை, அறிவில்லை, போதிய ஆளுமையில்லை, மற்றவர்களோடு சேர்ந்து பழகத் தகுதியில்லை என்ற சிந்தனைகளும் மனஇறுக்கத்தை உண்டுபண்ணலாம். குடும்பத்தில் சமூகத்தில் தனக்கு உரிய இடம் கிடையாமையும் மன இறுக்கத்தை உண்டு பண்ணலாம்.

என்ன காரணமாக அமைந்தாலும் ஒவ்வொரு மனிதனும் தனக்கு ஏற்படும் இறுக்க நிலைக்குதானே காரணமாக அமைகின்றான் அவனே இறுக்க நிலைக்கான பொறுப்பாளி அவனே தனக்கு எதிரியாக அமைகின்றான்.

இவ்வாறு ஒரு மனிதனில் உண்டாகும் இறுக்கத்தின் பிரதிபலிப்பு உடல் ரீதியாக வயிற்றுப்புண்(அல்சர்) தலைவலி, நோயெதிர்ப்புசக்தி குறைதல், களைப்பு, தளர்வு, மனநோய் போன்றவற்றை ஏற்படுத்தலாம். பெரும்பாலான நோய்களுக்கு மன இறுக்கமே காரணமென மருத்துவ வியலாளர்கள் கூறுகின்றார்கள்.

### இறுக்கம் தரும் தீமைகள்

இறுக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும் அளவிற்கு மனித உடலில் எதிர் விளைவுகளை உண்டு பண்ணுகின்றது. நமது உடலானது இறுக்க நிலையை எதிர்த்து போரிடுகின்றது சாதாரண நிலையில் செய்து முடிக்க முடியாதகாரியத்தை இறுக்கம் ஏற்படும் போது செய்து முடிக்கிறது. இதற்கான காரணம் உடலில் அதிகப்படியான சுரப்பிகள் அதிக அளவில் தொழிற்பட்டு வலிமையை உண்டுபண்ணுவதாகும் இதனால் நாடித்துடிப்பு அதிகரிக்கும்.

அதனைச்சமாளிக்க இதயம் கடுமையாக உழைக்கும் இதனால் இரத்த ஓட்டம் அதிகரிக்கும். நிலைமையை எதிர்கொள்ள இரத்தத்தில் கொழுப்பின் அளவு விரைவாகின்றது. இதனால் உடலில் பல்வேறு பக்கவிளைவுகள் உண்டாகின்றன. மனிதன் மரணத்தை நோக்கி நகர்கின்றான்.

வாழ்வில் பலவித நெருக்குதல் அடிக்கடி தோன்றி நம்மை தினமும் தாக்கும் நிலைமையாகிவிட்டது. காரணம் எதுவாக அமையினும் விளைவுகள் ஒன்றாகவே அமைகின்றன.

### இறுக்கத்தில் இருந்து விடுபடல்

உங்கள் வேலையை உங்கள் கொள்ளவுக்கு ஏற்றவாறு தெரிவு செய்யுங்கள். உங்கள் வேலையை உங்கள் கைப்பெட்டியுடன் வீடுவரை எடுத்துச் செல்லாதீர்கள். அப்படி எடுத்துச் செல்லின் ஓய்வோ, ஓய்வுணர்வோ ஏற்படாது. ஒவ்வொருநாளும் உமது உடல் வலிமைக்கும் உள ஆற்றலுக்கும் ஏற்றவாறு வேலையின் இலக்குகளை வைத்துக் கொள்ளுங்கள் அதை, அடைய இயன்றவரை சிறப்பாக செய்யுங்கள். அது முடியாவிடின் அத்துடன் அப்படியே விட்டு விட்டு செல்லுங்கள். நாளைவரை அது அங்கே இருக்கட்டும் அதைப்பற்றிச் சிந்திக்காது அடுத்த உங்கள் செயல்முறையில் ஈடுபடுங்கள் வீட்டில் உங்கள் நண்பர்களிடம் காட்டும் பண்பை, பரிவை, பாசத்தை வீட்டிலுள்ள ஒவ்வொருவரிடமும் காட்டுங்கள். வீட்டில் உங்கள் நடிபங்கிற்குரிய பாத்திரத்தை சிறப்பாகச் செய்யுங்கள், வாழ்வின் புயல்களில் ஒதுங்கும் புகலிடமாய் வீடு இருப்பதாக எல்லோரும் எண்ணும்படி வீட்டை அமைதியான இடமாக மாற்றுங்கள்.

நெருக்கமான நட்புணர்வையும் மற்றவர்கள் மீது அக்கறையுடனான தகவல் பரிமாற்றங்களையும் வைத்து சிறப்பான நல்லுறவையும் வளர்த்துக் கொள்வதற்கு நேரத்தைச் செலவிடுங்கள். மற்றவர்களின் தவறுகளை கண்டு கொள்ளாது இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். மற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பளித்துக் கொள்ளுங்கள். உங்கள் கருத்துக்கள் செயல்கள் சரியானவையாக இருப்பினும் சில சந்தர்ப்பங்களில் விட்டுக் கொடுத்து பழகுங்கள் மற்றவர்களின் திறமைகளை மதியுங்கள்.

~ ஜெ.சந்திரப்பிரகாசம் ~

ஒரு நாளில் குறைந்தது அரைமணி நேரமாவது தியானம் செய்யுங்கள். உங்கள் மனதை ஒருமுகப்படுத்தி நல்ல சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளுங்கள் ஒய்வு நேரங்களில் உங்களுக்கு ஈடுபாடான விளையாட்டுக்களில் ஈடுபடுங்கள். சங்கீதத்தில் மனதுக்கு ஆரோக்கியம் தரும் ராகங்களைக் கேட்டு இரசியுங்கள் உங்களை நீங்கள் நேசியுங்கள் உங்கள் அன்பிற்கு உலகம் ஏங்குவதாய் நினையுங்கள். உடல் உள இறுக்கம் தளரும், மனம் அமைதி அடையும். ◆

நாடுகள் தங்கள் வலக்கரங்களை உயர்த்திச் சுதந்திரச் சூளுரையை உரைக்கும் ~ ஜான்விட்டியர்

மு.திருநாவுக்கரசு



'நாடாளுமன்றத்தைக் கலைக்க சந்திரிகா இன்னும் சில மாதங்கள் மட்டுமே காத்திருக்க வேண்டும். அப்படியிருக்க சந்திரிகா இப்போது இப்படி அவசரப்படுகின்றமையானது வேறொரு உண்மையைக் காட்டுகின்றது. அதாவது நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் வைத்தால் ரணில் மீண்டும் பெருவெற்றி பெறுவார் என்ற யதார்த்தம் தெளிவாகத் தெரிகின்றது.'

# சந்திரிகாவின் சதி

தேர்தலின் மூலம் இலகுவாக ஆட்சி அதிகாரம் கைமாறும் ஆசிய நாடுகளென இந்தியாவும் இலங்கையும் புகழ்ந்து கூறப்படுவதுண்டு. இதுவரை இந்தியாவில் ஆட்சிக் கவிழ்ப்புச் சதிமுயற்சிகள் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் இலங்கையில் அவ்வாறான ஆட்சிக் கவிழ்ப்புகள் ஏதும் ஏற்பட்டிருக்கவில்லையாயினும் கூடிய, குறைந்த விகிதத்தில் சதிமுயற்சிகள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறான சதிமுயற்சிகளில் ஒன்றாகவே இப்போது ரணிலைக் கவிழ்க்க சந்திரிகா முனைவதாகக் கூறப்படும் சதி முயற்சியுமாகும்.

1962ஆம் ஆண்டு, அப்போது பதவியிலிருந்த சிறிமா பண்டாரநாயக்காவை கவிழ்ப்பதற்கான ஓர் இராணுவச் சதிமுயற்சி தெரியவந்ததும் அது உடனடியாகவே தோற்கடிக்கப்பட்டது. இதுவே இலங்கை வரலாற்றில் ஏற்பட்ட முதலாவது ஆட்சிக்கவிழ்ப்பு சதி முயற்சியாகும்.

அடுத்து 1965ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் டட்லி சேனநாயக்கா தலைமையிலான ஐ.தே.க.வெற்றி பெற்றதும் சிறிமா பண்டாரநாயக்கா பதவி விலகவேண்டி இருந்தது. ஆனால் சில "இடதுசாரிகள்" தலைவர்களின் ஆலோசனையின்படி சிறிமா பதவி விலகி இருப்பதற்கான சதி ஆலோச னைகளில் ஈடுபட்டார். ஆனால் அப்போது சிறிமாவின் செயலாளராக இருந்த் பிறட்மன் வீரக்கோனின் ஆலோசனை எனப்படும் வற்புறுத்தலுக்கிணங்க சிறிமா இறுதியில் பதவி விலகத் தயாரானார். பிறட்மன் பதவி விலகற்கடிதத்தை தயாரிக்க சிறிமா அதிற்கையொப்பமிட்டார். இதற்காக சில "இடதுசாரி" தலைவர்களும், சு.க.விலிருந்த தீவிரவாதிகளும் பிறட்மனை டட்லியின் கையாள், யூ.என். பிக்காரன் என வசைபாடினர். ஆனால் அப்போது பிறட்மன் தலையிடாது விட்டிருந்தால் சில மாதங்களாவது சிறிமாவின் சதி நாடகம் அரங்கத்தில் இருந்து பின்பு தோல்வியைத் தழுவியிருக்கும்.

அந்தச் சதி நடவடிக்கையை அரங்கேற்றச் சிறிமா ஆசைப்பட்டார். அந்தச் சதி நாடகம் நிலைக்க முடியாதென்பதை சிறிமா உணர்ந்து கொண்டது தான். அதை பிறட்மன் உணரவைத்ததற் தான் சிறிமா இறுதியில் பதவி விலகும் முடிவிற்குத் தயாரானார். இந்த வரலாற்றுப் பாடம் சந்திரிகாவிற்கு தெரியாமல் இருக்க முடியாது. அப்படியிருந்தும் சந்திரிகா இப்போது ஏன் சதி பற்றி ஆசைப்படுகிறார்?

அடுத்த 1994ஆம் ஆண்டு இன்னொரு சதித்திட்டம். இது காமினி திஸநாயக்காவினுடையது. அதாவது 1994ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் சந்திரிகா தலைமையிலான அணி வெற்றி பெற்றது. ஜே.ஆர்.யாப்புக்கு ஏற்பட்ட முதலாவது பெரிய சோதனையும் பெரிய அனுபவமும் இது. அதாவது ஜே.ஆர்.யாப்பின் கீழ் முதல்முறையாக ஜனாதிபதி ஒரு கட்சிக்காரராகவும், நாடாளுமன்றத்தை கட்டுப்படுத்துவது பிறிதொரு கட்சியுமாக தேர்தல் முடிவுகள் அமைந்தன.

ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டால் சந்திரிகாவுக்கு வெளிநாட்டு ரீதியான ஆதரவும் நிதி உதவிகளும் தடைப்படும். குறிப்பாக அமெரிக்கா ரணிலையே ஆதரிக்கும். அமெரிக்காவின் ஆதரவு என்பது இப்போதைய நிலையில் ஏறக்குறைய முழு உலகினதும் ஆதரவு என்பது தான்.

அப்போது ஜனாதிபதியாக இருந்த டி.பி.விஜேயதுங்க செய்வதறியாது குழம்பிப் போனார். ஆயினும் அடுத்து நிகழவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க.விற்கு தோல்வி நிட்சயம் என்பதை உணர்ந்து கொண்ட விஜேயதுங்க அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைப்படி அரசாங்கத்தை அமைக்குமாறு சந்திரிகாவை அழைக்க முடிவெடுத்தார். இந்த வேளையில் தான் காமினி திஸநாயக்காவின் சதி அரங்கத்துட் பிரவேசித்தது.

அவ்வாறு சந்திரிகாவை அரசாங்கத்தை அமைக்குமாறு அழைக்கவேண்டாம் என்றும், ஐ.தே.க.தான் அரசாங்கத்தை அமைக்கவேண்டும் என்றும், தன்னால் அப்படி ஒரு அரசாங்கத்தை அமைக்க முடியும் எனவும் ஜனாதிபதியிடம் காமினி திஸநாயக்கா வற்புறுத்திக் கூறினார். ஜனாதிபதியும் காமினியுடன் சேர்ந்து சதிக்குத் தயாரானார்.

அவ்வேளை ரணில் துரிதமாகச் செயற்பட்டுச் சதியைச் சுக்கு நூறாக்கினார். காமினியின் திட்டம் கைகூடா விட்டால் தனக்கு ஐ.தே.க.விலும், அரசியலிலும் எதிர்காலம் இல்லாது போய்விடும் என்பதை உணர்ந்த ரணில் சந்திரிகாவுடன் கூட்டுச்சேர்ந்து காமினியைத் தோற்கடிக்கத் தயாரானார். காமினியின் சதியை சந்திரிகாவிற்கு தெரியப்படுத்தியதுடன் சந்திரிகாவுக்கு தனது பூரண ஆதரவை வழங்கினார். அத்துடன் சந்திரிகாவிடம் அரசாங்கத்தை ஒப்படைக்கவேண்டும் என்று ஜனாதிபதியை வற்புறுத்தியதுடன் இதனை நாட்டு மக்களுக்கும் வெளிப்படையாகத் தெரிவித்தார். இதனால் காமினி செயலற்று அவமானகரமாகத் தனது சதியை கைவிடவே சந்திரிகாவை பிரதமராக நியமிக்க வேண்டிய நிற்பந்தம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டது.

இப்படி பார்க்கையில் சந்திரிகாவுக்கு எதிரான சதியிலிருந்து சந்திரிகாவை காப்பாற்றிய ரணிலுக்கெதிராக இப்போது சந்திரிகா சதியில் ஈடுபடுகிறார்?

புரிந்துணர்வு உடன்படிக்கையிற் பிரச்சினைகளை எழுப்பி அதன் அடிப்படையில் ரணிலை கேள்விக்குள்ளாக்குவது ரணிலை பதவி நீக்கம் செய்வது என்பன முதன் நிலையாகவும் அடுத்து லக்ஷ்மன் கதிர்காமரை பிரதமராக்குவது என்பது இரண்டாம் நிலையாகவும் சந்திரிகா சதித்திட்டம் வகுத்துள்ளார் என ஐ.தே.க. குற்றம் சாட்டுகின்றது.

பொதுத் தேர்தலில் தனக்கு ஏற்பட்ட தோல்வியை ஒப்புக் கொண்டு சந்திரிகா கௌரவமான தலைவருக்குரிய நாகரிகத்துடன் செயற்படுகிறார் என்பது சொல்வதிற்கில்லை. தவிர்க்க முடியாத யதார்த்தத்தின் பின்னணி அவர் ரணிலைப் பிரதமராக நியமித்த போதிலும் எப்போதும் அவரை பதவி நீக்கம் செய்வது பற்றியே பேசி வருகிறார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் எந்நேரத்திலும் ரணிலை தன்னால் பதவி நீக்கம் செய்யமுடியும் என மிரட்டியும் அச்சுறுத்தியும் வருகிறார். அரசியல் அமைப்பு ரீதியாக சந்திகாவிற்கு அப்படி அதிகாரம் உண்டுதான்.

யாப்பின் 47வது சரத்து (அ) பிரிவின்படி

"ஜனாதிபதியின் கைப்பட்ட ஒரு கடிதத்தின் மூலம்... முதலமைச்சர், அமைச்சரவையின் ஓர் அமைச்சர், வேறு எவரேனும் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர்-" போன்றோரை பதவியின் நின்றும் அகற்ற முடியும்.

இந்தச் சரத்தை வைத்துக் கொண்டுதான் ஜனாதிபதி ரணிலை எப்போதும் வெருட்டுகிறார். இங்கு எழுத்துரீதியாக சந்திரிகா இப்படிச் சொல்வது சரியேயாயினும் யதார்த்தத்தில் அது சரியல்ல.

மாற்றுக் கட்சிக்காரர் ஒருவரை பிரதமாராக்கும் மரபை உண்மையிற் தோற்றுவித்தவர் ரணில்தான். அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட முதல் நபரும் சந்திரிகாதான். எனவே மாற்றுக்கட்சிக்காரர் ஒருவர் பிரதமராயிருப்பது என்ற மரபு இலங்கையில் தோன்றிவிட்டது. மக்களின் விரும்பமும் அதுவே. அந்த மரபையும், மக்களின் விருப்பத்தையும், ரணிலின் தேர்தல் வெற்றியையும் மீறி சந்திரிகா ரணிலை கவிழ்க்க நினைப்பது உண்மையில் ஆட்சிக் கவிழ்ப்பு சதிதான்.

ஆனால் இச்சதி வெற்றி பெறக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் இச்சதியை இறுதி வெற்றிக்கு இட்டுச் செல்வதற்கு ரணிலின் கூட்டிலிருந்து எம்.பிக்களை உடைத்தெடுக்க வேண்டும். முதலாவது ஐ.தே.க.வை உடைக்க முடியாது. ஏனெனில் ரணில் கட்சிக்குள் பலமாகவுள்ளார். கரு ஜெயசூரியா போன்ற மிகச்சிலரைத் தவிர ஏனைய ஐ.தே.க. எம்பிக்கள் அனைவரும் ரணிலின் விசுவாசிகள் வட்டத்தைச் சேர்ந்தோர்கள். அத்துடன் ஏனைய கட்சிக்காரருடனான அவரது கூட்டும் பலமாகவுள்ளது. அத்துடன் வெளிநாட்டு ரீதியாகவும் ரணில் தனக்கு சாதாகமான அரணை பெரிதும் தோற்றுவித்து விட்டார். அவ்வாறு ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்டால் சந்திரிகாவுக்கு வெளிநாட்டு ரீதியான ஆதரவும் நிதி உதவிகளும் தடைப்படும். குறிப்பாக அமெரிக்கா ரணிலையே ஆதரிக்கும். அமெரிக்காவின் ஆதரவு என்பது இப்போதைய நிலையில் ஏறக்குறைய முழு உலகினதும் ஆதரவு என்பதுதான்.

வெளிநாட்டு ரீதியாக சந்திரிகா இந்தியாவை தன்பக்கம் ஆக்கி விடலாம் என நினைக்கிறார். இதில் அவரது முதலாவது நம்பிக்கை நட்சத்திரம் சென்னைதான். இலங்கையின் உளவுப்பிரிவு சென்னையில் நல்ல வளர்ச்சியடைந்து இருப்பதாக பொதுவாக நம்பப்படுகின்றது. சென்னையிலுள்ள சில முக்கிய அரசியல் தலைவர்களை, கொள்கை வகுப்பாளர்களை, அதிகாரிகளை, முக்கிய புள்ளிகளை, . விலைக்கு வாங்கக்கூடிய வளர்ச்சியை சிங்கள உளவுப்பிரிவு அடைந்துள்ளதாக நம்பப்படுகின்றது. இது சந்திரிகாவின் ஒரு முதலீடு. ஆனால் இவற்றை மேவுவதற்கான பலமான வேறு திட்டங்கள் ரணிலிடம் இல்லாதிருக்க முடியாது.

சந்திரிகா அலமலந்து செயற்படுகின்றார் என்பது தெரிகின்றது. அந்த அலமலந்த நிலையில் அவர் இப்படியொரு சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது உண்மையாயின் நிச்சயமாக அது ரணிலை பலப்படுத்தவே உதவும். ஆகையும், அரசியல் நாகரிகமின்மையும் அலமலந்து செயற்படத் தூண்டும். ஆனால் இதில் வெற்றிக்கான சூழல் ரணில் பக்கமே உண்டு.

நாடாளுமன்றத்தைக் கலைக்க சந்திரிகா இன்னும் சில மாதங்கள் மட்டுமே காத்திருக்க வேண்டும். அப்படியிருக்க சந்திரிகா இப்போது இப்படி அவசரப்படுகின்றமையானது வேறொரு உண்மையைக் காட்டுகின்றது. அதாவது நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் வைத்தால் ரணில் மீண்டும் பெருவெற்றி பெறுவார் என்ற யதார்த்தம் தெளிவாகத் தெரிகின்றது. அது சாதகமல்ல என உணர்வதாற்தான் அவர் இப்படித் சதிக்குத் தயாரானாரெனத் தோன்றுகின்றது.

இந்த வகையில் சந்திரிகா யோசிக்கும் சிவில்ரீதியான சதி சாத்தியமில்லை. அப்படியாயின் இராணுவ ரீதியான சதி சாத்தியமா? நிட்ஷயமாக இல்லை. இரு கட்சிகள் ஏறக்குறைய சம வளர்ச்சியடைந்திருக்கும் நாட்டில், அதுவும் இலங்கையின் பின்னணியில் அது சாத்தியமில்லை. இன்றைய ரணிலின் சர்வதேசப் பலத்தின் பின்னணியில் இராணுவத்தால் சில வாரங்களுக்குக் கூட அரசாங்கத்தை இயக்க முடியாது.

அப்படியாயின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி என்ற பெயரில் பாதி சிவிலும், பாதி இராணுவமுமாக சந்திரிகா தலைமையில் சிவில்-இராணுவ கூட்டுச்சதி சாத்தியப்படாதா?

அது சாத்தியம் போறத் தோன்றும். ஆனாலும் அதுவும் கூடச் சில மாதங்கள் மட்டும்தான் நீடிக்க முடியும் என்பதுடன் அதிலேற்படக்கூடிய சிறு சறுக்கலும் கூட சந்திரிகாவின் குழு எதிர்கால அரசியலையும் அஸ்தமிக்கச் செய்துவிடும். இலங்கையின் பலவீனமான அரசியற் பொருளாதாரப் பின்னணியில் சில மாதங்களுள் அமெரிக்காவினால் சந்திரிகாவின் இச்சதியை வீழ்த்த முடியும்.

உதாரணமாக கடந்த வாரம் அநுரா ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவின் நடவடிக்கை பற்றி பெரிதும் குறை கூறி அதில் அமெரிக்காவிற்கு எதிராகச் சவால்விட்டார். அது பற்றி அமெரிக்கா அநுராவிடம் விளக்கம் கோரியதும் அதற்குச் சிறிதும் மறுப்புத் தெரிவிக்க இயலாதவராய் நான்கு பக்க விள்க்கப் பத்திரம் சமர்ப்பித்துள்ளார். இதன் செய்தி இதுதான். மூச்சுக் காட்டக்கூடாது என்று அமெரிக்கா சொல்கின்றத் அதற்கு அநுரா "ஆமாம் சாமி" என்று சொல்கிறார். நிலைமை இப்படி இருக்கையில் சதிகள் சாத்தியப்பட முடியாது. அத்துடன் இன்னும் சிறிது காலத்துள் இராணுவத்துள் ரணிலின் ஆக்களது கைகள் ஓங்கிவிட்டால் இராணுவரீதியாக எதுவும் யோசிக்க முடியாது.

நிலைமை இவ்வாறிருக்கையிலும் சந்திரிகா தனக்குள்ள வாய்ப்புக்களை வைத்து சும்மாயிருக்காது முயற்சிகளைச் செய்வார். இதில் சந்திரிகாவின் முதலீடு இனப்பிரச்சினை் சென்னை என்பன. ரணிலின் முதலீடு சமாதானம், சர்வதேசப்பலம் என்பன. இந்த இரண்டு முதலீடுகளுக்கும் இடையிற்தான் தற்போது ஆட்சிப்பலம், ஆட்சிக் கவிழ்ப்பு என்பன தங்கியுள்ளன. ♦



# காதலி

– டொக்டர் ருத்ரன் –

காதல் இல்லாமல் வாழ்க்கை கிடையாது. அது ஓர் அற்புத சக்தி. இருளில் ஒளியாய், இரைச்சலில் நிசப்தமாய், முட்களில் மென்மையாய், தனிமையில் இருவராய் மனதைப் புதுப்புதுக் கோணங்களில் பார்க்க வைக்கும் சிறப்பான அனுபவம். காதல் என்பதை அனுபவிக்காத மானுடனே கிடையாது. “காதலுக்கு ஜாதி இல்லை மதமும் இல்லையே” என்று கண்ணதாசன் கூறியதோடு காதலுக்கு வயது என்ற தடையுமில்லையே என்றும் சேர்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் காதல் என்னவென்று அடையாளம் தெரியாமல் இருப்பவர்களே அதிகம். காதல் இயல்பாக ஏற்படும் உணர்வின் உறவு. நிறைய பேருக்கு காதலிப்பதாய் பிரமை உண்டு. அதுவே நிறைய உறவுகளுக்குள் சிக்கலின் ஆரம்ப முடிச்சு. காதல் வளரும், முடியாது: தொடரும், தோல்வியடையாது. மரணம்கூட காதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

கண்கள் தான் காதலின் வாசல். வாசல் வரை வந்தால் போதாது. உள்ளத்தின் உள்ளே செல்ல மனக்கதவு திறக்க வேண்டும். அழைப்பு மணி அடித்தவுடன் கதவைத் திறக்கலாம். அனுமதிக்க நிதானம் தேவை. காதலில் நிதானம் அவசியம். ஆனால் உணர்ச்சிகளின் வேகத்தில் நிதானத்தை உதாசீனப்படுத்தி விடுவோம். காதலும், நட்பும் ஒன்றுபோலத்தான். அன்பு, அக்கறை, நெருக்கம் எல்லாமும் ஒன்று போலத்தான். நட்பைவிட காதல் மனதை அதிகம் ஆக்கிரமிக்கும் உறவு. காதல், என்பது ஆசையில் தொடங்கி, நெருக்கத்தில் வளர்ந்து. புரிதலில் தொடர்ந்தால் வாழ்க்கை என்றும் இனிக்கும். காதலில் புரிதல் தான் முக்கியம்.

கவர்ச்சியைக் காதல் என்று குழப்புவது விசித்திரமான விஷயமல்ல. காதலின் ஆரம்பம் கவர்ச்சிதான். உடலின் அங்கங்களும் முகத்தின் அழகுகளும் மட்டுமல்ல. அறிவு, ஆற்றல், ஆளுமை இவையும் கவர்ச்சியை உருவாக்கக் கூடியவைதான். நட்பு போலவே காதலின் ஆரம்பமும் ஈர்ப்புதான். இந்த ஈர்ப்பு மனத்தளவில் மட்டும் தாக்கத்தை உருவாக்காமல் உடலளவிலும் சில தேவைகளை உருவாக்கி விடுகிறது. இளமையின் ஆரம்பத்தில் விடலைப் பருவத்தின் எல்லையில் உடலில் சில சுரப்பிகள் வேலை செய்ய ஆரம்பிக்கும். அப்போது அடுத்தபாலினைச் சேர்ந்தவர் மீது ஈர்ப்புவரும். இது தவிர்க்க முடியாத இயற்கை. இதையே காதலென்று நினைத்து விடுவோர்தான் பிறகு வாழ்க்கையில் கவலைகளைத் தினமும் சந்தித்து வருகிறார்கள். காதலிப்பவர்களுக்கு கனவுகள் அதிகம். மகிழ்வுகள் அதிகம். நிறைவுகள் அதிகம். காதல் என்ற புத்தகத்தில் கவலை என்ற வார்த்தைக்கே இடமில்லை.

காதலிப்பதால் என்ன பயன், என்ன பலன், எவ்வளவு லாபம் என்ற கணக்குகளை யாரும் போடமுடியாது. அப்படிக் கணக்கிட்டு ஓர் உறவை ஏற்படுத்திக் கொள்வது வியாபாரம். காதல் லாபநஷ்டம் பார்க்கும் வியாபாரமல்ல, அது இயல்பாக இயங்கும் சக்தி. காதலால் இலாபம் என்று கணக்கிடாவிட்டாலும், அதன் பலன்கள் அதிகம்! தைரியம்,முனைப்பு,முயலும் சக்தி,திறமை வளர்ப்பு... என்று பலவிதங்களில் காதல் ஒருவரை மேன்மைப்படுத்தும்.

“ காதலிக்கிறேன் அதனால் கவனம் சிதறுகிறது’’ காதலிப்பதால் என் வேலையில் நாட்டம் குறைகிறது’’ என்றெல்லாம் சொல்பவர்கள் அதிகம். உண்மையான காதல் வளர்ச்சிக்கு மட்டுமே உதவும். அதைவிட, இருக்கும் குறைகளையும் குறைக்கவும்,அழிக்கவும் உதவும். காதலித்ததால் என் வாழ்க்கை வீணாகிவிட்டது என்று யாருமே கூறமுடியாது. வீணடிக்கும் உறவு காதல் அல்ல. காதல் என்பது தினசரி காதில் விழும் வார்த்தை. ஆனால் அதை உணர்ந்து புரிந்து தெளிந்து அனுபவித்தவர்கள் குறைவு.

மனவியல் கருத்தின்படி காதல் என்பது அக்கறை, நெருக்கம்,இணைந்திருத்தல் ஆகிய மூன்றின் கலவை. இன்னொரு நோக்கில் காதல் என்பது நம்பிக்கையின் முழுமை. தன்னையே தந்துவிடுமளவிற்கு வரும் நம்பிக்கை காதல்.

அன்பு,அக்கறை,நெருக்கம், நம்பிக்கை,தன்னையே தந்துவிடும் மனப்பான்மை இருவருக்கும் சமமாக இருந்தால்தான் அது காதல் “நான் அதிகம் காதலிக்கிறேன அவள் குறைவாகக் காதலிக்கிறாள்” என்றெல்லாம் கூறமுடியாத நிலை காதல். இதில் அளவுகள் கிடையாது. வளர்ச்சிகள் மட்டுமே உண்டு. “ஆரம்பத்திலே லவ் பண்ணினேன்.... இப்ப பிடிக்கேல்ல” என்று கூறுவோர் காதலிக்கவில்லை கவரப்பட்டார்கள். கவர்ச்சி அதன் வீச்சுத் தீர்ந்ததும் சலித்துவிட்டது. அவ்வளவுதான். காதல் ஆரம்பித்தபின் முடிவதுமில்லை, சற்றும் தளர்வதுமில்லை.

ஒரு தலைக்காதல், கைக்கிளை என்றெல்லாம் தங்களது காதலைச் சிலர் வர்ணிப்பார்கள். ஒருதலையாய் காதல் சாத்தியமில்லை. அப்படி ஏற்படும் ஈர்ப்பு-பக்தி, ரசிப்பு, வியப்பு ஆர்வம் ஆகியவையே தவிர காதல் இல்லை.

இளமையில்தான் பெரும்பாலோர்க்கு காதல் என்ற உணர்வின் அறிமுகம் கிட்டும். ஆனால் காதலிக்க வயது கிடையாது . அறுபது வயதிலும் அது தோன்றலாம். இளமையில் ஆரம்பிக்கும் காதல் -திருமணத்தில் முடிந்தாலும் சிலருக்கு அதில் சலிப்பும் விரக்தியும் தோன்றுவதுண்டு.

இதற்கு விடை இந்தப் பாடலின் வரிகளில் காணலாம்.

“இளமையிலே காதல் வரும்
எதுவரையில் கூடவரும்?
முழுமைபெற்ற காதலெல்லாம்
முதுமைவரை கூடவரும்!”

முழுமை பெற்ற காதல் என்பது முதிர்ச்சியோடு கவர்ச்சியை அங்கீகரிக்கும் நிலை. காதலிக்கும்போது ஆரம்பம் கவர்ச்சி அல்லது ஈர்ப்பு என்பதால் காதலர்கள் பெரும்பாலும் தங்களது கவர்ச்சிகரமான அழகையோ ஆற்றலையோ அதிகமாக மற்றவரிடம் தெரிவிக்க முயல்வார்கள். இது இயற்கை. “என்னிடம் உள்ள சிறப்புகளை உனக்குத் தெரிவிக்கின்றேன்’’ என்பதுதான் உறவுகளை ஆரம்பிக்கும் வழி. அதை அங்கீகரிப்பதுதான் உறவு. ஆனால் காதலிப்பதால் “பரவாயில்லை” என்று சில விஷயங்களை ‘‘விட்டுக் கொடுப்பதாக’’ எண்ணி சிலர் உறவை வளர்க்க விரும்புவார்கள். காதலில் காதலரிடம் பிடித்த விசயங்களைக் கூற வேண்டும். அந்த அங்கீகாரம் மகிழ்வை உருவாக்கும். அதற்காக அவரிடம் உள்ள குறைகளையோ தனக்குப் பிடிக்காத விசயங்களையோ “ பிறகு பார்த்துக்கொள்ளலாம்’’ என்று இருப்பவர்கள்தான் பிரச்சினைக்கு ள்ளாவார்கள். குறை-நிறை இரண்டுமே மனிதர்களிடம் உண்டு. குறையே இல்லாதவன் கிடையாது. அந்தக் குறை நம்மால் ஏற்றுக்கொள்ளவே முடியாது என்றால் அதைப்போக்க ஆரம்பத்திலிருந்தே முயல வேண்டும்.

பல-பெண்களுக்கு சிகரெட் பிடிக்காது. சிலர் தங்கள் காதலரிடம் இதை முதலிலேயே கூறுவதும் உண்டு. காதலனும் காதலுக்காக சிகரெட்டை ‘‘தியாகம்’’ செய்ய முடிவெடுப்பதும் உண்டு. அது கொஞ்சக் காலம்தான். அதற்குள் ‘காதல்’ என்று அவர்கள் தீர்மானிக்கும் உறவு வளர்ந்துவிடும். பிறகு இருவருமே இந்த விசயத்திற்கு ஒரு சமரச உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டு. தொடர்வார்கள். இது மிகவும் சாதாரண விசயம். ஆனால் “சமாளித்துக கொள்ளலாம்’’ என்று நினைப்பதோ ‘‘தியாகம்’’ செய்துவிடலாம்’’ என்று முடிவெடுப்பதோ காதல் வளரவும் , முதிரவும் முழுமை யடையவும் உதவாது.

தியாகம் என்பது உயர்ந்த விஷயம்தான். ஆனால் அதை ஆழப்பார்த்தால் அது ஒரு வலி. ஒரு ரணம்,தெரிந்தே ஏற்றுக்கொள்ளும் சுமை. காதல் மகிழ்ச்சியால்,மகிழ்ச்சிக்காக, மகிழ்வோடு நிகழும் உறவு. இதில் தியாகம் எவ்வளவு உயர்வான விசயமாக இருந்தாலும் அதற்கு இடமில்லை. வலியோடும் சுமையோடும் இன்பத்தை முழுமையாக அனுபவிக்க முடியாது. இன்பத்தில் துன்பத்தின் ஒரு துளி கூட கலக்க முடியாது. காதல் இன்பத்தின் வெளிப்பாடு: தியாகம் துன்பத்தின் மூடுதிரை. காதலுக்கும் தியாகத்திற்கும் எந்தவொரு சம்பந்தமும் கிடையாது. இரண்டும் கலப்பது சிலர் தங்களை ஏமாற்றிக கொள்ளவோ காதலரிடமிருந்து தப்பித்துக்கொள்ளவோ உருவாக்கும் பொய்..

(வரும் வாரம் வரும்...........)



*அன்பு,அக்கறை,நெருக்கம், நம்பிக்கை, தன்னையே தந்துவிடும் மனப்பாண்மை இருவருக்கும் சமமாக இருந்தால்தான் அது காதல். “நான் அதிகம் காதலிக் கிறேன் அவள் குறைவாகக் காதலிக்கிறாள்’’ என்றெல்லாம் கூறமுடியாத நிலை காதல். இதில் அளவுகள் கிடையாது. வளர்ச்சிகள் மட்டுமே உண்டு.*



# வைர வரிகள்

➪ அமைதியான உள்ளங்கள் திகைப்புற, அச்சுறுத்தப்படாத, அதிர்ஷ்டத்திலும், துரதிர்ஷ்டத் திலும் நிலை இழக்காமல் தங்கள் சொந்த நியாயத்திலேயே இடிமழை நடுவே கடிகாரம் போலவே இயங்குவன.

– ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன்

➪ கொற்றவனோ, குடியானவனோ, அமைதியைத் தன் இல்ல த்தில் காண்பவனே, இன்பம் மிக்கவன்

– யொஹன் கேத்தெ.

➪ உலகில் மூன்று வகையான மக்கள் உள்ளனர். ஒருவகையினர், தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து பயன்பெறுகின்றனர். இவர்கள் அறிவுடையோர். இரண்டாவது வகையில் மற்றவர் அனுபவத்திலிருந்து பயன்பெறுகின்றனர். இவர்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். மூன்றாவது வகையினர் தங்கள் அனுபவத்திலிருந்தும் பிறர் அனுபவத்திலிருந்தும் பயன் பெறுவதில்லை. இவர்கள் முட்டாள்கள்.

– செஸ்ட்டர் ஃபீல்ட் பிரபு.

➪ வாழ்க்கையில் புதிய முயற்சிகளையும் பரிசோதனை களையும் மேற்கொள்ளாமல் நாம் முன்னேற முடியாது. ஆனால் முந்தினநாள் தவறு என்று தான் நிரூபித்துள்ளதை, ஒவ்வொரு நாளும் தொடர்ந்து செய்ய அறிவுடையவன் எவனும் முன்வர மாட்டான்.

– ஜேம்ஸ் ஆடம்ஸ்



# இப்படியும் சில மனிதர்கள்

அலுவலகத்தில் வேலைமுடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.

சாலையில் சனநெரிசல் அதிகமாக இருந்தது.

சீரற்ற அந்தச் செம்மண் தெருவில் புழுதிகளை வாரியிறைத்தபடி விரைந்து... செல்லும் கனரக இயந்திர வாகனங்களின் அதிவேகத்துக்குள் சிக்காது, லாவகமாக சாலையில் உள்ள பள்ளம் திட்டிகளைப் பார்த்து, எனது மிதிவண்டியை நிதானமாகச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

"என்ன மச்சான் இப்பதானே வேலை முடிஞ்சு போறாய்...?"

குரல் கேட்டுத்திரும்பிப் பார்த்தேன்.

என் நண்பன் ஒருவன், என்னை வினவியபடி என்னோடு சமாந்தரமாக வந்து கொண்டிருந்தான்.

"ஓமடாப்பா. இண்டைக்கு வேலை முடிய கொஞ்சம் நேரம் போட்டுது."

"நீ எங்கை துலையாலையே...?" நான் கேட்டேன்.

"ரண்டு நாளா காதுக்குள்ளை ஒரே இரைச்சல். அதுதான் 'கிளினிக்'கிலை காட்டிக் கொண்டு வாறன்."

அவனது குரல் உணர்ச்சியற்று இருந்தது.

நான் அவனை அனுதாபத்தோடு பார்த்தேன்.

பார்வைக் கோளாறு காரணமாக கண்ணிலே ஒரு சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின்பு, அவனுக்கு காது நரம்பினுள் ஏதோ ஒரு சிறு தாக்கம் ஏற்பட்டுவிட்டது.

கண்டத்துக்கு மேலேயுள்ள கண், காது, மூக்கு மற்றும் தொண்டை நரம்புகள் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டிருக்கின்றன என்று எப்போதோ ஒரு மருத்துவக் குறிப்பொன்றில் படித்தது ஞாபகத்தில் இருந்தது.

அதுதான் அவனுக்கு கண்ணிலே சத்திரசிகிச்சை செய்த பின்பு, அதனோடு சம்பந்தப்பட்ட நரம்பு ஏதாவது காதினுள் பாதிப்படைந்திருக்கக் கூடுமென நான் அடிக்கடி நினைத்துக் கொள்வேன்.

அத்தோடு, இந்தியஇராணுவம் எமது தாயகத்தில் அத்து மீறி நிலை கொண்டிருந்த போது, எம் மக்களுக்கு ஏற்படுத்திய இன்னொரு தாக்கம் என் நண்பனிலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள்-

கோண்டாவில்- உப்புமடப் பிள்ளையார் கோவில் சந்திக்கு அண்மையாகச் சென்று கொண்டிருந்தான்.

அப்போது, அச்சாலைவழியே முகமெங்கும் அச்சம் நிறைந்த நிலையில், தம்விழிகளை அகல மலர்த்தி, அக்கம்பக்கம் பார்த்தபடி... நகர்ந்து கொண்டிருந்தன சில 'அந்நிய உருவங்கள்.'

இரண்டு நாட்களுக்கு முன்பு, அந்த உப்புமடப்பிள்ளையார் கோவில் சந்திக்கு அருகாமையில் வெடித்த 'கிளைமோரில்' ஒரு கவசவண்டி தூக்கி எறியப்பட்டதோடு, அதில் பயணித்த 'பச்சைச்சட்டைகள்' பலவும் கொல்லப்பட்டன.

இந்நிலையில்தான், அந்த அந்நிய உருவங்களில் ஒன்று அவனை வழிமறித்து 'கிளைமோர்' வெடித்த இடத்தைக் காட்டி ஏதோ கேட்கத் தொடங்கியது.

அவனுக்கு எதுவும் விளங்கவில்லை. 'அது' பேசியது நம் மண்ணுக்குச் சொந்தமில்லாத ஓர் அந்நிய மொழி.

அவன் சிறிது தடுமாற்றத்தோடு, "எனக்கு ஒண்டும் தெரியாது..." என தனது தாய்மொழியில் கூறினான்.

அவ்வளவுதான்-

உலக்கை போன்ற அதன் கையொன்று அவனது காதைப் பதம் பார்த்தது.

அன்று அந்த அந்நிய உருவத்தால் ஏற்பட்ட தாக்கம்... அவனது செவிப்புலன் பாதிக்கப் பட்டதுக்கு ஒரு காரணமாக இருக்கலாமென நான் அடிக்கடி நினைத்துக்கொள்வது உண்டு.

என் நண்பனுக்கு காது கேளாது என்றில்லை.

"எனக்கு காது நல்லா கேட்குது. ஆனா சொல்லுப் புரியுதில்லை..." என்றே அவன் அடிக்கடி கூறுவான்.

குறிப்பாக ,"வெள்ளை..." என்று நாம் சொன்னால், அவனுக்குப் "பிள்ளை..." எனப் பொருள்படுகின்றது.

இதனால் சில இடங்களில்அவன் பலரோடு உரையாடுகையில் சிரமப்படுவதையும், பொது நிகழ்வுகள் என வரும்போது அதில் கலந்து கொள்ளாது ஒதுங்கியிருப்பதையும் நான் அறிந்தும், கண்டுமிருக்கின்றேன். அதிலும்,அவன் தொழில் புரியும் இடத்தில் ''காது கேளாதவன்...'' என்ற சொல்லுக்கு ஆளான நிலையில், அவன் அநேகமானவர்களோடு,அதிகம் ஐக்கியம் பேணாது ஒதுங்கியிருப்பதையும் நான் அறிந்திருப்பதோடு, அவனைப் போகவிட்டுப் பின்னே, அவனின் குறைபாட்டைக் குறித்து கேலியாகக் கதைப்பவர்களையும் நான் நன்கு தெரிந்து வைத்திருந்தேன்.

அதனால்தான் இன்று அவன், தன் காதுக்குள் ஒரே இரைச்சல்... எனக் கூறியபோது, எனக்குக் கவலையாக இருந்தது.

''கிளினிக்கிலை என்ன சொன்னவை...?''

''வழக்கம்போல குளிசையும், காதுக்குள்ளைவிட 'சொட்டு மருந்தும்' தந்தவை''

" நீ ஒண்டுக்கும் யோசியாதை மச்சான். சில வியாதிகள் உடனை மாறாது. தொடர்ந்தும் மருந்து பாவிக்க வேணும். காலப்போக்கில பிறகு சுகம் வந்திடும்..."

அவன் பாவிக்கும் மருந்துக்கு காலப்போக்கில் சுகம் வருகுதோ இல்லையோ அதைப் பற்றி எனக்குத்தெரியாது .

ஆனால்,அவனின் அப்போதைய மனநிலைக்கு, நான் கூறிய அந்த வார்த்தைகள் சற்று ஆறுதலாக இருக்கட்டுமென்றுதான் நான் அப்படிக் கூறினேன்.

அவன் எதுவும் கூறவில்லை. மௌனமாக வந்து கொண்டிருந்தான்.

களப்போராட்டத்தில் ஒரு கையை இழந்த புலிப்பெண் போராளி ஒருத்திதன் மறுகையுடன் எங்கள் இருவரையும் விலத்திக் கொண்டு, வேகமாக தனது மிதி வண்டியில் சென்றுகொண்டிருந்தாள்.

அந்நிய இராணுவ ஆக்கிரமிப்பின் கொடூர வடுக்கள் எம் மக்கள் பிரதிபலிப்பதைக் கண்டு, என்னுள் இருந்து வெளிக்கிளம்பியது பெருமூச் சொன்று.

என் நண்பனைப்போல ... அந்தப் பெண் போராளியைப் போல... இந்த மண்ணில் இன்னும் எங்கெங்கு யார் யாரோ...?

மனம் மீண்டும் பெருமூச்செறிந்து கொள்கிறது.

அப்போது, அந்தச் சாலை வழியே எதிரே உந்துருளி ஒன்றில் வந்த ஒரு மனிதர், என் நண்பனின் பெயரைச் சொல்லி நிற்கும்படி கூறிவிட்டு, தனது உந்துருளியை மறுபக்கமாகத்திருப்பிக் கொண்டு வந்து எம்மருகில் நிறுத்தினார்.

"நீ இண்டைக்கு வேலைக்குப் போகேல்லையே...? வந்தவர் என் நண்பனைப் பார்த்துக்கேட்டார்.

"இல்லை முதலாளி..."

"ஏன்...?"

கேட்ட இரண்டாவது கேள்வியில் அதிகாரத்தொனி நிறைந்திருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது.

"காது சுகமில்லை..."

அவர் அவனை ஒருவித வெறுப்புடன் பார்த்தார். பின்பு-

''சரி,நாளைக்கு வேலைக்குப் போவியே?''

"ஓம்..."

"அப்ப நான் சொன்னதா 'ஸ்டோர்' பொடியனிட்டை சொல்லு. பதினைஞ்சு லீற்றர் 'வடி' எடுத்து வெளியிலை வைக்கட்டாம். பின்நேரம் வாறனாமெண்டு."

" என்னது படியோ..."

என் நண்பனுக்கு அவர் 'வடி' என்று கூறியது சொல்லின் ஓசைமாறி 'படி' என செவியினுள் நுழைந்து: பதிந்துகொண்டதை நான் உணர்ந்துகொண்டேன்.

முதலாளியின் முகத்தில் அருவருப்புடன் கூடியதான எரிச்சல் தென்பட்டது.

"வடியடாப்பா... வடி... வடி... அதாவது எண்ணெய், ஒயில்...இப்ப விளங்குதே?''

பலத்த குரலில் சத்தம்போட்டு, கைகளால் அபிநயித்துச் சொல்லிக் கொண்டபோது... அந்தச் சாலையில் சென்றவர்களில் அநேகமானவர்கள் எங்கள் மூவரையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டு போனார்கள்.

சனப்புழக்கம் நிறைந்த அந்தச் சாலையில், அவனது அங்கக் குறைபாட்டை முதலாளி பகிரங்கமான தனது சொல்லாலும் செயலாலும் எடுத்துக்காட்டியது எனக்குள் சினத்தை உண்டு பண்ணியது.

நான் எனது நண்பனின் முகத்தைப் பார்த்தேன். அவனது

**- ஆஞ்சநேயன் -**

முகத்தில் எந்தவித உணர்ச்சிகளும் இல்லை. அவன் அமைதியாக அவரைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனிடம் இந்த முதலாளி மட்டுமல்ல அவன் வேலைசெய்யும் இடத்தில் உள்ள ஏனையவர்களில் ஒரு சிலரும் இதேமாதிரியாகத்தான் அவனுக்கு விளங்காத விசயங்களை 'அபிநயித்து'ச் சொல்லிக்காட்டு வார்களென நான் அறிந்திருந்தேன்.

ஆரம்பத்தில் அவன் தனது அங்கக்குறைபாட்டை நினைத்து அடிக்கடி மனம் வருந்திக்கொண்டது உண்மைதான். ஆனால், காலப்போக்கில் போரும்- வாழ்வும் நமக்கு ஒன்றாகிப்போன நிலையில், புதியதொரு விடுதலைக்காக போராடும் இன்றைய நாளில், சாதாரண ஒரு மனிதனான அவனுக்கு இக்குறைபாடு பெரியதொரு பிரச்சினையாகத் தோன்றவில்லை.

காரணம்-

சண்டைக் களங்களில் கையிழந்து... காலிழந்து... கண் இழந்து.. இன்னமும் உறுதிதளராது வாழும் போர் வேங்கைகளைப் பார்க்கும்போது அவன், தானும் அந்த உறுதியைப் பெற்றுக் கொண்டதான உணர்வில் அகமகிழ்ந்து போவான்.

அத்தவர்களுடைய அங்கக்குறைபாடுகளை நாலுபேர் முன்னிலையில், பகிரங்கப்படுத்தி மட்டம்தட்டிக் கூறுவதில் எம்மில் சிலருக்கு ஏன்தான் இப்படி ஆனந்தமோ அகப்பூரிப்போ தெரியவில்லையென நான் எண்ணிக் கொண்டிருக்கையில் அந்த முதலாளி அவனுக்கு வேறு சில விடயங்களையும் கூறிவிட்டு , தனது உந்துருளியை இயக்க ஆரம்பித்தார்.

அப்பொழுதுதான் நான் அவரது அந்தக் காலைக் கவனித்தேன். முழங்காலுக்குக்கீழே துண்டாடப்பட்ட நிலையில், அதற்குப் பதிலாக பொய்க்கால் பொருத்தப்பட்டிருந்தது.

அவர் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்ட பின்பு, நாங்கள் புறப்பட்டோம்.

''மச்சான் டேய் உவருடைய காலுக்கு என்னடா நடந்தது?''

''ஆனையிறவுப்பக்கம் போனவராம். அங்கை 'ஆமி' தாட்ட மிதிவெடியிக்கை காலைக் குடுத்தவராம்...''

"அப்ப அவரும் யுத்த கால சூழலில் உன்னைப்போல பாதிக்கப் பட்டிருக்கிறாரெண்டு சொல்லன்".

நண்பன் என்னைப் பார்த்து, சிரித்துவிட்டுக் கூறினான்.

"பௌத்த -சிங்கள பேரினவாதம் நடத்தும் யுத்தத்தால நாங்கள் எல்லோரும் பாதிக்கப்பட்டிருக்கிறம் என்பது உண்மைதான். ஆனால் ,அந்தப் பாதிப்பின் மூலம்,இஞ்சை எத்தனை பேருடைய புத்தி தெளியுது? மனசு பக்குவப்படுது என்பதை ஓர் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டால் கேள்வி,கேள்வியாகத்தான் வளைந்து நிற்கும்''

எனக்கு எதுவும் புரியவில்லை. வினாக்குறியோடு அவனைத் திரும்பிப் பார்த்தேன்.

நண்பன் மீண்டும் சிரித்துவிட்டுக் கூறினான்.

இங்குள்ள ஒரு சிலருக்கு இன்னும் புத்தி நல்லாத் தெளியேல்லை. உதாரணத்துக்கு நம்முடைய முதலாளியை எடுத்துக்கொள். பணம் புரளும் அவர் வாழ்க்கையிலை, தான் ஓர் அங்கவீனன் என்பதை உணராது அடுத்தவனின் குறைபாடுகளை வர்ணிப்பதில் சந்தோசம் காணுகிறார் காரணம், தங்களுடைய அங்கக் குறைபாடுகளை வெளிநாட்டுப் பணமும், உயர் அந்தஸ்தும், போட்டிருக்கிற உடுப்புகளும் மூடிமறைக்கிறதென்ற கற்பனை வாதத்தில் மூழ்கியிருப்பதே ஆகும். ஆனால், இது இவர்களுக்கு நிரந்தரமல்ல.

ஏனென்றால், எமது இனம் இன்னமும் தனது தாயக மீட்புப் போரிலிருந்து விடுதலை பெறவில்லை. இந்த விடுதலைக்காக இனிவரும் காலங்களில் நாங்கள் போராடும் போது எமக்கான இழப்புக்கள் இன்னமும் அதிகமாக இருக்கலாமென்றே நான் நினைக்கின்றேன்.

நிலைமை இப்படியிருக்க, இந்த மண்ணில் போரினால் பாதிக்கப்பட்டவர்களின் அங்கக் குறைபாடுகளை பலபேர் முன்னிலையில் வர்ணிப்பதும், உரத்துச் சொல்லிக் காட்டுவதும் அது அவர்களின் அறியாமையில் ஊறிய பலவீனமே ஒழிய வேறில்லை. இவர்கள் எல்லாம் பரிதாபத்துக் குரியவர்கள். ஏனென்றால், இப்படிப்பட்ட மனிதர்களுக்காக காலம் காத்துக் கொண்டிருக்கிறது ஒரு நியாயத் தீர்ப்பு வழங்குவதற்கு.....

நண்பன் இன்னும் பல விடயங்களைக் கூறிக்கொண்டே வந்தான். கேட்பதற்கு சந்தோசமாக இருந்தது. காரணம்- அவன் இந்தச் சமுதாயத்தை... போரியல் வாழ்வில் புறக்கணிக்கப்பட்ட உள்ளங்களை... மேம்போக்காக வாழும் மனிதர்களை... நன்றாககே புரிந்தும், இனம் கண்டும் வைத்திருந்தான்.

இப்போது, அவனை நினைக்கவும் சந்தோசமாக இருந்தது எனக்கு. ✦




● கடந்த 02.08.2002, வெள்ளிநாதத்தில் வெளியான ஆதிலட்சுமி சிவகுமார் அவர்கள் எழுதிய 'வேனிற் காலப் பறவைகளும் ஒரு விருட்சமும்' என்ற சிறுகதையின் கருவானது, சமகால நிகழ்வோடு சம்பந்தப்பட்டதாக இருப்பினும், கதையின் தொடக்கத்திலும், முடிவிலும் வரும் அந்த 'அரியகுட்டி' எனும் நாய் அதிகம் பேசப்படாத நல்லதொரு பாத்திர வார்ப்பாக அமைகின்றது.

கதையில் வரும் ஆறறிவு மனிதர்களைவிட, ஏன் வெளி உலகில் இருப்பவர்களையும்விட, அந்த ஐந்தறிவு நிரம்பிய குட்டி மிருகத்தினூடாக 'நன்றி' என்பது என்ன வென்பதை கதாசிரியை மெதுவாக அதேசமயம் அழுத்தமாக சூசகமாகத் தெரிவித்திருப்பது சிந்திக்கக்கூடியதாக இருக்கிறது.

போடும் சோற்றுக்கும், காட்டும் அன்புக்கும் கடைசிவரை மனிதனைவிட மிருகங்கள் மேலானது என்பதைக் கதையில் சொல்லியிருப்பது நன்றாக இருக்கிறது.

'அரியகுட்டி' நன்றிக்கு இலக்கணமாய், அன்புக்கு விசுவாசமாய் தன் எசமானின் கால்களை நக்குவதே முடிவுறும் கதையின் தனிச்சிறப்பாக அமைகின்றது.

இச் சிறுகதைக்கு 'அரியகுட்டி' என மேற்கோளிடப்பட்டு தலையங்கம் அமைந்திருக்குமானால் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது பொதுவான அபிப்பிராயம்.

கதாசிரியை ஆதிலட்சுமி சிவகுமாருக்கு எனது பாராட்டுகள்! சிந்திக்கக்கூடிய ஒரு சிறுகதை யொன்றை எழுதியதற்காக.

*அம்மான்*
*புதுக்குடியிருப்பு*

● தங்கள் 26.07.2002, இதழில் எனது 'அணிதிரளும் சிறு அலைகள' நாவல் நூலின் நோக்கைக் கண்ணுற்றேன்.

உங்கள் நோக்கில் சொல்லப்பட்ட குறைபாடுகள் அதன் மூலப்பிரதியில் குறைவாகவே இருக்கும் எனக் கருதுகிறேன்.

ஏனெனில் நூலாக்கம் பெறுகையில் இறுக்கம் கருதியும், பக்கங்கள் கூடினால் அச்சிடும் செலவினம் அதிகரிக்கும் என்பதாலும் என் பலத்த சத்திர சிகிச்சைக்கு உட்பட்டே நூலாக வந்துள்ள நாவல் இருக்கிறது.

இன்னமும் 25 பக்கங்களுக்கு மேல் அந்த நாவல் அமையும்: இரண்டாம் பதிப்பென்பது வருமாகில் அவையும் சேர்க்கப்பட்டு வெளிவரும் என எதிர் பார்க்கிறேன்.

எனினும் எனது நாவல் பற்றிய தங்கள் நோக்கில் தேறியுள்ளதாக தெரிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் நாவலை எழுதும்பொழுது ஒவ்வொரு அத்தியாயத்தையும் திரைப்படம் போன்று ஒளிப்பதிவு கருவியினூடாக பார்ப்பது போன்ற நோக்கிலேயே படைக்க விரும்பி அவ்வாறே எழுதிமுடித்தேன்.

ஒவ்வொன்றையும் ஒவ்வொரு உத்திமூலமாக நகர்த்துவதுதானே கலை,இலக்கியத்திற்கு அழகு! அதனாலேயே அப்படி நகர்த்தியுள்ளேன்.

தேவிபரமலிங்கம்,
யாழ்ப்பாணம்

**வாசகர்களுக்கு...**

**வெள்ளி நாதம் பற்றிய உங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை, மனப்பதிவுகளை எமக்கு எழுதி அனுப்புங்கள்**

சிந்திப்பதற்கு ஒரு நொடிமுன்பே சொற்களைச் சொல்லி விடுபவர் சிலர் உண்டு ● - ஜீன் தெ லாப்ருயோ

## சிறுகதை



# பயன் இடைவெளி

**ஏழு** வருடங்களுக்குப் பின்பு அந்த வீதிகளில் உலாவுவதில் ஒரு ஏக்கத்துடன் கூடிய நிம்மதி. வீதிகளில் மாற்றம் தெரிகிறது. புழுதியில்லை. அதேபோல வீதியோரங்களில் மரங்களுமில்லை. முன்னர் வீதி நெடுகிலும் நிழல். இப்போ...? வெய்யில் மட்டும்தான் கூடவே வருகிறது.

ஊரிலேயிருந்து உறவினர்களின் கடிதப்படி எங்கள் வீட்டுக்கோ வளவிற்கோ எந்தவிதமான சேதமும் இல்லை. ஆனால் அனேகரின் வீடுகள் போல சுவரில் காயங்கள், ஓடுகள் சிலது உடைவு என்று மட்டும் எழுதினார்கள். இது ஒரு நிம்மதி.

வன்னியிலிருந்து முகமாலையூடாக செல்லும் போது வழி நெடுகிலும் காவலரண்கள். அவையெல்லாம் மிகமிக நேர்த்தியாக, ஒரேயளவான பனங்குற்றி, தென்னங்குற்றிகளாலும், மணல்மூடைகளாலும் அடுக்கப்பட்டிருந்தன.

பனங்குற்றிகளைக் காணும்போது எனது வீட்டு வளவில், அயலில் நிற்கும் பனைகளே நினைவில் வந்தன. பனையும், எமது வாழ்வும் பின்னிப் பிணைந்த விதம், தறியுண்ட பனைகளைப் பார்க்கையில் இதயம் நிற்குமாப்போல இருந்தன.

பனையைப் பார்த்து அதன் பயன்கள் எண்ணூறினை ஒருவன் எப்போதோ பாடியிருக்கிறான் என்பதும், அவனுக்கு, எண்ணூறல்ல எண்ணூற்றொன்று என்று மறுத்து எண்ணூற்றோராவது பயனாக "எதிரியேவும் குண்டுகளைத் தாங்கி எம்மைக் காக்கிறது" எனும் பொருளில் தற்காலத் தவனொருவன் பாடியதும் நினைவுக்கு வந்தது. கூடவே, (தொண்ணூறுகளிலாயிருக்க வேண்டும்) எனது பாடசாலைக் காலத்தில் கட்டுரையொன்றில் "மூங்கில் நாடாக சீனா இருக்குமாயின் பனைநாடாக ஈழம் இருக்கும்" என்று பனை தொடர்பாக எழுதி பலரதும் பாராட்டும், பரிசும் பெற்றதும் நினைவிற்கு வந்தன.

எங்களிடமிருந்த ஒரு தனிப்பனையே ஓராயிரம் கதை கொண்டது. பனங்கூடலாயிருந்திருப்பின்...? பனை பற்றி, அனேகமான எழுத்தாளர்களின் படைப்புகளில் இடம் பெறுவதும் குறிப்பிடத்தக்கது. எங்களின் தனிப்பனையைச் சுற்றியே எனது இளமை நினைவுகள் அடிக்கடி வட்டமடிப்பது வழமை.

◂ ✦ ◂

எனக்கு நினைவு தெரிஞ்ச நாளிலயிருந்து அந்தப்பனையும் எங்களில ஓராள்தான். அது இப்ப நிக்குதோ...? இல்லாட்டி...? நினைக்கவே நெஞ்சடைக்கிற மாதிரியான உணர்வு.

சீ! முத்தத்தில ஒரு பக்கமா தனிப்பனைதானே! தறிபட்டிருக்காது. பனங்காணியளிலதானே வெட்டுறாங்கள். எனி ஆக்கள் எங்கட வீட்டில இருக்கிறதால பாதுகாப்பா நிக்கும்.

நெடுநெடுவெண்டு நெடுத்து, தலை சீவாதமாதிரிப் பறக்கப் பறக்க நிமிந்து நிக்கும். அண்ணாந்து பாத்தா நிச்சயமாக் கழுத்தில நோவரும். அவ்வளவு உயரம்.

வானம்- நாங்கள் வானம் எண்ணுறது முகிலத்தான்- சிக்குப்படாம, தடக்குப்படாம வேகமாப் போறதைப் படுத்திருந்து பாக்கிறதே சலிக்காத பொழுது போக்குத்தான்.

எங்கட வளவில இது ஒண்டுதான் நிக்குது. அடிவளவுக்குள்ள அடிக்குத்திரண்டொண்டு இன்னமும் நிண்டது. அது, முந்தி- முந்தி அதிலயும் பனை நிண்டதுக்கான அடையாளந்தான்.

பக்கத்து வளவு கிட்டத்தட்ட பனங்கூடல் எண்டு சொல்லுற அளவுக்கு பனையளோட நிண்டது. ஆனா அங்கால நாங்கள் போறேல்ல. பாம்புகள், கொடுக்கனுகள் கிடக்கும் எண்டு அப்பப்பா சொல்லுறவர்.

அது பொய்யெண்டு பிறகு பிறகு தெரிஞ்சு போச்செண்டாலும் ஆரம்பத்தில சரியான பயம். ஏதேனும் தேவைக்கு அப்பா அல்லது அண்ணா மட்டும் போய் வருவினம். அவை பெரிய கெட்டிக்காரர் எண்டு எங்களுக்குள்ள பெருமைப்படுவம்.

எங்கட ஒற்றைப்பனையை விட ஒண்டும் கூடுதலாச் சிறப்புப் பெறயில்லை. கூட்டமா நிக்கிறதையும் ஒரு அஞ்சாறில முட்டியள் தொங்குறதையும் தவிர. முட்டியளோட நிக்கிற பனையளைப் பாத்தா பாவமாயிருக்கும்.

கள்ளு எண்டாலே சரியான தரக்குறவாத்தான் நாங்கள் அறிஞ்சிருந்தம். கள்ளு கடவுளுக்குப் பிடிக்காது. கள்ளுக் குடிக்கிறவை நரகத்தில அரக்கர்மாரால கொடுமைப் படுத்தப்படுவினம். மொத்தத்தில கள்ளு எண்டாலே மோசமான சாமான்தான்.

அப்ப அன்னம், பன்னாடை பற்றி வகுப்பில மாணவர்களின் இயல்புகள் பற்றி ரீச்சர் படிப்பிச்சவ. அன்னம் பாலும் தண்ணியும் கலந்தாக்கூட பிரிச்சு நல்லதை அதாவது பாலைத் தனியக் குடிக்கும், எண்டவ. அன்னத்தைக் காண ஆவலாயிருந்தம். ஆனா குமரன்ர பெரியம்மா அன்னத்தத் தவிர காணக்கிடக்கேல்ல. பன்னாடை நல்ல கள்ளை வடிய விட்டுட்டு பூச்சி, புழு, கஞ்சலுகளைத் தான் வச்சிருக்கும் எண்டும் சொன்னவ.

இப்பவும் நல்ல ஞாபகம், என்னால சகிக்க முடியாம பயத்தயும் விட்டிட்டு எழும்பி, "கள்ளும் கூடாதுதானே! அதுதான் வடிஞ்சுபோக விட்டிட்டுது" எண்ட போது ரீச்சர் கொஞ்சமும் கோபப்படேல்ல. ஆனா கொஞ்சம் சங்கடப்பட்டுட்டா. சமாளிச்சு "அது... தேவையானது கள்ளோ பூச்சியோ? கள்ளில்லோ? அதுதான் பன்னாடையை உதாரணம் சொல்லுறது சரியல்லோ?" எண்டா. ரீச்சருக்கும் கொஞ்சம் பெருமையும் கூட. போன மாதமாத்தானிருக்கும் ஒருநாள் கள்ளுண்ணக் கூடாது எண்டது பற்றியும் படிப்பிச்சவா.

இதுகளுக்கெல்லாம் பிறகு எனக்கு சின்னமுத்து வருத்தம் வந்தது. அப்ப சின்னாச்சிக்கிழவி பாத்திட்டு "தனிப்பனைக்கள்ளு விடியவாக் குடிக்கோணும்" எண்டதோட விடாம, பக்கத்தில பனையில கள்ளெடுக்க முருகனப்பு வாறநேரம் அவரோட கதைச்சு ஒழுங்கும் படுத்திப் போட்டா.

சின்னாச்சிக்கிழவியும் ஒரு முக்கியமான ஆள்தான். இப்ப கள்ளுக்கதை முடியட்டும் சொல்லுறன். முருகனப்பு காலமை, பின்னேரம் தவறாம முட்டிகிடக்கிற ஒவ்வொரு மரமா ஏறியிறங்குவார். சில நேரங்களில "டொக்கு.. டொக்கு.." எண்டு தட்டியும் கேக்கிறது. வெறுங்காலோட அந்த வளவுக்க நடக்கவும், உயரிப் பனையில வட்டுக்குள்ள பிடிக்காம நிண்டு ஓலை, நுங்கு அதுகள் வெட்டவும் துணிச்சலுள்ளவர். நல்லவர். முந்தியும் சில நேரம் வேலிக்கால கூப்பிட்டு நுங்கு தாறவர். நாங்கள் அருவருத்து கிட்டப் போறேல்ல. ஆனா

ஆனாலும் வழக்கம் போல அப்பப்பா எங்கயோ திறம் பினாட்டுக் கொண்டு வந்தார். அம்மம்மா மூடல் பெட்டிக்க வைச்சு புகைக்கூட்டில கட்டித் தொங்கக் கட்டிவிட்டா. பிறகென்ன, பயறு போட்ட கஞ்சியோட, பழஞ்சோத்தோட... வாயூறும்.



கழுவிப்போட்டு சீவினாப் பிறகு நுங்கு நல்லாக் குடிப்பம். அப்ப முருகனப்பு விட்ட கள்ளு வாங்கிறது எண்டதும், குடிக்க வேணும் எண்டதும் வீட்டில பெரிய சண்டை.

இரண்டு மூண்டு வீடு தள்ளியிருக்கிற டொக்ரர்மாமா வந்து "குடிச்சாத்தான் வருத்தம் மாறும். மருந்துதானே நீ குடிக்கத்தான் வேணும்." எண்டிட்டார். அவர் அடிக்கடி வீட்ட வாறவர். வந்தா "இண்டைக்கு என்ன சாப்பிட்டது? காலமை எத்தினை மணிக்கு பல்லு விளக்கினது?" எண்டெல்லாம் விசாரிச்சு, இலைக்கறியேதும் சாப்பிடேல்லை எண்டா பேசுறவர். அதோட ஏதும் வருத்தமெண்டு போனாலும் அப்பவும் நினைவில வைச்சு பேசுவர். ஆக்களுக்கு முன்னாலை யெல்லாம் பகிடி பண்ணுவர். இப்ப அவரே சொல்லிப் போட்டார்.

காலமை ஆறு ஆறரைக்கெல்லாம் யானைச் சோடாப் போத்தலுக்க நிறையக் கள்ளு வேலிப் பொட்டுக்க வைச்சுப்போட்டு "தம்பீ!" எண்டு போட்டு முருகனப்பு போகுடுவர். எடுத்து தேயிலை வடியில வடிச்சு கிளாசில விட்டு அம்மா தந்தா. மூக்கைப் பிடிச்சுக்கொண்டு ஒருவாய் குடிச்சுப்போட்டு அழுததும், பிறகும் மிச்சமும் குடிக்கப் பண்ணிப்போட்டுதான் அந்த இடத்தை விட்டுப்போனா. ரண்டொரு நாளயில மூக்குப் பிடிக்காம குடிக்கப் பழகிவிட்டன்.

**கை-சரவணன்**

சீவித்தாற முருகனப்பு குடிக்கிறதேயில்லை எண்டது பெரிய ஆச்சரியமாயும் நம்பவே முடியாமலும் இருந்துது. பிறகு ஒரு பதினைஞ்சு இருபது நாளில "இனிக்காணும்" எண்டு அவராயே நிறுத்திப் போட்டார். அதுக்குப் பிறகு அவரில எனக்கு ஒரு மதிப்பும் மரியாதயும் வந்திட்டுது. பிறகு பிறகு றோட்டில கண்டாலும் நிண்டு கதைக்கிறனான்.

எங்கட தனிப்பனையில ஒருதரையும் ஏறவே விடமாட்டார் அப்பப்பா. இவரும் பனையைப் போலத்தான். கறுவல். நெடுவல் ஆனா தலைசீவாத பனையும் தலை மொட்டையான இவரும் இது ஒண்டிலதான் வேறுபட்டினம்.

மடிக்குள்ள பனையோலயால செய்த கொட்டப் பெட்டி எப்பவும் இருக்கும். அதுக்குள்ள, காசு, கடையில் துண்டுகள், பொயிலைத்துண்டு எல்லாம் இருக்கும். மெதுவா கொட்டப் பெட்டிய எடுத்தா, சிரிச்சுப் போட்டு பக்கத்துக் கடைமட்டும் கூட்டிப்போய் சீரகமுட்டைஇனிப்பு, தோடஞ்சுளஇனிப்பு எல்லாம் வாங்கித்தருவார். வளர வளர பென்சில், அழிறப்பர், ஔவையார் பாடல்கள் எல்லாம் வேண்டித்



தருவர்.

அவர் சொல்லுறவர், தான் சரியான சின்னனா எங்களப்போல இருக்கேக்க தன்ர பாட்டா அஞ்சாறு பனங்கொட்டை போட்டவராம். அதில இப்பவும் தப்பிச்சு நிக்கிறது உதுதானாம். மற்றதுகள் எங்கடவீடு கட்டுற நேரம் அதுக்குள்ள வந்ததால தறிபட்டுப் போச்சாம். ஆனா "முகட்டு வளையைப் பார்! அதுகள் தான்.. பனையில்ல.. இரும்பு" எண்டு சொல்லிக் கையை முறுக்கிப் பொத்திக் காட்டேக்க நரம்புகளெல்லாம் தோலுக்குள்ளால வந்திடுமோ எண்டு பயப்பிடுவன்.

தன்ர தேகம் குரக்கன், ஒடியல், பினாட்டு எண்டு எல்லாத்தாலயும் தான் இப்படி எண்டு வேற அடிக்கடி சொல்லிக்கொள்வார். மனுசன் நானறிஞ்சமட்டில ஆசுப்பத்திரிப் பக்கம் வருத்தமெண்டு போகேல்ல. கடைசி வரைக்கும் ஆசுபத்திரிக்குப் போறதையே மதிப்புக் குறைவா நினைச்ச ஒரு மனிசனெண்டா அது இவராத்தானிருப்பார்.

இவர், இந்தப்பனையில ஒருதரையும் கண்டபடி ஏற விடமாட்டார். சீவவும் விடமாட்டார். ஒண்டவிட்டொரு வருசம் ஓலை வெட்டமட்டும் முருகனப்பு ஏறியிறங்கும். கீழ நிண்டு பாத்துக் கொண்டே நிப்பார். "தனிப்பனை, காத்துச் சுழட்டும்! கவனம் முருகா" எண்டு இடைக்கிடை சொல்லுவார். உண்மையும்தான். காத்துக்குச் சுழண்டு ஆடும். "விழுந்து போடுமோ...?" எண்டு பயப்பிடுவம். ஆனா விழாது.

ஓலைவெட்ட முருகனப்பு ஏற ஆயத்தப்படுத்தேக்குள்ளயே அப்பப்பாவை "நுங்கு.. நுங்கு.." எண்டு நாங்கள் ஆய்க்கினைப் படுத்தத் துவங்கிவிடுவம். ஒண்டும் பேசாம ஓலை வெட்டுறதையே பார்த்துக் கொண்டு நிப்பார். "காத்தோட ஓலைவரும்.. ஓடுங்கோ.. வந்து குத்தினா துலைஞ்சியள்.. ஓடுங்கோ. அங்காலை.." எண்டு கலைச்சாலும் கடைசியா ரண்டொரு குலை நுங்கு வெட்டுவிச்சுத் தருவார்.

தானே இருந்து வடிவாச்சீவி கண்கண்ணாத் தட்டித்தருவார். நாங்கள் குடிக்கிறதைப் பாத்து பூரிப்பார். தன்ர வயித்தை திருப்தியோட தடவிக் கொள்ளுவார். பிறகு 'குடிச்சு முடிய சீவிச் சீவி ஆட்டுக்கு வைப்பார்.

மூண்டு கண்நுங்கு. மூண்டு விதை. தோலுக்கும் விதையளுக்கும் இடைவெளியதிகம். முழுதுமே கழிதான். சொந்தக்காரரெல்லாம் தேடிவந்து பணியாரத்துக்கு கொண்டு போகும் பனம்பழம்...

அம்மம்மா பக்குவமாச் சுட்டுத்தருவ. நாங்கள் உடுப்பில பிரட்டினாலும் கோவிக்கமாட்டா. ஏனெண்டா உடுப்பிலயொண்டும் கயர் பிடியாது. பினாட்டுப் போடுற ஆசை வந்து தட்டு இழைச்சு பினாட்டுப் போட்டம். எங்கட சிவப்பியன்ர கண்டு அறுத்தது தெரியாம தேடித்திரிய தட்டோட பினாட்டைத் திண்டபடி எங்களைப் பாத்த பார்வை கண்ணுக்க இப்பவும் நிக்குது. தலையை ஆட்டியாட்டி ரசிச்சுத் திண்டுது. எங்களுக்குச் சரியான கவலையும் கோவமும். அதுக்குப்பிறகு பினாட்டுப் போடுறேல்லை.

ஆனாலும் வழக்கம் போல அப்பப்பா எங்கயோ திறம் பினாட்டுக் கொண்டு வந்தார். அம்மம்மா மூடல் பெட்டிக்க வைச்சு புகைக்கூட்டில கட்டித் தொங்கக் கட்டிவிட்டா. பிறகென்ன, பயறு போட்ட

கஞ்சியோட, பழஞ்சோத்தோட.... வாயூறும்.

அம்மம்மா ஆருக்கும் பனம்பழம் குடுக்கிறதெண்டா கொட்டை திரும்பவும் தரவேணு மெண்ட நிபந்தனையோட தான். அனேகமா பணியாரமும் பனங்கொட்டையும் வரும். அதுகளைக் குவிச்சு வைச்சு பாத்தி போடுவம். இதுக்கு பக்கத்து வளவுக்குள்ள பொட்டுக்கால போயும் அண்ணா எடுக்கிறவர். அந்த வளவுக்க வேற ஆக்களும் எடுக்கிறவை.

கிழங்கு கிண்டினா பிறகென்ன? கொண்டாட்டந்தான். புழுக் கொடியல், ஒடியல் போடுறது அம்மம்மா தலைமேல அம்மா, அக்காசெய்வினம். அக்கான்ர வாய் ஆடிக்கொண்டே இருக்கும்.

பனங்கிழங்கில மிளகு போட்ட துவையல் எனக்குப் பிடியாது. வாய், தொண்டை எல்லாம் எரியும். சக்கரை தேங்காய் போட்டது அப்பப்பாவுக்குப் பிடியாது. அதால இடிக்கேக்குள்ள கொஞ்சம் பிறம்பா எடுத்து எனக்கு மட்டும் சக்கரை தேங்காய் போடுவினம். ஆனாலும் ஒரு பிடி உருண்டை மிளகு போட்டது சாப்பிடுறது கட்டாயமாக்கப் பட்டிருக்கும். இல்லாட்டி செமிக்காம வயித்துக்க குத்தும் எண்டு வெருட்டுவினம்.

ஓலை வெட்டேக்க ஓலைச்சார்வும் வெட்டுப்பட்டு வரும். அதைப் பிளந்து விரிச்சு அம்மம்மா வேலிக்கதியால்ல தொங்கவிடுவா. ஒவ்வருநாளும் தடவித்தடவிப் பாப்பா. பிறகு வடிவாச் சுருக்கிக்கட்டி பத்தாசிப் பெட்டிக்கு மேலயோ அல்லது பறணிலையோ போட்டுவைப்பா.

இதுக்கிடையில சின்னாச்சிக் கிழவி கண்டா சண்டை பிடிச்சுக் கொண்டு போகுடும். எங்களுக்கு ஆயிரங் கதை சொல்லிப் பேய்க்காட்டுற அம்மம்மா மடங்கிறதெண்டாச் சின்னாச்சிக் கிழவியிட்டதான். அவ அம்மம்மாக்கும் மேலால கதைசொல்லிப் போட்டு ஓலைச் சார்வு, பனம்பழம், தென்னோலை, மாம்பழம், பாக்கு எண்டு வாற நேரமெல்லாம் ஏதாலும் கொண்டு போகிடும்.

“தென்னோலை இழுத்துக் கொண்டு போனா கைவிளக் குமாறு ஒண்டு தரும். ஓலைச்சார்வு கொண்டு போனா நீத்துப்பெட்டி, பெட்டி எண்டு ஏதாலும் தரும்.” எண்டு அம்மம்மா ஆறுதல்படுவ. அது சமாளிப்பு எண்டு எங்களுக்கு விளங்க நாள் செண்டுது.

உண்மையாயே சின்னாச் சிக்கிழவி வலு சுறுசுறுப்பு. ஆனா ஆசைகூட. எதைக் கண்டாலும் விடுப்புக் கேக்கும். பிறகு அதிலயும் ஒண்டிரண்டை கொண்டும் போகிடும். ஒரு நிமிசமும் சும்மா இராது. ஈக்குக் கிழிக்கும். ஓலை வாந்து ஏதாலும் இழைக்கும்.

“எட நீ கிடந்து மூத்திரம் வடிச்ச தடுக்கும் நானிழைச்சது தான்ரா!” எண்டு, நானேதும் சேட்டைவிட்டா செல்லமா ஏசும். மனிசிக்கு கை வைத்தியமும் கொஞ்சம் தெரியும். அதாலதான் என்னைக் கள்ளுக் குடிக்கச் சொன்னது.

ஆனா கொண்டுபோற ஓலைச்சார்வில நீத்துப்பெட்டி, பெட்டியள் எண்டு ஏதும் தரும். எங்களுக்குக் கழிவு ஓலையில குட்டானுகளும் இழைச்சுத்தரும். கிலுக்கட்டிகூட செய்யிறதைப் பாத்திருக்கிறன். அப்பப்பா இவவை “சின்னாச்சி” எண்டுதான் கூப்பிடுகிறவர். அவருக்கு சகோதரி முறைதானாம். அவற்றை மடிக்குள்ள கிடக்கிற கொட்டப்பெட்டி இவ செய்ததுதானாம்.

மனுசிக்கு முதுகு கொஞ்சம் வளைஞ்சு போச்சு. பல்லுகளும் இல்ல. மற்றப்படி உசாருக்குக் குறைவில்லை. இடிச்ச வெத்தில பாக்குக்காக மனுசியின்ர எச்சில் வாயால கொஞ்சுறத கனக்கத்தரம் பொறுத்திருக்கிறன், எண்ணுறது முக்கியமானது.

இப்ப கண்டபடி தறிச்சுக் கொட்டுறாங்கள். பனையின்ர முக்கியம் தெரியுமே?

◂✦◂

வழிநெடுகிலும் நினைவில் நினைத்தபடி விரைந்ததில் விபத்துக்கள் எதிலும் சிக்காதது எனது நல்ல காலமே தான். இல்லாவிட்டால் எனது ஊரும் வந்து வீட்டு வாயிலும் வரும்வரை பழைய நினைவுகளில் ஓடியிருக்கிறேனே. அதுவும் எமது பனையோடிணைந்த சம்பவங்கள் ஏராளமெனினும் எனது மிக மிக இளமை நினைவுகள் மீளவே நீண்டதூரம் கடந்து விட்டது. முழுநினைவையும் மீட்க வேண்டுமாயின் உலகைச்சுற்றிப் பலதடவைகள் நிச்சயமாய்ச் சுற்ற முடியும்.

வீடு ஏதோ வீடாக இருக்கிறது. சொந்தக்காரர் இல்லை என்ற குறை ஒன்றைத்தவிர. வீட்டினைச் சூழவிருந்த வேலி இல்லை. முன்னே நின்ற குறோட்டன்கள் இல்லை. கிணற்றடியில் சிறுபிள்ளையாக நின்ற கமுகு நெடுத்திருந்தது. மாமரத்தில் பிஞ்சுகளும் அணில்களும் இருந்தன. தானும் இருப்பதாய் குக்குறுப்பான் குரல் காட்டிற்று.

பக்கத்துவளவு அடிக்குற்றி களோடு வெறுமை காட்டிற்று.

பனையின் நினைவு மீளவும் திரும்பிற்று. என்னைக் கேளாமலேயே கால்களின் இயக்கம் விரைவுற்றது. நீலவானம்... பரட்டைத்தலையோடு பனை...?? காணவில்லை. நெஞ்சு திடுமென ஏங்கிற்று. பார்வை கீழிறங்கிற்று. அடிக்குற்றி குந்திக் கொண்டிருந்தது. சின்னாச் சிக்கிழவி குந்தியதைப்போல கம்பீரமாய். அயலில் தறியல் சிராய்கள், கறுப்பாய் தமது வைரத்தை விளம்பின. சுற்றும் நோக்குகையில் எட்டவாக பரட்டைத்தலையில் வாடிய நுங்குகள், குலை குலையாக...

தலை சுற்றுவது போலிருந்தது. கால்களின் கீழே பூமி நடுங்குவது போலவும், எங்கோ யாருமற்ற, எதுவுமற்ற சூனியவெளிக்குள் தனித்து விடப்பட்டது போலவுமிருந்தது. ‘‘போன கிழமைதான் உங்கால உந்த பின் சென்றி போடுறதுக்கு கேட்டுக் கேள்வியில்லாம...’’ வீட்டில் குடியிருப்பவரின் மீதிக்கதை கேட்கவில்லை. எமது வீட்டுக்காணியின் பின் காணி மூலையிலும் புதிதாய் அமைக்கப் பட்டிருந்த காவலரண் கண்களுள் உறுத்திற்று.

“படைவிலக வேணுமெண்டது... புதிசு புதிசாப் போடுறாங்கள்...?” மீண்டும் அவர். பதிலேதும் கூறவில்லை. தறிபட்ட பனையின் அடிக்குற்றி மீது மீண்டும் என் பார்வை சென்றது.

அருகில் ஐந்தாறு வடலிகள், கையசைத்தன, கருக்கோடும், நம்பிக்கையோடும் ஆரோக்கியமாய் நின்றன. நம்பிக்கை துளிர்த்தது.

“என்ர பேரப்பிள்ளையளுக்கு இந்தப் பனையள் பயன்படும்,... ஆனா பிள்ளையளுக்கு...?’’ பதிலேதுமில்லாத கேள்வி.

◆



# புலமைப் பரிசில் பரீட்சை

நான்கு மணியென்றானதும்
நச்சரித்துத் தொலைக்கும்
மணிக்கூட்டின் அலாரம்

எப்போதுமே
படி படியென்று
புறுபுறுத்துத் தள்ளும்
அம்மாவின் பாசமான அதிகாரம்

பிழையாய் செய்ததற்காய்
பிரம்பு தந்த காயங்கள்
கன்றிப் போய் கிடக்குமென்
மென்மையான உள்ளங்கை

தலைக்குமேல் நிரம்பிக்கிடக்கும்
வீட்டுப்பாடங்கள்
தடுக்கி விழுத்தப்பார்க்கும்
புத்தகப் பையின் பாரம்
விளையாட்டு நேரங்களை
விழுங்கித்தள்ளிவிடும்
மாலை நேர வகுப்புக்கள்

சோர்ந்துபோய்க் கிடக்கும்
என் உடம்பை
சாய்ந்து இருக்க விடாமல்
பாய்ந்தோடும் மணிக்கூட்டுக் கம்பிகள்

தூக்கத்தில் பாதியை
ஏப்பமிட்டுத் தொலைக்கும்
தனிப்பட்ட இரவு வகுப்புக்கள்

மாரியில் மழை நிற்கக்கூடியதாய்
ஆசிரியர் போடும்
மோதிரக்கைக் குட்டு
திட்டுக்களை வாரிவழங்கும்
ஆசிரியர்களின்
அட்சய உதடுகள்

'கனவிலும் வந்துபோகும்
“பாஸ் பண்ணாவிடில்
முதுகுத்தோல் உரிப்பேனெனும்”
அப்பாவின் செல்லமான வெருட்டல்..

ஐந்தாறு மாதமாய்
நான் அமர்ந்தே ஆடாத
அவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும்
என் மாமரத்து ஊஞ்சல்

உலையில் போட்ட இரும்பாய்
கொதிக்கிறது மனசு

இனியென்ன
இத்தனைக்கும் முடிவுகான
பத்தாம் திகதி வருகிறது
புலமைப் பரிசில் பரீட்சை.



யாழ்வீரன்

# சமாதானம்



போரின் ஓய்வென்றும்
போருக்கான ஒழுங்கென்றும்
போரியல் பேர் வழிகள்
அரசியல் ஆசாமிகள்
அறியாமலா சொன்னார்கள் அன்று.

ஆட்காட்டிக்குரலை
தேசிய கீதமெனப் பாடும் சமாதானம்
அறியாத மானிடருக்கு
தேன் மதுரக் குயிலின் குரல்தான்

கடலைக் காவலனை
சற்று ஓய்வெடுக்க உத்தரவிடும்
இருண்டகத் தலைமை – இந்த
இனம் புரியாத சமாதானம்

முகவுரையில் முகம் மலரச் செய்யும்
முடிவுரையில் முகத்தையே கொய்யும்
நிறத்தில் வெள்ளை வண்ணம்
உளத்தில் பொய்மை எண்ணம்

வெடியை அருளாக்கி
அழிவைப் பொருளாக்கும்
அரக்கப்போரின் அன்புக் காதல் – இன்று
ஆராரோ பாடித்தூங்க வைக்கும் சமாதானம்.

கந்தனுக்கு.....
வானம் தொட்டஅமைதி கானம் சமாதானம்
விந்தனுக்கு...
போரில் வெட்டத் தீட்டும் சாதனம் சமாதானம்.

கலத்துக்கு முகம் சுழித்து
பலவீனத்துக்குப் பல் இழித்து
பாசாங்கு காட்டும் பருவகால சமாதானம்,
பார்வைக்கு தாய் போன்றது – அதன்
போர்வைக்குள் பேய் தூங்குது.

எக்காலச் சமாதானம் எமக்கு!
வசந்தகாலப் பிச்சை போடுது – இந்தா
வாழ்வுரிமை என எச்சம் போடுது.
உரிமை... பிச்சையுமல்ல எச்சமுமல்ல – வீரர்
உயிராலே உணர்வாலே உயர்ந்த உச்சம்

கடலான சுதந்திரத்தில் ஒரு நீர்த் துளியை
உரிமை என சமாதானம் சன்மானம் தருவதா.
அதை மகிழ்வோடு கைநீட்டிப்பெறுவதா.
பெறும் எண்ணம் எவருக்கும் உண்டெனில்
கல்லறை மீது ஏறி நின்று பெறுங்கள்.
கல்லறைகள் யாவும் அற்பத்துக்காய் ஆனவையல்ல
சொர்க்கத்துக்காய் முளைத்தவை.
சொந்தத்துக்காய் உழைத்தவை.

பொய்மையைக் காப்பாற்றுவதற்கு
பட்டிமன்றங்கள் வேண்டாம்
சமாதானம் மெய் என்று
சாட்சிகளும் வேண்டாம்.
எம்மை நாம் ஆளும் உரிமை எமக்காகட்டும்.
எங்களின் உள்ளம் அதற்காய்ப் போகட்டும்

-சி.செம்பருதி

# முரட்டுத்தனமான பார்வை



முன்பு என் பார்வை முரட்டுத்தனமாகவே இருந்தது
ஏனெனில் வெளிச்சப் பொட்டென்னை வெருட்டியது
என்னைச் சுற்றிவர முகம்தெரியா வேலிகள்
சிவப்பும் கறுப்பும்தான் என்கண்ணில் எப்போதும் படும்
கதைகளில் வரும் எருமை வாகனமே எங்கும் ஊர்வலம்
கண்ணீரும் சோறும் தான் என்னுரிமைச் செல்வம்
கால் மாறி நடந்தால் கூட மேல்மாடிதான்
கதையில் தடக்கிருப்பின் என் கதையே அவ்வளவுதான்
காலத்தை நொந்து கழிந்தது அந்த இருள்
இப்போ எல்லாமே வெளிச்சம்
வெள்ளைப் புறாக்கள்தான் என் வீட்டு முற்றத்தில் மேயும்
அந்த வல்லூறுகள் வருவதேயில்லை.
நல்ல சகுனத்தில்
விட்டு முற்றத்தில் மாக்கோலம்
ஊர்வன எல்லாம் என்னை உணர்ந்தன.
என் கண்ணில் இப்போ ஆனந்தக் கண்ணீர்
ஏனெனில்
எட்டித்தெரிந்த வெளிச்சப்பொட்டு
என் வாசலெங்கும் இப்போ
பட்டுத் தெறிப்பதால்

– ஓவியநாதன் –

# யாழ்ப்பாணத்தில் வியாபாரமாகும் கல்வி மீளக்குடியமர்வோர் எதிர்கொள்ளும் நெருக்கடி

**– ஞாபகன் –**



**சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இடம் பெயர்ந்து வன்னியில் சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து திரும்பிவரும் மக்கள் மீண்டும் இவ்வாறு பாதிக்கப்படுவது கல்வி வியாபாரமாகிவிட்ட சூழலின் பிரதிபலிப்பு எனவே எண்ணத் தோன்றுகின்றது.**

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பின்பு யாழ். குடாநாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. ஏப்ரல் 8ம் திகதி ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதன் மூலம் யாழ்ப்பாணத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் மாற்றமடைந்திருக்கின்றது என்பது நகர்ப்பகுதிக்குச் சென்றுவரும் எவருக்கும் புரியும்.

ஒப்பீட்டளவில் குடாநாட்டில் மக்கள் தொகை ஏப்ரல் மாதத்தை அடுத்து வந்த காலத்தில் உயர்ந்திருக்கிறது வாகனங்களின் போக்குவரத்து பிரமிப்பூட்டுவதாய் உள்ளது. புதிய புதிய வியாபாரங்கள் தொடங்கி விட்டிருக்கின்றன. மக்கள் தொகை யாழ்ப்பாணத்தில் இப்போது கூடியிருப்பதன் அடிப்படையிலேயே இயல்பு வாழ்க்கை மாற்றம் கண்டிருக்கிறது. இந்த மாற்றம் அநேகமாக முன்னேற்றத்தை நோக்கியது என்றே மக்கள் நம்புகிறார்கள்.

சூரியக்கதிர் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து ஏழாண்டுகாலம் விடுதலைக்கான வாழ்வுக்குட்பட்டிருந்த மக்கள் வன்னியிலிருந்து தமது ஊர்களுக்குத் திரும்புகின்றனர். பெரும் அவல வாழ்க்கை வாழ்ந்த இவர்கள் தமது பழைய இருப்பை மீளமைக்கும் கனவுகளோடு வருகின்றனர். யாழ்ப்பாணத்துக்கே உரிய உயர்ந்த கல்வி, தமக்கான தனித்தனியான வாழ்விடம் என்ற அடிப்படைக் கனவுகள் இவர்களுக்கே உரித்தானவை.

ஆனால், இவர்களின் இந்தக் கனவுகள் யாழ்ப்பாணத்தில் வந்திறங்கிய பின்னர் அடிபட்டுப் போகின்ற வேதனை பலரால் உணரப்பட்டிருக்கிறது. அதில் முதலாவது கல்வி பற்றிய இவர்களின் எதிர்பார்ப்பின் ஊடான முயற்சி பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பதாகப் போய்விடுவதுதான்.

யாழ்ப்பாணம் கல்வியை வாழ்வின் மூலதனமாகக் கொண்ட அதேவேளை அதனை வியாபாரமாகவும் ஆக்கிக் கொண்டுவிட்ட துரதிஷ்டத்துக்குரியது. இலவசக் கல்வித்திட்டம் கூட இங்கு விற்பனைப் பண்டமாகப் போயிருப்பது நொந்து கெட்டுவரும் இம்மக்களுக்கு ஒரு பொறியாகவே இருக்கின்றது.

குறிப்பாக இடம்பெயர்ந்து போகும்போது கைக்குழந்தையாகவோ அல்லது பாடசாலைக்குக்குச் செல்லும் பராயமடையாத வயதுடை யதாகவோ இருந்த இப்போதைய மாணவப் பருவத்தினரின் பெற்றோர் இந்த எதிர்பார்த்திருக்க முடியாத பொறியைச் சந்திக்கின்றனர். நகரின் பிரபல பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க முயலும் போது பல ஆயிரக்கணக்கில் பணத்தைச் செலுத்த நிர்ப்பந்திக் கப்படுகின்றனர்.

95ம் ஆண்டுக்கு முன்னரும் இப்பிரபல பாடசாலைகள் இந்த நன்கொடை என்ற பெயரிலான அறவீடுகளை மேற்கொண்டன. அப்போது சிறிலங்கா அரசினால் வட-கிழக்குப் பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கப்படாமல் 'அல்லது போதியளவு வழங்கப்படாமல் இருந்தது. அதன் காரணமாக அபிவிருத்திப் பணிகளுக்கென பண அறவீடுகளை விடுதலைப்புலிகளும் அனுமதித்திருந்தனர்.

ஆனால் நிலைமை இப்போது அப்படி அல்ல கடந்த காலத்தினுள் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளுக்குப் போதுமான நிதி அரசினால் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இலவசக் கல்விக்கு முரணான இந்த அறவீடு பிரபல பாடசாலைகளில் மிக நுட்பமாக இடம் பெறுகின்றது.

ஒரு பிள்ளையை நேரடியாகக் கொண்டு சென்று பாடசாலையில் சேர்ப்பதற்கு இடம் கேட்டுவிட முடியாது அப்படிக்கேட்டால் நிச்சயம் 'இடம் இல்லை, மாணவர் தொகை அதிகமாகி விட்டது' என்ற பதிலே கிடைக்கும். இதற்கென பிரபல பாடசாலைகள் ஒவ்வொன்றிற்கும் முகவர்கள் இருக்கின்றார்கள். அவர்களூடாகத் தொடர்பு கொண்டு பாடசாலை அனுமதியைப் பெறவேண்டும். அதற்குப் பத்தாயிரம் ரூபாவுக்கு குறையாத பணம் செலுத்த வேண்டியிருக்கிறது.

இதற்கு குறித்த பாடசாலைகள் சட்டத்தின் பிடியில் சிக்கிவிடாமல் பெற்றோர் விரும்பி வழங்கும் நன்கொடை (Donation) என்ற பெயரில நுட்பமான முறையைக் கையாள்கின்றன. இதனால் இதுவரை எந்த பிரபல பாடசாலைகளும் சட்டத்தின் பிடியில் சிக்கவில்லை. அநேகமான பெற்றோர்களும் சட்டத்தின் பிடிக்குள் இப்பாடசாலைகளைத் தம் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த அச்சத்தினால் கொண்டுவர முயலவில்லை.

பெற்றோரிடம் இருந்து பணத்தை வசூலிக்கும் பாடசாலைகளில் சில அதற்குரிய பற்றுச்சீட்டைக்கூட சரியான முறையில் வழங்குவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பணம் முகவர்களாலும் பாடசாலை அதிபர், மற்றும் ஓரிரு ஆசிரியர்களாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகின்றன என்பது வெளிவந்த இரகசியங்கள். அண்மையில் குடாநாட்டின் மத்திய பாடசாலை ஒன்றின் அதிபர் பணமோசடிக்குள்ளானவர் என்று குற்றம் சாட்டிய மாணவர்கள் நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமை இவ்வாறிருக்க இன்னும் சில பாடசாலைகள் மீளக்குடியமரவந்துள்ள மாணவர்கள் வன்னியில்பெற்ற அடிப்படை அறிவு போதாது என்றும் ஆங்கிலத்தேர்ச்சி இல்லையென்றும் கூறி அவர்களுக்கான அனுமதியை மறுக்கின்றன. மத நிறுவனங்கள் சார்ந்து இயங்கும் பாடசாலை முதல்வர்களும் நிராகரிப்புக்கான இந்தக் காரணங்களை முன் வைக்கின்றனர்.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இடம் பெயர்ந்து வன்னியில் சிரமங்களை எதிர்கொண்டு வாழ்ந்து திரும்பிவரும் மக்கள் மீண்டும் இவ்வாறு பாதிக்கப்படுவது கல்வி வியாபாரமாகிவிட்ட சூழலின் பிரதிபலிப்பு எனவே எண்ணத் தோன்றுகின்றது. நீண்ட கல்விப்பாரம் பரியத்தினூடே வளர்ந்த மக்கள் அதனை எச்சந்தர்ப்பத்திலும் இழந்துவிட மாட்டார்கள் என்ற கருத்தின் வலிமை இத்தகைய புறமொதுக்கல் களையும் பணவ சூலிப்புக் களையும் தூண்டும் காரணிகளாக இருக்கின்றன என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும்.

இது ஒருபுறமிருக்க யாழ்ப்பாணத்துக்குத் திரும்பும் மக்கள் இங்கு தமக்கான இருப்பிடங்களைத் தேடுவதில் பல நெருக்கடிகளை எதிர்கொள் கின்றனர். இப்போது வீடுகளுக்கான கேள்வி அதிகரித்து விட்டது. யாழ்ப்பா ணத்தின் பெரும் பகுதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மக்கள் குடியிருப்புக்கும் பயன்பாட்டிற்கும் மறுக்கப்பட்டுள்ளது. உயர் பாதுகாப்பு வலயமல்லாத பகுதிகளில் உள்ள பல வீடுகள் இன்னும் படையினரின் தங்ககங்களாகவே இருக்கின்றன.

குடாநாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்து தங்கியிருக்கும் மக்கள் வீட்டு உரிமையாளர்கள் திரும்பி வந்த போதும் அவற்றைவிட்டு போக முடியாத நிர்ப்பந்தம் இதனால் ஏற்பட்டுள்ளது. இந்த நெருக்கடி மக்களுக்கிடையிலான வாக்குவாதங்கள், மனக்கசப்புக்கள் என்பவற்றை ஏற்படுத்துவதோடு நீதிமன்றம் நோக்கிய முறைப்பாடுகளாகவும் மாறும் துர்ப்பாக்கியம் ஏற்படுகின்றது.

இந்தப் பிரச்சினை புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசினால் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டாலே தீரக்கூடிய ஒன்றாகும். கல்வியியல் ரீதியாக எதிர்கொள்ளப்படும் பிரச்சினைக்கு எந்த நடைமுறைப்படுத்தல் தீர்வளிக்கப்போகிறது? இவர்கள் பிரபல பாடசாலைகளை இலக்காகக்கொண்டு செல்வதை இது வெளிப்பாடடைவதற்கான காரணமாகவும் இருக்கின்றது. ●

**இலக்கிய முத்து**



# ஓர் எழுத்துப் பாடல்

காளமேகம் என்றால் சூல் கொண்டு கறுத்து குளிர்ந்த மழை மேகத்தை குறிக்கும். காள மேகத்தில் சற்றே குளிர்ந்த காற்றுப்பட்டால் போதும் கொட்டு கொட்டென்று மழை கொட்டி விடும். அது போலவேதான் கவிஞர் காளமேகமும் கவிமழை கொட்டுவதில் சிறந்தவர்.

தமிழ் இலக்கியத்தின் பெருமையை வெளிக்கொண்டு வரும் கவிஞர்களில் காளமேகமும் சிறப்புடையவராகும். காளமேகத்தின் புகழ் நாள்தோறும் பரவியது. அதனால் கவிஞர்கள் பலருக்கு அவர்மீது காழ்ப்புணர்ச்சி உண்டானது. அவரை எப்படியாவது மடக்கிவிட வேண்டும் என்று பலரும் முற்பட்டனர். பல வகையில் அவரைச் சோதித்துப் பார்த்தனர்.

ஒரு சமயம் ஒரு புலவர் காளமேகத்திடம், "ஒரே எழுத்தில் பாடல் எழுத உம்மால் முடியுமா?"என்று கேட்டார்.

காளமேகம் சற்றும் தயங்காது "தம்பலம் தந்தாள் பலத்தால் முடியும்" என்று சற்றும் தயங்காது பதில் கூறினார்.

'அப்படியானால் பாடுங்கள்!' என்றார் அப்புலவர்.

உடனே "பா!" என்று கூறிவிட்டு நிறுத்திக் கொண்டார், காளமேகம்.

சோதித்தறிய வந்தவர் ஏளனத்துடன், "அவ்வளவு தானா?" என்றார்.

"ஆம் ஐயா! நீர் ஒரே எழுத்தில்தானே பாடல் கேட்டீர். பாடலை நானும் ஓரெழுத்திலே முடித்து விட்டேன்" என்றார்.

"இது எப்படிப் பாட்டாகும்?" என்றார், அப்புலவர்.

"பா என்றால் பாடல்தானே! இது கூடவா ஒரு புலவருக்குத் தெரியாது?" என்றார், காளமேகம்.

"நான் இப்படிக் கேட்கவில்லை. ஏதாவது ஓர் எழுத்து வரிசையில்- அதாவது சகர வரிசையிலோ தகர வரிசையிலோ- வேறு உயிர் மெய்யோ, மெய்யோ கலக்காமல் பாட வேண்டும்" என்றார், போட்டியை உண்டாக்கிய புலவர்.

காளமேகம், "அப்படி விபரமாய்ச் சொல்லும்!" என்று சொல்லிப் பின்வரும் வெண்பாவைக் கூறினார்:

*தாதிதூ தோதீது தத்தைதூ தோதாது*
*தூதிதூ தொத்தித்த தூததே-தாதொத்த*
*துத்திதத் தாதே துதித்துத்தேத் தொத்தீது*
*தித்தித்த தோதித் திதி.*

சோதித்தறிய வந்த புலவர், "வெறும் வார்த்தைகளைத் தளை பிழையாமல் தொகுத்தால் அது பாடலாகி விடுமா? பொருள் வேண்டாமா?" என்றார்.

"எவர் சொன்னது இப்பாட்டிற்குப் பொருள் இல்லை என்று? கூறுகிறேன், கேளும். தாதி தூதோ தீது- வேலைக்காரியைத் தூது அனுப்பினால் காரியம் கெட்டு விடும். தத்தை தூது ஓதாது- தத்தை-கிளி. கிளியைத் தூது விடுவது ஒருவகையில் கவி மரபு.ஆனால் கிளி சொல்லிக் கொடுத்த ஓரிரு சொற்களை மீண்டும் மீண்டும் சொல்லுமே தவிர விபரமாய்த் தூது சொல்லாது. தூதி தூது ஒத்தித்த தூது அதே-தூதுக்கு ஏற்றவள் என்று கருதப்படும் தோழி (தூதி) யளின் தூது, நாளைக் கடத்திக் கொண்டே போகும் தூதாகவே முடியும். தாதொத்த துத்தி தத்தாதே- மகரந்தம் போன்ற தேமல் எனும் பசலை நோய் படாமல், துதித்து- இறைவனைத் துதித்து, தேத் தொத்து ஈது தித்தது ஓதித் திதி-மனத்தை தேற்றக் கூடிய அந்த இனியதை (காதலன் பெயரை) ஓதிய படியே நிலையாய் இரு. என்பதாகும்" என்றார்,காளமேகம்.

இவ் விளக்கத்தைக் கேட்டதும், சோதித்தறிய வந்த புலவர் "நான் பல கற்றுப் பண்டிதனானேன். நீயோ அருள் பெற்றுக் கவிஞரானீர். புலமை வேறு, கவிதா விலாசம் வேறு" என்று கூறி, காளமேகத்தின் காலில் விழுந்தார். ●

# நறுக்கென...

## பிளவுறும் காலம்



மீண்டும் ஜனாதிபதி வேட்பாளர் பற்றி 'அநுரா' பேசுவாரேயானால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிளவுறுவதை எவராலும் தடுக்க முடியாது என 'அறிவுறுத்தி அச்சுறுத்தியுள்ளவர்'. வேறு யாருமல்ல, தானே அடுத்த பொ.ஐ.முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் என உறுதியாக நம்பிக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷவேதான்...

ஏற்கெனவே பல துண்டுகளாய் வெடித்துள்ள நிலையில், எப்போது வேண்டுமானாலும் உடைந்து சிதறலாம் என்ற நிலையில் இருக்கும் சி.ல.சு.கட்சிக்கு ராஜபக்ஷ எப்படி ஓட்டுப் போடப் போகிறாரோ தெரியவில்லை.

வீழ்ச்சி கண்டு வரும் சந்திரிகாவின் செல்வாக்கும் வீழ்ச்சியை துரிதப்படுத்த முயலும் அநுராவின் செயற்பாடுகளும் சுதந்திரக்கட்சியில் பண்டா பரம்பரையின் ஆதிக்கத்தை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ராஜபக்ஷவின் தலைமையை சி.ல.சு.கட்சியின் சிரேஸ்ட தலைவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடக்கக்கூடிய சாத்தியமும் இருக்கிறது.

சந்திரிகாவின் தந்திரோபாயங் களும் ரணிலின் சாமர்த்தியமான நகர்வுகளும் சிறிலங்காவின் அரசியலில் ஒரு கொந்தளிப்பான நிலையையே தொடர்ந்து நிலவ வைத்திருக்கிறது.

திடீரென தேர்தல் நடக்கும் நிலை ஏற்பட்டு அதில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வென்றால் ராஜபக்ஷவின் தலைமைக்கு உறுதி கிடைத்து விடும். தோற்றால், கட்சி பலதாக சிதைந்துவிடும். பிறகு ஜனாதிபதித் தேர்தலில் யார் நின்றால் என்ன? ◆

## போடோ நாயகி



'உலகெங்கும் உள்ள தமிழர்கள் இன்று தலைநிமிர்த்தி நிற்பது விடுதலைப் புலிகளால் தான்'- இவ்வாறு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவரும், தமிழக சட்டப் பேரவை உறுப்பினருமான திருமாவளவன் உலகத்தமிழர் பேரமைப்பின் ஆரம்பநாள் விழாவில் முழங்கியுள்ளார்.

இந்த முழக்கம் 'ஜெயலலிதா' என்ற தமிழக முதல்வர் 'போடோ' சட்டத்தை வைத்துக்கொண்டு தமிழ் உணர்வாளர் களையும் தமிழீழ ஆதரவாளர்களையும் அச்சுறுத்திக்கொண்டும் இந்தியாவின் ஒரேயொரு தேச பக்தராக இனம் காட்டிக்கொண்டும் 'அரசியல்' பண்ணிவரும் சமயத்தில் தான் நடந்துள்ளது.

அதுவும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோபால்சாமி மீதான அரசியல்பழிவாங்கலை இதே 'போடோ' சட்டத்தைப் பயன்படுத்தி அவரைச் சிறையில் தள்ளியதன் மூலம் தனது அதிகார ஆணவத்தை வெளிப்படையாகக் காட்டியபின் நடந்துள்ளது. திருமாவளவனின் துணிச்சலை உண்மையைக் கூறும் நேர்மை யை ஜெயலலிதாவின் அச்சுறுத் தலுக்கு அசையாத நெஞ்சுரத்தை இது வெளிக்காட்டியுள்ளது.

இந்த செய்தி எழுதும் வேளையில் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறனும் 'போடோ' சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். ஜெயலலிதாவின் அடுத்த இலக்கு திருமாவளவனாகவும் இருக்கக் கூடும். இது தெரியாமல் அவர் பேசவில்லை: தெரிந்து அடங்கி அமைதிகாத்தல் விடுதலையை விரும்பும் சிறுத்தைகளின் இயல்பில்லையே...

ஆயிரம் கோடி செருப்புக்களை வாங்கிய அபூர்வ சிந்தாமணியான ஜெயலலிதாவின் 'போடோ' வுக்கு பயந்து ஒடுங்கி சில 'இனமானம்' பேசுவோர் இருப்பது தான் தமிழினத்தின் சாபக்கேடு.... என்றாலும் ஜெயலலிதாவின் 'போடோ' சிலரை விழி பிதுங்க வைத்திருந்தாலும் பலரின் விழிகளைத் திறக்கவும் வைத்துள்ளது என்பதை வரலாறுதான் உணர்த்தும்.... ◆

## அநுராவும், அமெரிக்காவும்..



ஒருத்தரும் துணிஞ்சு கேட்காத ஒரு கேள்வியை சிறிலங்காவின் எதிர்கால சனாதிபதியாக வரும் கனவில் 'கன்னா பின்னா' வென்று புலம்பிக் கொண்டும்-எல்லோருடனும் மோதிக் கொண்டும் இருக்கும், சந்திரிகாவின் அந்தப் பெரும் சகோதரர் அநுரா பண்டார நாயக்க அதுவும் அமெரிக்காவைப் பார்த்துக் கேட்டு விட்டார்.

'ஒசாமா பின்லேடனை பிடிக்க முடியாத அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் ரணிலுக்கு உதவப் போகிறாராம்! இதுதான் சற்று'நக்கலான' தொனியில் அமைந்த அந்த கேள்வி...

சந்தனக்கடத்தல் வீரப்பனைப் பிடிக்க வக்கற்றவர் பிரபாகரனைப் பிடிக்கப்போவதாகக் கூறுகிறார் என்று டொக்டர் ராமதாஸ் சுப்பிரமணிய சுவாமியைப் பார்த்துக் கேட்டது போன்ற கேள்வி இது...

அநுரா இப்படிக் கேட்கக் காரணம்?- அக்கா சந்திரிகா அமெரிக்கா போனபோது அவரைச் சந்திக்காத அமெரிக்க சனாதிபதி 'புஸ்' ரணிலைச் சந்தித்து கை குலுக்கி ஆதரவு தெரிவித்ததனால் ஏற்பட்ட கோபமேயாகும்...

அதிகாரமனைத்துமுள்ள அக்காவை விட அதிகாரமற்ற ரணிலுக்கு என்ன முக்கியத்துவம்? என்ற எண்ணத்தில் எழுந்த ஆதங்கமேயாகும்...

ஆனால் அமெரிக்கா இதுக்கெல்லாம் விளக்கம் கேட்கும் என்று அநுரா நினைத்தே இருக்கமாட்டார். தனது புலம்பலையும் அமெரிக்கா அவதானிக் கிறது என்பதில் அச்சத்தை மீறிய 'புளுகம்' ஒன்றும் அவருக்கு ஏற்பட்டிருக்கும்.

அதனால்தான் நான்கு பக்கத்தில் அநுரா விளக்கம் அனுப்பி விட்டதாக கூறியிருக்கிறார் போலும்.

அநுராவின் அண்மைக்கால பேச்சுக்கள் பல அவருக்கே விளங்குவதில்லை. இப்ப அந்தப் பேச்சுக்கே நாலு பக்க விளக்கம் என்றால்... அமெரிக்காவுக்கு விளங்கினால் (ஆளைப்பற்றி) சரி...! ◆

## சந்திரிக்காவின் மறுமுகம்



அண்மையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா ஒரு குறிப்பிட்ட அமைச்சரின் தோற்றத்தை அவலட்சணமாக வர்ணித்து முகத்தை அஷ்ட கோணலாக நெளித்து அவரது முக இயல்பை கேவலப்படுத்தி அபிநயித்து தனது கட்சியின் உறுப்பினர்களை சிரிக்க வைக்க, அந்த அமைச்சரை அவமதிக்க முயன்றுள்ளதாக கொழும்புப் பத்திரிகைகள் எழுதியுள்ளன.

ஜனாதிபதியின் ஆடம்பர வாகனக் கொள்வனவு தொடர்பான மோசடிகளை அம்பலப்படுத்திய அந்த அமைச்சர் மீது அந்தளவு ஆத்திரம் கொப்பளித்துள்ளது ஜனாதிபதிக்கு.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட ஐ.தே.கட்சி சிறிலங்காவின் காணி அமைச்சர் ராஜித சேனரத்னா மனிதர்களின் 'உடல் ஊனங்களை கேலி செய்வது ஒரு நாட்டின் தலைவி செய்யும் செயலல்ல... அத்தன கலையிலுள்ள படிக்காத கிராமப் பெண்கூட இப்படிக் கீழ்த்தரமாக ஒரு மக்களின் பிரதிநிதியான அமைச்சரைக் கேலி செய்ய மாட்டாள்'- என்றார். கிட்டத்தட்ட, அண்மைக்காலங் களில் சிறிலங்கா ஜனாதிபதி தன்னுள் குடி கொண்டிருந்த தனது இயல்பான குணாம்சத்தை வெளிப்படுத்தி வருகிறார் என்றே கூறவேண்டும். இதன்மூலம் அவர் ஒரு சுய இயல்பற்ற நிலையில் தற்போது நடமாடுகிறார் என்றே கூற வேண்டும்.

அவரது முகத்தில் 1990களின் பிற்பகுதியில் காணப்பட்ட சமாதான புறாவின் மாய 'உரு'கலைந்து போய், ஒரு கோபவெறிமிக்க கழுகின் இயல்புடன் கூடிய ஒரு புதிய உரு தோற்றங்கொள்ளத் தொடங்கியுள்ளது.

அமைச்சர் ஒருவரின் தோற்றத்தை- உடல் ஊனத்தை- கிண்டல் செய்த அதே சந்திரிகா தன் பிறந்தநாளன்று உடல் ஊனமுற்ற பிள்ளைகளை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து விருந்து வழங்கியமையானது அவரது போலித் தனத்தை வெளிக் காட்டுவதாகவே உள்ளது...

ஒரு காலத்தில் சிறந்த சிங்கள நடிகர் விஜயகுமாரணதுங்கவின் மனைவியல்லவா? அவருக்கு நடிப்பைப்பற்றி எவராவது சொல்லியா கொடுக்க வேண்டும்...? ◆



## மதவடி மயிலர்

**செய்தி:-** சிறிலங்கா படையினருக்கு உதவுவது பற்றி ஆராய நான்கு அமெரிக்க குழுக்கள் அடுத்தவாரம் கொழும்புக்கு விஜயம்...

**மயிலர்:-** ரணிலய்யா இங்கையிருந்து அமெரிக்கா போறதும், 'புஸ்'மாமா அங்கையிருந்து குழுக்களை அனுப்பிறதும் 'ஏ9' பாதைப் பயணம் மாதிரிப் போட்டுது பாருங்கோ... அது கிடக்கட்டும் இங்கை எத்தனையோ பிரச்சினைகள். பொருளாதார உதவியில்லாமல் போட்டது போட்டபடி அப்படியே கிடக்குது... கனக்க என்னத்துக்கு... ஜூலை மாதம் அரசாங்க உத்தியோகத்தரின் சம்பளம் கொடுக்கவே திண்டாடுதாம் அரசாங்கம்... அம்மான் ஆயுதப் படையினருக்கு பொருளாதார ரீதியில் எவ்வகையில் உதவலாம் எண்டு ஆராய நாலு குழுவையெல்லே அனுப்பப்போறாராம்...! ரணிலைப்பாதுகாக்கவா, சமாதானத்தைப் பாதுகாக்கவா... சிறிலங்காவைப் பாதுகாக்கவா... இவ்வளவு அக்கறை எடுக்கிறார்...! சோழியன் குடுமி சும்மா ஆடாது பாருங்கோ...

**செய்தி:-** இராணுவ ஆட்சேர்ப்பு தோல்வி பாதுகாப்பற்ற நிலை உருவாகின்றது என சிகலஉறுமய அச்சம்.

**மயிலர்:-** சிகல உறுமயக்காரருக்கு சிங்கள மக்களின் பாதுகாப்பிலை எவ்வளவு அக்கறை பாருங்கோ... சிங்கள, மக்களே... இராணுவத்திலை சேர்ந்து மட்டும் சிறிலங்காவை பாதுகாக்க முடியாதெண்ட முடிவுக்கு வந்தபடியாலைதானே... பட்டாளத்திலை சேர முன்வரேல்லை... இது தெரியாம சிகல உறுமயக்காரர் உறுமிக் கொண்டு திரியினம்... அதுசரி படையிலை சேரத்தான் சிங்களச் சனம் முன்வரேல்லை... சிகல உறுமயவிலையாவது யாராவது சேரமுன் வருகினமோ என்று கேட்டால் பதிலில்லை... படையிலை இருந்து மட்டுமல்ல சிகல உறுமியவிலிருந்தும் கூடத்தான் ஆட்கள் ஓடிக் கொண்டிருக்கினம் பாருங்கோ... போனமுறைக்கு முந்திய தேர்தலிலை தட்டுத்தடுமாறி கிடைச்ச ஒரே ஒரு இடத்தையும் கூட அடுத்த தேர்தலிலை கோட்டை விட்டவையெல்லோ... விண்ணர்கள்...

**செய்தி:-** நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சிமுறையால் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பும் வேறுபல அரசியல் நன்மைகளும் இருப்பதால் இந்த ஆட்சி முறையை சிறுபான்மை இனத்தவர் எதிர்க்கப்போவதில்லை. - D.M.ஜெயரத்னா

**மயிலர்:-** ஜெயரத்னா மாத்தையா சரியா யோசிச்சுத்தான் இந்த கருத்தைக்கண்டு பிடிச்சிருக்கிறார்... சிறுபான்மை இனத்தை பாதுகாக்கத்தானே சந்திரிகா அவவின்ர ஆட்சிக் காலத்தில ஒவ்வொரு வரியமும் ஐயாயிரம் கோடிக்குமேலே முப்படைக்கும் பொலிஸ் படைக்கும் அள்ளிப்படைச்சவா.... அம்மணியின்ர காலத்தில சிறுபான்மையினம் பெற்ற நன்மை கொஞ்ச நஞ்சமே.... கதிர்காமு அமைச்சரானது அவரால் தானே...டக்கிளஸ் கூட கடைசிக்காலத்திலை மந்திரிக்கதிரை ஒட்டியிருக்க அவதானே காரணம்... இதெல்லாத்தையும் சிறுபான்மைச் சனம் ஒருநாளும் மறக்காது பாருங்கோ...! மறுக்கக்கூடாது பாருங்கோ....!!

**செய்தி:-** பிரதமர் ரணிலையும் அமைச் சரவையையும் பதவி நீக்க பொ.ஐ.முன்னணி ஜே.வி.பி. இணைந்து சதி.

**மயிலர்:-** சந்திரிகா அம்மணி தன்ரை புரிசனை சதி செய்து கொன்றவையோடல்லே கூட்டுச் சேர்ந்து ரணிலைக் கவிழ்க்க சதி பண்ணி இருக்கிறா.... அவவுக்கு ஆர் நல்ல 'சதி' செய்து காரியத்தை முடிப்பினம் எண்டது நல்லாத்தான் தெரிந்திருக்கு பாருங்கோ 'புரட்சிச்சதி' செய்யப் புறப்பட்ட சிவப்பு சட்டக்காரர்... சாயம் போகப்போக.... 'புரட்சிச்சதி'யெல்லே போடத் தொடங்கீட்டினம்... அடுத்த புரட்டவெளிக்கிட்டு ஆளே புரண்டுபோன கதையாச்சுப் பாருங்கோ...! ◆

# வவுனியா பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்கு கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், பதிவாளரும், அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய வவுனியா மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2000-07-14ஆம் திகதிய 1141 இலக்கங் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாவிக்கப்பட்ட அதிகாரங்களின் படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 28இதற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின் வரும் கால அட்டவணையின் படி நடைபெறுவதற்காக. இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து இத்தால் நியமித்துள்ளேன்.

(1) இதற்கமைய இக்கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
(2) கிளைப் பொதுச் சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25 பேர் எது குறைவோ அத்தொகையாகும்.
(3) தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையிலிருந்து கிளைக் குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச்சபையை கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். என்பவற்றுடன் மகளிர் குழு உறுப்பினர் இருவரும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.
(4) சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிகள் 09 பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற் கொள்ளுவார்.
(5) இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச் சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.
(6) தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச் சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| இல | கிளைப் பெயர் | தவிசாளர் பெயர் | காலம் | நேரம் முற்பகல் | கிளைப்பொதுச் சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | குடியிருப்பு | திருமதி மோ. சர்வானந்தா | 10-08-2002 | 10 மணி | இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.- வவுனியா) |
| 02 | வவுனியா மத்தி | திரு. இ. பாலச்சந்திரன் | | | முத்தையா மண்டபம் - வவுனியா ப.நோ.கூ.ச. புகையிரத நிலைய வீதி, வவுனியா. |
| 03 | வவுனியா கிழக்கு | திரு. ஞா. கேதீஸ்வரன் | | | வவுனியா கிழக்கு - கிளை மண்டபம் |
| 04 | கயிலை வன்னியன் | திரு. தி. நேசராஜன் | | | செக்கடிப்பிலவு - அ.த.க. பாடசாலை மண்டபம் |
| 05 | புதுக்குளம் சித்திவிநாயகர் | திரு. கா. ஜீவானந்தம் | | | புதுக்குளம் சித்திவிநாயகர் கிளை மண்டபம் |
| 06 | மகா கணபதி-ஈச்சங்குளம் | திருமதி M.E.R. ஜோக்கிம் | | | மகாகணபதி கிளை மண்டபம் - ஈச்சங்குளம் |
| 07 | மாதர் பனிக்கர் மகிழங்குளம் | திரு. த. செல்வஜோதி | | | நவ்வி - கிளை மண்டபம் |
| | | | | | பாலமோட்டை (மா.ப.ம.குளம்) |
| 08 | நொச்சிமோட்டை. | திரு. கா. யோகேந்திரன் | | | இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை வவுனியா - (C.C.T.M.S.) |
| 09 | ஓமந்தை | திரு. ச. சிவகுருநாதன் | | | இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.) |
| 10 | ஆறுமுகத்தான்-புதுக்குளம் | திரு. வி.ஜெயந்தன் | | | இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.) |
| 11 | கள்ளிக்குளம் | திரு. எ. சின்னத்தம்பி | | | இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.) |
| 12 | சேமமடு | திருமதி த. சிவநேசன் | | | இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.) |
| 13 | இரணைஇலுப்பைக்குளம் | திரு. ந. முரளீகரன் | | | இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலை வவுனியா (C.C.T.M.S.) |
| 14 | | திரு. ப. தர்மபாலன் | | | |
| 15 | | திரு. அ. கிறிஸ்ரிரூபன் | | | |
| 16 | | திரு. எம். அஷ்ரவ் | | | |

**கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை**
**புகையிரத நிலைய வீதி, வவுனியா**
01-08-2002

ஒப்பம்:- கு. பாலசுப்பிரமணியம்
**கூ. அ. உ. ஆணையாளர்- வவுனியா மாவட்டம்**

## கிளைக்குழு உறுப்பினராகத் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர்கள்

01. கிளையினது வாக்காளர் பட்டியலில் பெயர் காணப்படாத ஒருவர்.
02. 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள்.
03 உடன்முன் சென்ற 3ஆண்டுகளுள் தீயஒழுக்கச் செயலுக்காகக் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டவர் அல்லது 3மாதங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
04. கடனைத் தீர்க்க வகையற்றவரெனப் பிரகடனஞ் செய்யப்பட்டவர் அல்லது அவ்வாறு ஒரு வழக்கிற் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்.
05. இச்சங்கத்திற்கு அல்லது பதிவு செய்யப்பட்ட வேறு எக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் எக்கடனையாவது திருப்பிக் கொடுக்காதவர் அல்லது வேறு எவ்விதத்திலும் தவறு செய்தவர்.
06. இச்சங்கத்தில் வியாபாரியெனப் பதிவு செய்யப்பட்டவர் அல்லது சங்கத்தின் நலவுரிமைகளுக்கு முரண்பட்ட வகையில் ஒரு வியாபாரத்தை நடாத்துவர்.
07. சங்கத்தில் ஆதாயங் கருதி ஏதாவது ஒரு பகுதியை அல்லது இடத்தினை வகிப்பவர் அல்லது ஆணையாளரின் முன்னனுமதியின்றி ஏதாவது தகைமைக் கொடையைப் பெறுபவர்.
08. இச்சங்கத்தில் அல்லது இச்சங்க உறுப்புரிமை வகிக்கும் வேறு எந்தச் சங்கத்திலும் ஊதியம் பெறும் ஊழியராயிருப்பவர்.
09. ஓர் உறுப்பினர் என்ற முறையில் தவிர மற்றப்படி சங்கத்துடன் செய்யப்பட்டிருக்கும் எந்த ஒப்பந்தத்திலோ அல்லது சங்கத்தினாற் செய்யப்படும் எந்த விற்பனையிலோ கொள்வன்விலோ அல்லது சங்கத்தில் நிதியோடு சம்பந்தப்பட்டு அதனாற் செய்யப்படவிருக்கும் அல்லது பேச்சளவிலிருக்கும் ஏதாவது ஒப்பந்தத்தில் அல்லது கொடுக்கல்வாங்கல்களில் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அக்கறை கொண்டிருப்பவர்.
10. கூட்டுறவுச் சட்டத்தின்படி இயற்றப்பட்ட விதிகளுக்கமைய தமது பதவியை அல்லது வேலையைக் கடந்த 5 ஆண்டுகளில் விட்டகல வேண்டிய நிலைக்கு ஆளானவர்.
11. இயக்குனர் சபையினால் அல்லது கிளை நிர்வாக சபையினால் உறுப்பினராகக் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படாத அல்லது மேன்முறையில் இயக்குனர் சபையினால் அல்லது கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் பிரிவு (6/2) இன் கீழ் ஆணையாளரினால் மீளாய்வு மூலம் அல்லது இவ்விதியின் 2:4 இன் கீழ் அல்லது 2:6 இன் கீழ் வாக்காளர் அட்டவணையில் பெயர் சேர்க்கப்படாத ஒருவர்.
12. பாராளுமன்ற உறுப்பினர், மாகாணசபை உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள்.
13. அங்கத்தவராகச் சேர்ந்து ரூபா100/- ஐப் பங்குப்பணமாகச் செலுத்தி முடிக்காதவரும் அங்கத்தவராகச் சேர்ந்து ஒரு வருடம் பு'ர்த்தியாகாதவருமான ஒருவர்.

(சங்கத்தின் துணைவிதிப் பிரிவு இல. 22 (1)
28- (3)

(சி. 6989)

# இளையநாதம்



## துரதிஷ்டசாலி யார்...?

'இந்த உலகிலே துரதிஷ்டசாரியான மனிதர்கள் இருக்கிறார்களா?' என்று ஒருமுறை பேரரசர் அக்பர் அவையோரிடம் கேட்டார். அந்தச் சமயத்தில் பீர்பால் அங்கில்லை.

சபையில் உள்ளவர்கள் உடனே குறிப்பிட்ட மனிதன் ஒருவரின் பெயரைக் கூறினார்கள்.

'அவன் எவ்வகையில் துரதிஷடசாலி?' என்று ஆச்சரியத்துடன் வினவினார் அக்பர்.

'விடியற்காலையில் எழுந்ததும் அவன் முகத்தில் விழித்தால் அன்றைய தினம் முழுவதுமே மனம் வருந்தக்கூடிய நிகழ்ச்சிகளே நடைபெறும் என்றார் ஒருவர்'

'இவ்வளவு ஏன்? அவன் முகத்தில் விழித்தால் சாப்பாடு கூடக் கிடைக்காது' என்று கூறினார் மற்றொருவர்.

இதைக் கேட்டவுடன் அவையோர் சொல்வது உண்மை தானா? என்று சோதித்து அறிய ஆவல் கொண்டார் அக்பர்.

அந்த நேரத்தில் பீர்பால் உள்ளே நுழைந்தார். அவரைக் கண்டவுடன், 'உலகில் துரதிஷ்டக் காரர்கள் உண்டா பீர்பால்' என்று கேட்டார் அக்பர்.

'யாருமே இல்லை மாமன்னரே!' என்று கூறினார் பீர்பால்.

'இவர்கள் எல்லோரும் ஒரு மனிதனைக் குறிப்பிடுகிறார்களே!' என்றார் மீண்டும்.

'அதிலெல்லாம் எனக்கு உடன்பாடு இல்லை மன்னா! ஒருவருக்கு துரதிஷடசாலி என்றால் இன்னொருவருக்கு வேறு ஒருவர் துரதிஷடசாலி யாக அமையலாம்' என்று கூறினார் பீர்பால்.

பீர்பாலின் வார்த்தைகள் அக்பருக்கு திருப்தியைக் தரவில்லை. எனவே 'நான் அவனைச் சோதிக்க விரும்புகிறேன்' என்று கூறிவிட்டு அவனை அழைத்து வரச்செய்தார்.

அன்று இரவு படுக்கப்போகும் போது அவனையும் அழைத்துச் சென்று தன் பார்வையில் படும்படி வைத்துவிட்டு உறங்க ஆரம் பித்தார்.

விடிந்தது. மன்னர் துரதிஷடசாலி என்று வர்ணிக்கப்பட்ட மனிதனின் முகத்திலேயே விழித்தார். ஏழை மனிதன் நடுநடுங்கிப் போயிருந்தான்.

அக்பர் தம் வழக்கமான கடமையை முடிக்கச் சென்றார்.

குளியல் அறைக்கு அவர் சென்றதும் இலேசாகக் கால் வழுக்கிற்று எனவே அவர் கீழே விழுந்துவிட்டார். ஒருவழியாக குளித்து முடித்துவிட்டு இறை வனைத்தொழ அவர் செல்லும் போது அந்தப்புரத்திலிருந்து அவசர அழைப்பு வந்தது.

மகாராணி மயக்கமாக விழுந்துவிட்டதாகச் செய்தி கேள்விப்பட்டவுடன் அவசரமாகச் சென்றார். வைத்தியர் வரவழைக்கப் பட்டார். மருந்துகள் தரப்பட்டன.

மன்னர் கவலையுடன் ராணியாரின் அருகிலேயே இருந்தார். காலை ஆகார வேளை கடந்தது. மதிய வேளை வந்ததும் ராணியார் கண் திறந்தார்கள். அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டுவிட்டு போசனசாலையை நோக்கி விரைந்தார் அக்பர்.

அவருக்குப் பெரும் களைப்பாக இருந்தது. அன்றையதினம் சபை கூடப்படவில்லை. ராணியின் உடல்நிலை பற்றியே அனைவரும் பேசினர்.

பேரரசர் உணவுக்காக வந்த மாத்ததும் அவசர உணவு பரிமாறப் பட்டது. அவர் உணவை எடுத்து வாயில்வைக்கு முன் ஓர் அசம்பாவிதமான காரியம் நிகழ்ந்தது. எங்கிருந்தோ பல்லி ஒன்று சொத்தென்று அவர் உணவுக் கலத்தில் விழுந்தது. அதேநேரம் அதைப்பிடிக்க அரண் மனைப்பூனை ஒன்று மேலிருந்து உணவின்மேல் குதித்து மன்னரின் உடையை நாசப்படுத்தியது.

அக்பர் கைகழுவிக்கொண்டு எழுந்தார். வயிற்றில் இலேசான வலி ஏற்பட்டது போல இருந்த தால் இன்றைக்கு ஒன்றும் உண்ண வேண்டாம் என்று அவர் தீர்மானித்தார்.

எனவே படுக்கைக்குச் சென்று சாய்ந்து அமர்ந்து ஓய்வு எடுத்தார்.

'எல்லாவற்றுக்கும் காரணம் இந்த விடியா மூஞ்சிப் பயல் முகத்தில்மன்னர் விழித்ததுதான்' என்று யாரோ பேசிக்கொண்டே சென்றது அக்பரின் காதுகளில் கேட்டது.

அப்பொழுதுதான் அவனுடைய நினைவே அரசருக்கு எழுந்தது. 'சபையோர் சொல்லியது நிஜமாயிற்று. பீர்பால் வாக்கு இதில்தான் பொய்த்துப் போயிற்று' பீர்பாலை மடக்க இன்று சரியான வாய்ப்புக் கிடைத்து விட்டது என்று எண்ணிக்கொண்டார் அக்பர்.

பின்னர், பேரரசராகிய எனக்கே இவ்வளவு கஸ்டங்கள் ஏற்பட்டுவிட்டன என்றால் சாதாரணக் குடிமக்களுக்கு அந்தத் துரதிஷடசாலியினால் என்னென்ன நிகழும்? இப்படிப்பட்ட மனிதர் என்நாட்டில் இருக்கவே கூடாது. எனவே அவனைத் தூக்கில் போட்டு விடவேண்டியது தான்' என்று தீர்மானித்தார்.

'நாட்டு மக்களின் நலன் கருதி நாளைக் காலையில் உமக்குத் தூக்கு! இன்று முழுவதும் உம் உறவினர்களைச் சந்தித்து சுதந்திரமாக இருக்கலாம்' என்று துரதிஷடசாலியான மனிதருக்கு அறிவிக்கபபட்டது.

ஏழைமனிதன் பதறிப்போனார். அவர் உடனே பீர்பாலிடம் விரைந்து ஓடினார். தன் நிலையைச் சொல்லி அழுதார். பீர்பால் மௌனமாகச் சிந்தித்தார். பின்னர் அவரை அருகே அழைத்து அவர் காதில் 'கிசுகிசு' என்று ஏதோ சொன்னார். அவர் ஆறுதலடைந்தார்.

பின்னர் நகரெங்கும் சென்று தன் உற்றார், உறவினர்களைச் சந்தித்துப் பிரியாவிடை பெற்றார். உறவினர்கள் இவன் சாவதே நல்லது என்று நினைத்துக் கொண்டனர்.

மறுநாள் அம்மனிதர் தூக்கு மேடைக்கு கொண்டு செல்லப் பட்டார். 'உன்னுடைய கடைசி ஆசை என்ன? என்று அவரிடம் கேட்கப்பட்டது.

'மாமன்னரைக் கண்டு அவருடன் பேச விரும்புகிறேன்'' என்றார் அம்மனிதர். அக்பருக்குத் தகவல் அனுப்பப்பட்டது. அக்பரும், பீர்பாலும் அங்கே விரைந்து வந்தனர்.

'என்னிடம் என்ன சொல்ல விரும்புகிறாய்?' என்று கேட்டார் அக்பர்.

'மாமன்னரே! நேற்றுத் தாங்கள் என்முகத்தில் விழித்தீர்கள், எனவே அரசியாருக்கும் தங்களுக்கும் இலேசாக உடல்நலம் சரியில்லாமல் போய்விட்டது என்று பொதுமக்களும் தாங்களும் நம்புகிறீர்கள். ஆனால்



என்னையும் விட ஒரு துரதிஷடசாலி இருப்பது எனக்கு நேற்றைக்குத்தான் தெரியும். அந்த மனிதரைப் பற்றிக் கூறவே தங்களைக் காண விரும்புகிறேன்' என்றான்.

'என்ன துரதிஷடசாலி இருக்கிறானா? யாரவான்? அவன் முகத்தில் விழித்தால் என்ன நடக்கும்?! என்று கேட்டார் அக்பர்.

'உயிர் போய்விடும்' என்றார் அம்மனிதர். இதைக்கேட்ட அக்பர் அதிர்நதார்.

'யார் அந்த கொடூரமான பாவி'' என்று கேட்டார். உடனே ஏழைமனிதர் சற்றும் தயங்காமல்

'தாங்கள்தான் மாமன்னரே! என்னால் உங்களுக்கு உடல் நலமின்றிப் போனது. உங்கள் முகத்தில் விழித்ததால் என் தலையே போகப் போகின்றது! நம் இருவரில்யார் துரதிஷடசாலி என்று நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.' என்றார் அவர்.

அக்பர் உண்மையிலே திடுக்கிட்டார். ஏழை சொன்னது நியாயம். இம்மாதிரிச் சொல்லும் படி அவனுக்கு யோசனை கூறியது பீர்பாலே என்று அவர் உடனே புரிந்துகொண்டார்.

அவனை விடுதலைசெய்து அவனுக்கு தேவையான வசதிகளை அள்ளித்தந்தார்.

'பீர்பால் பழிவந்து சேரக்கூடிய சொற்களைக் கூறினேன்! எதிர்காலச் சந்ததியினரிடமிருந்து என்னைக் காப்பாற்றத் தக்க சமயத்தில் இவருக்கு புத்தி சொல்லி என்னையும், அவரையும் காப்பாற்றிய உங்களுக்கு நன்றி' என்றார் அக்பர்.

பீர்பால் மௌனப் புன்னகை பூத்தார். □

## வாரம் ஒரு குறள் அறிவோம்



நாம் பிறருக்குத் துன்பம் செய்யக்கூடாது.
எமக்கு யாராவது துன்பம் செய்தாலும்
அவர்களைப் பழிவாங்கும் எண்ணம் இருக்கக்கூடாது.
அதற்குப் பதிலாக நாம் அவர்களுக்கு நல்லதையே
செய்யவேண்டும்.

மனதால் கூட கெடுதல் நினைக்கக் கூடாது.
அப்பொழுதுதான் எமக்குத் துன்பமில்லாத
இனியவாழ்வு கிடைக்கும்.
தீயவர்களைப் பூமியானது பொறுமையுடன்
தாங்கியிருப்பதுபோல நாமும் அதைப்பொறுத்து
நன்மையைச் செய்யவேண்டும்.

இதனையே வள்ளுவப் பெருமான்
"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப்பொறுத்தல் தலை"
என்ற குறலில் விளக்கியுள்ளார்.

## சிட்டுக்குருவி



சின்னச் சின்ன சிட்டுக்
குருவி சிங்காரச்
செல்லக்குருவி
சின்ன உடலை சாய்த்து
சிரமேல் நீயும் பறப்பாய்.
சின்னச் சின்னக் கண்கள்
சின்ன நல்ல மூக்கு
சின்னச்செட்டை பஞ்சு
சிறந்த
நல்ல சொகுசு



ஒய்ந்திடாமல் அழகுற
நீயும்
ஓங்கி உயரப் பறப்பதேன்.
உண்ண உணவு
கிடைக்குமோ உறங்க
நல்ல மெத்தை
உனக்கு நானே
தந்திடுவேன். உயிராய்
நானும் இருந்திடுவேன்
சின்னச் செல்லச் சிட்டே.

தெ.மோகனதாசன், தரம்-11, கிளி.புன்னைநீராவி வித்தியாலயம்

## ரதனும்-சுதனும்

ரதன்: பாம்பு விஷத்தில் என்ன. இருக்கிறது? பாம்பு கடித்தவுடன் ஏன் இறக்க நேர்டுகிறது.



ரதன்: இது ஒளி ஊடுருவக்கூடிய மணமற்ற வெளிர் மஞ்சள் நிற முடைய திரவம் ஆகும். இதில் முப்பது வீதமானவை நச்சுத்தன்மை வாய்ந்த புரதப்பொருட்கள் இருக்கின்றன. இவை அமிலத்தன்மையினைக் கொண்டது. பாம்பு கடித்தவுடன் பொதுவாக சுவாச மண்டல செயற்பாடு குன்றுகிறது. விஷம் உடலில் பரவிய அரை மணி நேரத்தில் மயக்கம், அதிக நாடித்துடிப்பு, அதிக உமிழ்நீர் சுரப்பு, இழுப்பு ஆகியன ஏற்படுகின்றன. வாந்தி, கண் வெளியே துருத்துதல், சுவாச அழற்சி ஆகியன ஏற்பட்டு இறக்க நேரிடுகின்றது.

## 'பயந்தாங்கொள்ளி' கலிலியோ



ஒரு பேரன் போய் அவனது தாத்தாட்டை கேட்டானாம் "தாத்தா நீங்கள் குரங்கில இருந்தோ பிறந்தனீங்கள்'' என்று. குழம்பிப்போன தாத்தா, "ஏனப்பு அப்படிக் கேக்கிறீங்கள்?'' என்று கேட்க, "இல்லை, எங்கட மூதாதையர் எல்லாம் குரங்கில இருந்துதான் பிறந்தவையாம். அதுதான் கேட்டனான்'' என்று சொன்னானாம் சுட்டிப்பேரன்.

அதே குரங்கு மூதாதையர்' தான் ஆயிரம் வருடங்களுக்கு முந்தி சரியான "பிடிவாத முட்டாள்' களாக இருந்தவை யாம். அப்பிடி என்ன பிடிவாதம் பிடிச்சவை என்று யோசியாதையுங்கோ, "இந்த பூமி நிலையா ஒரு இடத்திலதான் நிக்குது, அதொண்டும் சூரியனையும் சுத்த இல்லை. தன்னையும் சுத்த இல்லை'என்றுதான் அவவை நம்பிச்சினமாம்.. இதைமறுத்து "பூமி தன்னைத் தானேயும், சூரியனையும் சுத்துது' என்று கலிலியோ கலிலி அவர்கள் ஆதாரப்படுத்திக் கூறியபோது, இத்தாலியின் 'வாட்டிக்கன்' எனுமிடத்திலுள்ள தேவாலயத்தவர்கள் கலிலியோ இவ்வாறு கூறியது மாபெரும் குற்றம் என்று கூறி சிறையிலடைத்து விட்டனராம் சரியான "**Monkgy** மடையர்' தான்.

இதெல்லாம் இருக்கட்டும் இந்தக் கலிலியோ இருக்கிறா ரெல்லோ, இவர் இதைமட்டும் கண்டு பிடிக்க வில்லை. இன்னும் பல கண்டுபிடிப்புக்களையும் செய்தவராம். அதன் வரிசையிலை "தொலைநோக்காடி'யும் ஒன்றாம். நீங்கள் யோசிக்கக்கூடும் இது எங்களுக்குத் தெரியும் தானே என்று. ஆனா இதுமட்டுமல்ல அடுத்ததாக சடத்துவ விதி (**Low of inertia**) யையும், ஒரே நேரத்தில் ரெண்டு வேற வேற நிறையுடைய பொருட்கள் நிலத்தில வந்து விழும் என்றதையும், கீழே விழுகிற ஒரு பொருள் செல்லும் தூரம் அது கீழே விழுகிற வினாடிகளின் எண்ணிக்கையில் 'இருமடி' வர்க்கத்திற்கு சரிசம வீத அளவில் இருக்கும் என்றதையும் கண்டுபிடித்து பெரும் புகழ்பெற்றாராம். இப்படியாக மேலும் சில கண்டுபிடிப்புகளும் இவருக்கு புகழ்சேர்த்த போதும்,இவரின் மிகவும் திறமையான கண்டுபிடிப்பான அறிவியல் முறைமையியல்' (**Methology**) தான் உலகப் புகழ்பெற வைத்ததாம்.

இந்தக்கண்டுபிடிப்பு' எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்ட "வாட்டிகன்' "பூமி சூரியனைச் சுற்றுகிறது' என்ற உண்மையை மட்டும் நம்ப மறுத்தது ஆச்சரியமே. நம்பாவிட்டாலும் பறவாயில்லை கலிலியோவை சிறையிலடைத்து, அவர் செய்தது மாபெரும் குற்றமென்றும், அவர் சொன்னது "பொய்' என்று சொல்லுமாறும் துன்புறுத்தியது கொடுமையிலும் கொடுமை. கடைசியில் கலிலியோ தான் சொன்னது பொய்' என்று அவர்களைப் பார்த்து சொல்லிவிட்டு, கீழே பார்த்து மெதுவாகச் சொன்னாராம் "இது இன்னமும் சூரியனைத்தான் சுற்றுகிறது' என்று சரியான பயந்தாங்கொள்ளி போலும். இவர் தனது சொல்லமுடியாத பல ஆசைகளை தன்னுள் அடக்கியவாறே 1642ஆம் ஆண்டு இறந்தாராம்.

இப்படியான "பயந்தாங்கொள்ளி....'கள் இன்னும் எத்தனை பேரோ தெரியவில்லையே இந்த உலகத்தில? வடிவா உங்களை ஒருக்காப் பாருங்கோ, சிலவேளை நீங்களுமாய் இருக்கலாம்.

-கல்யாணி

## கண்டு பிடியுங்கள்



இதில் உள்ள வடிவங்களை வெட்டி, ஒழுங்கான முறையில் இணைத்து ஒட்டிப்பாருங்கள் ஒரு விஞ்ஞானியின் உருவம் தெரியும். யார் அந்த விஞ்ஞானி கண்டு பிடியுங்கள் பார்ப்போம்?







## ரஷ்யாவில் ஜனநாயகம்

இரண்டாவது உலகப்போர் முடிந்து ஓரிரு ஆண்டுகளிருக்கும். ரஷ்யாவில் ஸ்டாலினும் அமெரிக்காவில் ட்ரூவனும் பதவியிலிருந்த சமயம் அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி பயன்ர்ஸ்ஆம் ரஷ்ய வெளிவிவகார மந்திரி மாலடோவும் ஜனநாயகம் பற்றி உரையாடிக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அமெரிக்க அந்நிய நாட்டு மந்திரி சொன்னார் "ரஷ்யாவில் இப்பொழுது நீங்கள் எல்லாம் ஜனநாயகம் என்னும் சொல்லின் பொருளையே மறந்துவிட்டிருப்பீர்கள் ஆனால் நாங்கள் அப்படியல்ல. அமெரிக்காவில் நாங்கள் அதனை அப்படியே பின்பற்றி வருகிறோம். எல்லாவிதாமன சுதந்திரங்களும்' அங்கு எங்களுக்கு இருக்கின்றன. இப்பொழுதே நான் ஒரு விமானத்தில் ஏறிக்கொண்டு வாஷிங்டன் செல்லலாம். அங்குபோய்ச் சேர்ந்ததும் நேராக வெண்மாளிகைக்குச் சென்று சனாதிபதியைச் சந்தித்து அவர் முகத்துக்கு நேரேயே "ட்ரூமன்ட்! நீ ஒரு முட்டாள்' என்று கூறலாம். அப்படிக் கூறியதற்காக ட்ரூமன் ஒன்றும் என் தலையை வாங்கிவிடமாட்டார்.

பயர்ன்ஸ் கூறியதைக் கேட்டதும் மாலடோவ் 'ரஷ்யாவில் நாங்களும் இதேவித சுதந்திரம் பெற்றுத்தானிருக்கிறோம்' என்றார் சிறிதும் விட்டுக்கொடாமல்.

பயர்ன்ஸுக்கு ஒரே வியப்பு'எப்படி?' என்று கேட்டார் அவர் மாலடோவைப் பார்த்து.

மாலடோவ் சொன்னார் 'இப்பொழுது நானுமொருவிமானத்தில் ஏறிக்கொண்டு மொஸ்கோ செல்லலாம். அங்குபோய்ச் சோர்ந்ததும் நேராக கிரம்ளினுக்கு சென்று ஸ்டாலினைச் சந்தித்து அவர் 'ட்ரூமன் ஒரு முட்டாள் என்று கூறலாம். அவ்விதம் கூறியதற்கா ஸ்டாலின் ஒன்றும் என் தலையை வாங்கி விடமாட்டார்.

## சொர்க்கத்தில் இங்கர்சால்

அமெரிக்க அறிஞர்களுள் ஒருவர் இங்கர்சால். ஆனால் ஏனோ அவர் கடவுளின் உள்ளமையை மறுத்தார். மதகுருக்களை எதிர்த்தார். மதநூல்களை வெறுத்தார். அவர் தம் கொள்கையை விளக்கிப் பல புத்தகங்களும் எழுதியிருக்கிறார்.

மதகுருக்களை வெறுத்தாலும் சொந்தமுறையில் அவருக்கு அவர்கள் மீது ஒரு வெறுப்பும் கிடையாது. ஒருநாள் அவர் பிலிப்ஸ் புரூக்ஸ் என்னும் பாதிரியார் இறப்புப் படுக்கையில் கிடக்கிறார் என்று கேள்விப்பட்டதும் அவரைப் பார்க்கச் சென்றிருந்தார்.

அவரைப்போல பலரும் பாதிரியாரைப் பார்க்க வந்திருந்தார்கள். ஆனால் பாதிரியார் எவரையும் பார்க்க விரும்பவில்லை. இங்கர்சாலை மட்டும் அவர் அனுமதித்தார். எல்லோருக்கும் ஒரே வியப்பு இங்கர்சால் உட்படத்தான்.

இங்கர்சால் உள்ளே நுழைந்தார். "தாங்கள் தங்கள் நண்பர்களையெல்லாம் போகச்சொல்லி விட்டு என்னை மட்டும் அழைத்தது ஏன்?" என்று கேட்டார்.

பாதிரியார் பதில் சொன்னார்: "ஒன்றுமில்லை, என்னுடைய நண்பர்களை நான் பரலோகத்தில் பார்த்துக்கொள்ள இயலும் என்னும் நம்பிக்கை எனக்கிருக்கிறது. ஆனால் தங்களைப் பார்ப்பது இதுவே இறுதி முறையாக இருக்குமல்லவா?, அதனால் தான்".

# 'தடா' சாதித்ததும் 'போடோ' சாதிப்பதும் ...?



வை. கோபாலசாமி

"போடோ" சட்டத்தின் கீழ் தமிழகத்தில் மற்றுமொரு வி.ஐ.பி. கைது செய்யப்பட்ட விடயம் கடந்த வாரம் மற்றுமொரு பரபரப்பான செய்தி.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பரப்புரை செய்தார் என்றகுற்றச்சாட்டில் தமிழ் தேசியஇயக்கத் தலைவர் பழ நெடுமாறன் கைது செய்யப்பட்ட செய்தியே அதுவாகும்.

தமிழக துணை அமைச்சரும் ம.தி.மு.க பொருளாளருமான கண்ணப்பன் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசி வருவதாகவும் ''போடோ'' சட்டத்தின்கீழ் இவரும் குற்றம் இழைத்தவராகவே கருதப்படுகிறார் என்றும் இவரை பதவி விலக்குமாறும் இந்தியப்பிரதமரை கடிதமூலம்கேட்டிருக்கிறார்அம்மணி. "ஜெயா"

ஜெயலலிதா இவ்வாறான சட்டங்களிற்கூடாக கைது செய்து எதனைச்சாதிக்கப் போகிறார் என்பது தான் இன்று ஆய்வாளர்கள் மத்தியில் எழும் கேள்வியாகவே உள்ளது.

முன்னர் நடைமுறைப் படுத்தப்பட்டு காலாவதியாகிப் போன"தடா" சட்டத்திற்கூடாகவும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை முனைப்புப் பெற்றபோதும் கூட எதனையும் தீவிரமாக இந்திய அரசு சாதித்ததாக இல்லை.

இதன் பின்பு இச்சட்டத்தின் சாத்தியமற்ற பக்கங்களை ஆராய்ந்த இந்திய அரசு குற்றவியல்

**எஸ்.வி.ஆர்.கஜன்**

நடைமுறை திருத்த மசோதாவை கொண்டு வந்தது.

''தடா'' சட்டத்தின் மிருக முகத்தோடு கூடிய நடவடிக்கை எத்தகையது என்று அரசியல் ஆய்வாளர்கள் அனைவரும் அறிந்தவிடயம்.

எந்தவொரு நாகரீகமான மனிதனும் வெட்கப்பட்டு வெறுக்கும் ஒரு சட்டமாகவே இதற்கு எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

இந்தச்சட்டம் தொடர்பான 1994ம் ஆண்டு கிடைத்த ஒரு புள்ளி விபரம் தடா சட்டத்தின் கீழ்



பழ.நெடுமாறன்

கைதானவர்களின் எண்ணிக்கை 75 ஆயிரத்திற்குமேல் என்றும், இதில் 93%மான வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்றும், மிஞ்சியதில் ஒருசத வீதத்தினர் கூட தண்டனை பெறவில்லை என்றும் தெரிவிக் கின்றது.

ஏனென்றால் தாக்கல் செய்யப்பட்டவை அனைத்தும் பொய் வழக்குகள் பயங்கரவாத ஒழிப்புச் சட்டமான இந்த சட்டத்தின் கீழ் பயங்கரவாத செயற்பாடுகள் எதுவுமே இல்லாத குஜராத்தில் அதிகமானோர் கைது செய்யப் பட்டமை தான் நகைப்புக்குரியது.

"தடா" சட்டம் காலாவதியாகிய பின்பும் கூட இதன் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் இன்னும் சிறையில் உள்ளமைதான்



திருமாவளவன்

வேதனைக்குரியது.

நடைமுறைப்படுத்தப்பட்ட "தடா" சட்டத்தின் வெற்றி இவ்வாறு இருக்கையில் தற்போது "போடோ"



டொக்டர் ராமதாஸ்

தீவிரவாத சந்தேக நபர்களுக்கு ஆதரவாக கதைப்பவர்களும் கூட இந்த "போடோ" வின் கீழ் கைது செய்யப்படுவர். ஒட்டு மொத்தமாக

சுதந்திரமான கருத்துக் கொண்ட தமிழுணர்வாளர்கள் நாட்டில் நடமாடவே முடியாது என்பதை "போடோ" வழிவகுத்து நிற்பதாகவே தோற்றமளிக்கின்றது.

இதன் கீழ் தான் வை.கோ.வின் கைது நடவடிக்கையை அடுத்து பழ.நெடுமாறன் கைது செய்யப் பட்டதும், கண்ணப்பனை பதவி விலக்குமாறு மத்திய அரசிடம் ஜெயலலிதா கேட்டுள்ளதும்,

**வை.கோபாலசாமி, பழ.நெடுமாறன், சுப.வீரபாண்டியன் ஆகிய தமிழ் உணர்வாளர்கள் கைது.**
**பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் டொக்டர் ராமதாஸ், விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் ஆகியோரும் கைது செய்யப்படலாம்.**

சட்டத்தையும் அமுல்படுத்தி யுள்ளனர் "தடா"வின் மூலம் சாதிக்க முடியாதவற்றையொல்லாம் போடோவின் மூலம் சாதிக்க முற்படுவதாகவே தெரிகின்றது.

தீவிரவாத தடுப்பு அவசரசட்டம் எனப்படுகின்ற "போடோ" (POTO) மிகத்தீவிரமாகவே அமுல் படுத்தப்பட்டுள்ளது. இதில் சுவாரஷ்யம் என்னவென்றால் பாராளுமன்றத்தில் விவாதிக்கப் படாமல், பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் மறைமுகமாக குடியரசுத் தலைவரின் கட்டளை மூலம் இச்சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீவிரவாதிகள் என்று இனங் காணப்பட்டவர்கள் மட்டுமல்ல தீவிரவாதிகளுக்கு ஆதரவாளர் என்று வலுப்படுத்தாமலே தெரிந்தால் போதும் அவர்களையும் மூன்று மாதம் சிறையில் அடைக்கவும் இந்த ''போடோ'' வழிவகை செய்கின்றது.

சிறையில் அடைக்கப்பட்ட சு.ப.வீரபாண்டியனுக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டதும் இந்த ''போடோ'' சட்டத்தின் கீழான நடவடிக்கையேயாகும்.

தமிழுக்காக, தமிழுணர்வுக்காக, தமிழரின் விடுதலைக்காக குரல் எழுப்பும் அனைவரையும் நசுக்கும் தீவிர திட்டமாக ''போடோ'' விஸ்வரூபம் எடுத்து வருகின்றது.

ஜனநாயகத்தின் பத்திரிகைச் சுதந்திரத்தையே மென்று விழுங்கும் சட்டமாக இது விளங்குவதுதான் வருத்தத்திற்குரியது.

குற்றவாளி என்று தேடப்படும் ஒருவரை பத்திரிகையாளர் சந்தித்து பேட்டி எடுத்தால் அக்குற்றவாளி குறித்த அனைத்து தரவுகளையும் காவல்துறையினருக்கு தெரிவித்தாக வேண்டும் தவறினால் அந்த பத்திரிகையாளர் கைது செய்யப் படலாம் என்கிறது இந்த "போடோ" இதனால் இந்தியாவின் முக்கிய நகரங்களிலுள்ள முழு பத்திரிகையாளர் அமைப்புகளுமே இச்சட்டத்தை முழுமூச்சாக எதிர்த்து வருகின்றன.

இவ்வாறான தழிழக மக்களும் முன்னோடி அமைப்புகளுமே வெறுத்து ஒதுக்கும் சட்டத்தின் கீழ் தான் எமது விடுதலைப்போரின் நியாயத் தன்மையை துணிந்து சொல்லும் உணர்வாளர்களில் பழ.நெடுமாறனின் கைதும் எதிர்பார்க்கப்பட்ட ஒன்று.

ஏனென்றால் தீவிரவாதத்திற்கு எதிராக அமுல் செய்யப்படும் ஒவ்வொரு சட்டத்தின் போதும் இவ்வாறான உணர்வாளர்கள் கைது செய்யப்பட்டே வந்துள்ளனர்.

அரசியல்வாதிகள் மட்டுமல்ல அரசியலுக்கு அப்பாலுள்ள உணர் வாளர்களும் இதற்கு விதிவிலக் கல்ல பேராசிரியர் சு.ப.வீர பாண்டியனின் சிறைத்தண்டனை இதற்கோர் உதாரணம்.




இவ்வாறான உணர்வாளர்களை கைது செய்வதன் மூலம் இந்திய அரசு எதனைச்சாதிக்க முனைகிறது கூர்ந்து நோக்கும், போது தங்களது ஆட்சி அதிகாரங்களை தக்க வைப்பதற்கு தங்களுக்கு எதிரான தமிழ் உணர்வாளர்களை அடக்கி ஆளும் ஒரு அதீதமுயற்சி என்றே சொல்லலாம்.

இவ்வாறான முரண்பட்ட நடவடிக்கைளின் பின்னால் வேறு சக்திகளின் உந்துதல் இருப்பதாக எண்ணுவது கூட சரியானதாகவே அமையலாம்.

தடா காலாவதியானது போல "போடோ"வும் நிச்சயம் காலை வாரிவிடும் என்பது மட்டுமல்ல "தடா"வை விட மிக மோசமான தோல்வியையும் எதிர்ப்பையும் ''ஜெயா''வுக்கு ''போடோ'' தேடித்தரும். அந்தக் காலம் வெகு தொலைவிலில்லை என்பதை அம்மணி புரிந்து கொள்வரா...?


## 13வது ஆண்டு நினைவு அஞ்சலி

வயாவிளான்

**டாக்டர் (செல்வி) சிங்கநாயகம் கலாநாயகி**
B.S.M.S.யாழ். பல்கலைக்கழகம், கைதடி.



தாய் மடியில் 29 - 10 - 1958

இறை அடியில் 09 - 08 - 1989

ஏட்டிலே அடங்காது
உன் குணநலனை எழுதுவதற்கு
பாட்டிலே அடங்காது
உன் புகழ்பாடுவதற்கு
வீட்டிலே ஒளி இல்லை
எம் தீபம் அணைந்ததினால்
காட்டிலே எம் தேகம் நீறாகும் காலம்வரை
உன் நினைவு எம் மனதில் மாறவே மாறாது.

இல:528, வளர்நகர், யோகபுரம்.

தாய், சகோதரங்கள்

(1797)

## தவறிவிட்டது

த. அமிர்தநாதன் என்பவரின் மகளின் கைச்சங்கிலி ஒன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கும் கைதடிப் பிள்ளையார் கோவில டிக்கும் இடையில் 05-08-2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் யாழ்ப்பாணப் பல நோக்கு கூட்டுறவுச் சங்க தலைமைப் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானமும் வழங்கப்படும்.

த. அமிர்தநாதன். (சி.6991)

## பொதுக்கூட்டம்

அன்புடையீர்,

பளை இரட்டைக் கேணி அம்பாள் ஆலய புனருத்தாரணம் தொடர்பான பொதுக்கூட்டம் 2002.08.12ம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு திருவிழா உபயகாரர்கள், நித்திய பூசை உபயகாரர்கள், அடியார்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்.

(2315)



## பூநகரி - கிளிநொச்சி
## புதிய பேருந்துப்பணி



10-08-2002 இல் இருந்து தினமும் காலை 7.30 மணிக்கு பள்ளிக்குடாவில் இருந்து புறப்பட்டு ஆலங்கேணி, நல்லூர், குஞ்சுப்பரந்தன், உருத்திரபுரம் ஊடாக கிளிநொச்சிக்கு 9.30 மணிக்கு வந்தடையும். பின் அதே நாள் மாலை கிளிநொச்சியில் இருந்து புறப் பட்டு அதே வழியாக மாலை 5.00மணிக்கு பள்ளிக்குடா சென்றடையும். (சி-7025)

## நேர்நோக்கு

# மக்களின் ஆணைக்கு மாறாக....

சிறிலங்கா மற்றொரு தேர்தலைச் சந்திக்கத் தயாராகிக் கொண்டிருப்பதற்கான அறிகுறிகள் பலமாகவே தென்படுகின்றன. சிறிலங்காவின் பொருளாதாரநிலை அதனை மீட்பதற்கு இனப்பிரச்சினைக்குத் துரிதமாக தீர்வுகாண வேண்டிய அவசரதேவை எல்லாம் புறந்தள்ளப்பட்டு அதிகாரப் போட்டியில் சிறிலங்காவின் இரு பிரதான கட்சிகளும் குதித்துள்ளன.

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது ஊழல் மோசடி கைப்பை விவகாரம் போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தீவிர முரண்பாட்டு நிலையை இரு கட்சிகளும் இப்போது அடைந்துள்ளன.

இப்பொழுது ஆட்சிக் கவிழ்ப்புக் குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளமை பிரதான கட்சிகள் இரண்டும் ஒத்துப்போக முடியாத நிலையை எட்டியுள்ளமையை வெளிப்படுத்தியிருக்கிறது.

எனவே சனாதிபதியின் அதிகாரத்துக்கும் பாராளுமன்றத்தின் 'அதிகாரத்துக்கும் இடையேயான போட்டியாக இவ் இரு கட்சிகளின் முரண்பாடுகளும் வெளிப்பட்டிருக்கின்றன. அதாவது இவ் இரு அதிகாரச் சக்திகளில் எது பலம் வாய்ந்தது? என்ற கேள்விக்கு விடைகாணும் முகமான பலப்பரீட்சை அடுத்தவாரங்களில் இடம்பெறும் என எதிர்பார்க்கலாம்.

1978இல் சிறிலங்காவின் ''அரசியல் குள்ளநரி என்று வர்ணிக்கப்பட்ட ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆக்கத்தின் விளைவை சிறிலங்கா சந்தித்து நிற்கிறது. மாறி மாறி இரு கட்சிகளும் ஆட்சிக்கு வரும் அரசியல் சூழ்நிலை காணப்படும். சிறிலங்காவில் இவ்வாறானதொரு நெருக்கடி ஏற்படும் என ஜே.ஆர்.ஜெயவர்த்தன எதிர்பார்க்காமல் இருந்திருக்க முடியாது. இதன் காரணமாகவே அரசியலமைப்புச் சட்டத்தில் குழப்பமான சரத்துக்கள் உருவாக்கப்பட்டிருக்கலாம் என கருத இடமுண்டு.

இந்த அரசியலமைப்புச் சட்டத்தை ஆக்கியவர்களில் ஒருவர் எனக் கருதப்படும் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் தான் இந்த அரசியலமைப்பின் உருவாக்கத்துக்கு காரணமில்லை எனவும், ஆனால் இந்த அரசியலமைப்பில் ஒரு சரத்து வழங்கிய அதிகாரத்தை மறு சரத்து பறிப்பதை அவதானித்து அதனை இயலுமானவரை திருத்தியதே தனது பங்களிப்பு என்றும் கூறியிருந்தார்.

எனவே இப்பொழுது தோன்றியுள்ள அரசியலமைப்பு நெருக்கடி, பாராளுமன்றக் கலைப்பிலும் மீண்டும் ஒரு தேர்தலிலுமே கொண்டு சென்று நிறுத்தும். அதாவது சனாதிபதி சந்திரிகா தனது சில அதிகாரங்களை விட்டுக்கொடுக்க இணங்காத பட்சத்தில் ஆளும்கட்சி பொதுத் தேர்தலையே விரும்புகிறது. ஆனால் சனாதிபதியின் கட்சியும் எதிர்க்கட்சியுமான பொதுசன ஐக்கிய முன்னணி கடந்த இரு தேர்தல்களில் சந்தித்த தோல்விகளாலும் இன்று சமாதான முயற்சிகள் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு உள்ள சாதகமான சூழ்நிலையையும் கண்டு அச்சமடைந்து தேர்தலைச் சந்திக்கத் தயக்கம் காட்டுகிறது.

ஆனால் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களையும் இழந்து நிறைவேற்று அதிகாரத்தையும் பயன்படுத்தி ஏதாவது திரிசமன் செய்து பதவியைக் கைப்பற்றும் முயற்சிகளை அது மேற்கொண்டு வருகிறது. அது தோல்வியில் முடிந்தால் அதுவும் தேர்தலை தெரிவு செய்யக் கூடும். ஆனால் இந்த அதிகாரப் போட்டி காரணமாக மறக்கப்படப் போகும் விடயங்களாக அல்லது பின் தள்ளப்படப்போகும் விடயங்களாக இனப்பிரச்சினைத் தீர்வும் பொருளாதார நலிவுமே அமையப் போகின்றன.

ஆனால் இவை இரண்டுமே மக்களின் அக்கறைக்குரிய பிரச்சினைகளாக இருப்பதை இவ் இரு கட்சிகளுமே மறந்துவிட்டனபோல் தோன்றுகிறது. 1994இல் இனப்பிரச்சினைக்கு சமாதான வழி மூலம் தீர்வுகண்டு பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வுகாண ஆட்சியிலமர்த்தப்பட்ட சந்திரிகா அம்மையார் அதனைக் கைவிட்டு யுத்தவழியைப் பின்பற்றியதும் அதனால் ஏற்பட்ட பொருளாதார நலிவுமே மக்கள் அவரைப் புறக்கணிக்கக் காரணமாக அமைந்ததை அவரே ஏற்றுக் கொண்டுள்ளார். அதாவது சிறுபான்மையினரை அழைத்து அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அவர்களைப் புறக்கணித்ததே பொதுசன ஐக்கிய முன்னணியின் தோல்விக்கு காரணம் என அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் அவர் 1994இல் 62சதவீத வாக்குகளைப்பெற அவரது சமாதான கோஷத்தால் கவரப்பட்ட சிறுபான்மையினரின் ஆதரவும் காரணமாக இருந்தது. அதேவேளை இன்றைய ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கும் அவையே பெரிதும் காரணங்களாக இருந்தன.

ஆனால் மக்களின் ஆணையைப் புறக்கணித்த பொதுசன ஐக்கிய முன்னணி இப்பொழுது ஆட்சி அதிகாரத்தை இழந்து நிற்கையில் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்துள்ள ஐக்கிய தேசிய முன்னணியோ சமாதான முயற்சிகளில் இழுத்தடிக்கும் போக்கை கடைப்பிடித்து வருகிறது.

அதாவது சமாதானப்பாதையே மக்கள் ஆதரவை அதிகம் பெற உதவும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ள வேளையிலும் அப்பாதையில் செல்ல இவர்கள் தயங்குவதேன்?

இனவாதிகளின் கூச்சங்களால் இவர்கள் தடுமாற்றம் அடைகிறார்களா? அல்லது இவர்களின் அடிமனத்தில் இனவாதம் உள்ளதா? இதில் எதுவாயிருந்தாலும் ஒரு நாட்டின் தலைமைத்துவத்துக்கு இவை பொருத்தமான விடயங்கள் அல்ல.

வேலவன்

## படமும் தகவலும்



இந்தியாவின் ஜனாதிபதிப் பதவியில் இருந்து பணிக்காலம் முடிந்து வெளியேறும் ம.ச.நாராயணன் புதிதாக தேர்வு செய்யப்பட்ட ஜனாதிபதியை பிரிவுபசார விழாவில் வாழ்த்தி வரவேற்கிறார் -புதிய ஜனாதிபதி அணுவிஞ்ஞானியான K.R. அப்துல் கலாம் ஆவார்.



பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஸாரப் அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொலின் பவலை இஸ்லாமாபாத்தில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படம். இச்சந்திப்பு 28.07.2002 அன்று நடைபெற்றது. காஷ்மீர் விவகாரம் உட்பட இருதரப்பு உறவுகள் பற்றி இருவரும் பேசிக்கொண்டனர்.



எகிப்திய ஜனாதிபதி கொஸ்னி முபாரக் கெய்ரோவுக்கு வியஜம் செய்த லிபிய அதிபர் மம்மூர் கடாபியுடன் ஏதோ நகைச்சுவையான விடயம் பேசி சிரித்திருக்கும் காட்சி. இச்சந்திப்பின் போது இவர்கள் மத்திய கிழக்குப்பிரச்சினை உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்து உரையாடினர்



பங்களாதேஷ் வியஜம் செய்த பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வீஷ் முஷார்பவை பங்களாதே~ பிரதமர் காலிதா ஸியா வரவேற்றுக் கூட்டிச் செல்கிறார். மு~ரவ் அவர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது முன்னாள் பாகிஸ்தானின் கிழக்குப் பகுதியான - பங்களாஷே தனிநாடகப் பிரிந்த பின்னர் அங்கு விஜயம் செய்துள்ள முதலாவது பாக் இராணுவத் தலைவர் ஷபர்வீஷ், அவர்களேயாவார்.



அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நியூசிலாந்தின் பிரதமராக மீண்டும் தெரிவான ெலன் கிளார்க் பத்திரிகையில் தனது தேர்தல் வெற்றிபற்றி வந்த செய்திகளைப் புன்னகையுடன் வாசிக்கிறார். அடுத்த சில வாரங்களில் தனது புதிய கூட்டணி அரசை அவர் அமைப்பார்.

## வாத்தியார் வார்த்தை



சதிமூலமாக ரணிலை அகற்றிப்போட்டு எங்கட லக்ஸ்மன் கதிர்காமரையெல்லே பிரதமராக்க திட்டம் போடுகினம். எது... அல்லது ஆர் தான் விசுவாசமாக நன்றியுடன் இயங்கினம் எண்டு அதிகாரப் பெருமாட்டிக்கு தெரியாதே. ஆனால் பாருங்கோ வெளிநாட்டு சிவப்புச் சட்டக்காரர் சம்பதிப்பினமே...! எங்கட அநுரா பெருமகனார் தான் விட்டுக் கொடுப்பாரே...! ஏன் எங்கட மகிந்த ராஜபக்ஷ கூட இதைக் கேள்விப்பட்டா... சாரத்தையெல்லே மடிச்சுக் கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்திடுவார். லக்ஸ்மன் கதிர்காமர் தன்ன சுஷிலக்ஸ்மன் கடிர் ஹாமு' வாக மாத்திக் கொண்டால் ஒரு வேளை கதிரையைப் பிடிச்சாலும் பிடிக்கலாம் பாருங்கோ...

இப்பத்திரிகையானது கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது